REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 பெப்ரவரி 4 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 30 | Saturday 04, February, 2023 | 16பக்கங்கள் | 50/-


## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் இராஜினாமா

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள், தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர். இவர்கள் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு தங்களது இராஜினாமாக் கடிதங்களை

04

# 75ஆவது சுதந்திர தின விழா இன்று

## காலி முகத்திடலில் கோலாகலமாக பிரதான வைபவம்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஸாதிக் ஷிஹான்**

இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வு இன்று கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்படவுள்ளது.

தேசத்தின் அபிமானத்தை பாதுகாக்கும் வகையில் வழமை போன்று எவ்வித குறைபாடுகளுமின்றி கம்பீரமானதாகவும் எளிமையான முறையிலும் இந்த நிகழ்வை நடத்த சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை நடைபெறவுள்ள சுதந்திர தின பிரதான நிகழ்வின் அணிவகுப்பில் ஆறாயிரத்திற்கும் அதிகமான முப்படை வீரர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படை வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் பிரதமர், சபாநாயகர், முப்படைகளின் தளபதிகள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் பலரும் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஜப்பான், மாலைதீவு, பூட்டான், நேபாளம் ஆகிய ஏழு நாடுகளின் பிரதிநிதிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார, கல்வி அமைச்சர்கள், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பொதுநலவாய செயலாளர் நாயகம் ஆகியோர் வெளிநாட்டுச் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பிக்கின்றமை விஷேட அம்சமாகும்.

### முப்படைகளின் அணிவகுப்புகளுடன் எளிமையான ஏற்பாடு

இலங்கையின் வரலாற்றில் சுதந்திர தின பிரதான நிகழ்வு ஒன்றில் வெளிநாட்டு அமைச்சர்கள் பங்கு கொண்டு பார்வையிடுவது இதுவே முதற்தடவையாகும். இது இலங்கை உலக நாடுகளுடன் கொண்டுள்ள சிறந்த நட்புறவையும் பலத்தையும் காண்பிக்கின்றது.

சுதந்திர தின பிரதான நிகழ்வின் சகல ஏற்பாடுகளும் நிறைவுற்றுள்ள நிலையில் முப்படையினரின் இறுதி ஒத்திகைகளும் இடம்பெற்றன.

இம்முறை சுதந்திர தின பிரதான அணிவகுப்பில் முப்படையினர், பொலிஸ், பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த சுமார் 6,420 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களில் இராணுவத்தைச் சேர்ந்த 3,319 பேரும், கடற்படையைச் சேர்ந்த 867 பேரும், விமானப் படையைச் சேர்ந்த 695 பேரும் 336 பொலிஸார் மற்றும் 220 பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரும் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த 437 பேரும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 546 அடங்குவர்.

### இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஜப்பான் உட்பட ஏழு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் உட்பட பொதுநலவாய செயலாளரும் பங்கேற்பு

அத்துடன் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார்போஸ் ரொஷான் குணதிலக்க, வடமேல் மாகாண ஆளுநர் எட்மிரல் ஒப் தி பிளீட் வசந்த கரண்ணாகொட உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள்,

04

## இலங்கையை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைவோம்

### சுதந்திர தின செய்தியில் ஜனாதிபதி ரணில் அழைப்பு



75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இத்தருணம் எமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் சவாலானதாகவும் அமைந்துள்ளது.

கடந்த 75 ஆண்டுகளில் நாம் அடைந்தவற்றை விட இழந்தவையே அதிகம். அவ்வாறு இழந்தவற்றை மீளப்பெறுவதற்காக உலகப் பொருளாதாரத்தில் பாரிய பங்கை மீண்டும் பெறுவதற்கு தேவையான உத்திகளை வகுப்பதே இந்த ஆண்டு நமது முதன்மை நோக்கமாகும்.

அதற்கான புதிய பொருளாதார மற்றும் சமூக

04

## தாய்நாட்டுக்கு சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்குவோம்

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன வாழ்த்து



சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக எம் முன்னோர்கள் செய்த தியாகங்களை மனதில் வைத்து, எம் தாய்நாட்டுக்காக சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்க உறுதி பூணுவோமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற மிக முக்கியமான மைல் கல்லைக் குறிக்கும் 75ஆவது

04

## சுதந்திரத்துக்காக போராடிய வீரர்களை நினைவு கூருவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக மூன்று காலனித்துவ காலங்களை கடந்து 1948 பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் பெற்ற இலங்கை, இன்று எழுபத்தைந்தாவது ஆண்டை கொண்டாடுகிறது.

சுதந்திரம் பெறுவதற்கான பயணம் இரத்தமும், கண்ணீரும், வியர்வையுமான பயணமாகுமென்பதுடன் இந்த சுதந்திரத்தைப் பெறுவதற்காக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்த வீரர்களை இந்தத் தருணத்தில் மிகவும் பெருமையுடனும்

04



முன்னாள் சபாநாயகரும் நன்மதிப்புக்குரிய அரசியல்வாதியுமான கருஜயசூரிய, தேசத்துக்கு ஆற்றிய, சிறந்த சேவையைப் பாராட்டி 'ஸ்ரீலங்காபிமானி' கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (03) கருஜயசூரியவுக்கு பதக்கம் அணிவித்து விருது வழங்கி கௌரவித்தபோது...

மாவட்ட, பிரதேச செயலாளர்களூடாக

## ரூ.10 பில். ஒதுக்கீட்டில் இம்முறை 66,000 மெ.தொ. நெல் கொள்வனவு

### நிதியமைச்சு அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**


இம்முறை பெரும்போக நெல் கொள்வனவுக்காக அரசாங்கம் 10 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கவுள்ளதுடன் நெல் கொள்வனவுக்கான பொறுப்பை மாவட்ட மற்றும்

04

75 ஆவது தேசிய சுதந்திர தின விழா

## இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பு

### அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்து



இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்துடன் இணைந்ததாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் விஸ்தரிக்கவும் எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி

04

கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்திய

## தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### மாவை சேனாதிராஜா கடும் தொனியில் தெரிவிப்பு



கட்சிகளுக்குள் பிளவு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென கட்சியின் தலைவர்

04

சுதந்திர தின பிரதான வைபவம்

## நடைபெறும் பகுதியில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை

### மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று நடைபெறவுள்ள நிலையில் சுதந்திர தின பிரதான வைபவத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் காலிமுகத்திடல் பகுதிக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவான்

04

## கெமுனுவுக்கு மரண அச்சுறுத்தல்

### பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இளைஞர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்த சட்டத்தரணி ஒருவரால் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சிறைத் தண்டனையிலிருந்து நேற்று

04

நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டங்களின்

## ஒப்பந்தக்காரர்களின் நிலுவை சித்திரைப் புத்தாண்டுக்கு முன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் இதுவரை நிதி வழங்கப்படாத ஒப்பந்தக்காரர்கள் அனைவருக்குமான நிதியை எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் போக்குவரத்து அமைச்சில் நிர்மாணத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட விசேட பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் செயற்படும் மகநெகும நிர்மாணப் பணிகள் மற்றும் வீதி நிர்மாணிப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவர்களுக்கான நிதியை

04

## 13 ஐ நடைமுறைப்படுத்த ஜெய்சங்கரிடம் வலியுறுத்து

### நேரில் சந்தித்து அண்ணாமலை பேச்சு



**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை எந்த மாற்றமுமில்லாமல் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென பாஜக மாநில தலைவர்

04

உள்ளூராட்சித் தேர்தல் 2023

## தபால் மூல வாக்களிப்பு 22,23,24 ஆம் திகதிகளில்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆகிய தினங்களில் தபால் மூல வாக்களிப்பை மேற்கொள்ள முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதியன்று உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுமென

04

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 21ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 12



## குறள் தரும் சிந்தனை

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்

நேர்மை வழி அறியாத மூடர், மேற்கொண்ட செயலைத் தொடர முடியாமல், அதனால் அச்செயலும் கெட்டுத் தம்மையும் தண்டித்துக் கொள்வர்.

# நாட்டின் நலன்கள் மீது அக்கறை கொள்ள மனஉறுதி பூணுவோம்!

இலங்கைத் திருநாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் இன்று நாடெங்கும் மிகவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து இலங்கை விடுதலை பெற்ற 75 வருட நிறைவின் பவளவிழா இன்றாகும். எனவே இன்றைய சுதந்திரதினம் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

எமது தாயகம் 443 வருட காலமாக ஐரோப்பியரின் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டிருந்தது. எமது தேசத்தில் முதன் முதலாக கி.பி 1505 ஆம் ஆண்டில் ஐரோப்பியரான போர்த்துக்கேயர் காலடி வைத்தனர். அவர்கள் படிப்படியாக எமது தேசத்தின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி எமது மக்களை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தனர்.

அதன் பின்னர் ஐரோப்பியர்களில் அடுத்தவர்களான ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரத்தில் காலடி பதித்தனர். இலங்கை மக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட ஒல்லாந்தர் படிப்படியாக போர்த்துக்கேயரை இங்கிருந்து விரட்டியடித்தனர். இலங்கையை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்வதற்கு ஒல்லாந்தர் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அம்முயற்சி பயனளிக்கவில்லை. இலங்கை மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டதன் காரணமாக நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளும் முயற்சி ஈடேறவில்லை.

இலங்கையில் மூன்றாவதாகக் காலடி பதித்த ஐரோப்பியர்கள் ஆங்கிலேயராவர். அவர்களும் அதே பாணியையே கையாண்டனர். இலங்கை மக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு இந்நாட்டிலிருந்து ஒல்லாந்தரை விரட்டியடிக்கும் தந்திரமான முயற்சியில் ஆங்கிலேயர் ஈடுபட்டனர். அம்முயற்சி வெற்றியளித்ததனால், இந்நாட்டிலிருந்து ஒல்லாந்தர் வெளியேற வேண்டி ஏற்பட்டது.

ஆரம்பத்தில் இலங்கையின் கரையோரங்களை தம்வசப்படுத்தியிருந்த ஆங்கிலேயர், அதன் பின்னர் படிப்படியாக முழு இலங்கையையும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயர் எமது நாட்டை 130 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் ஆட்சி செய்தனர். 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் பிடியிலேயே எமது நாடு இருந்தது.

1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் காலடி பதித்தது தொடக்கம், 1948 இல் ஆங்கிலேயர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் வரை எமது நாட்டு மக்கள் அனுபவித்த அடக்குமுறைகளும் துன்பங்களும் கொஞ்சநஞ்சமல்ல. அதேசமயம் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து எமது தாயகத்தை மீட்டெடுப்பதற்காக உயிரையும் துச்சமென மதித்து போராடிய எமது தாயக வீரர்களையும் மறந்துவிட முடியாது.

அந்நியர்களை விரட்டியடித்து எமது தாயகத்தை மீட்டெடுப்பதற்காக எமது மண்ணின் மைந்தர்கள் மிகுந்த ஒற்றுமையுடனேயே போராடினர். இந்த ஒற்றுமை காரணமாகவே ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளால் எமது நாட்டில் தொடர்ந்தும் நிலைத்திருக்க முடியாமல் போனது. நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு எதிராக தாக்குப்பிடிக்க முடியாத நிலையிலேயே ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்நாட்டிலிருந்து வெளியேற வேண்டியேற்பட்டது.

எனவே எமக்குக் கிடைத்த சுதந்திரமானது ஒட்டுமொத்த மக்களின் ஒற்றுமையின் பலனாகக் கிடைத்த விடுதலை ஆகும். மக்களின் ஒற்றுமை இன்றேல் நாம் இன்றும் கூட அந்நியரின் பிடியிலேயே தொடர்ந்தும் இருந்திருப்போம் என்பதை மறந்து விடலாகாது. சுதந்திரக் காற்றை அனுபவித்தவாறு 75 ஆவது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இன்றை தினத்தில், எமது மூதாதையர்கள் புரிந்த அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

இலங்கைத் தேசமானது எந்தவொரு தனிஇனத்தவருக்கும் சொந்தமானதல்ல. இந்நாட்டின் பிரஜைகளான அனைத்து இன மக்களுக்குமே இந்நாடு தாய்நாடாகும். பேரினவாதம், சிறுபான்மையின வாதம் என்ற கருத்துகளுக்கே இடமில்லை. நாம் அனைவருமே இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்பதுதான் உண்மையாகும்.

எமது நாடு இன்று நெருக்கடியான காலகட்டமொன்றில் உள்ளதென்பது அனைவருக்குமே தெரிந்த உண்மை. உலகப் பெருந்தொற்றான கொவிட் தாக்கம் எமது நாட்டிலும் பெரும் தாக்கம் செலுத்தியதனால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கு உள்ளானது. ஓரிரு வருட காலத்தில் கொவிட் நெருக்கடியிலிருந்து நாம் மீண்டெழுந்து வந்ததும் பொருளாதாரம் மென்மேலும் அதலபாதாளத்துக்குச் சென்றது.

பொருளாதார நெருக்கடியை முன்னிலைப்படுத்தி மக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனையடுத்து பெரும் அரசியல் நெருக்கடி உருவானது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மாத்திரமன்றி அரசாங்கமே பதவி விலக வேண்டியேற்பட்டது. அதனையடுத்து நாட்டின் அரசியலமைப்பு விதிமுறைகளுக்கேற்ப, பாராளுமன்றத்தில் அதிகப்படியான உறுப்பினர்களின் ஆதரவுடன் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். அவரது தலைமைத்துவத்தின் கீழ் பொருளாதார நெருக்கடி படிப்படியாக சீரடைந்து வருகின்றது.

பொருளாதார நெருக்கடி சீரடைந்து விடுவதற்கிடையில் எதிரணியினர் தேர்தலைக் கோருகின்றனர். ஆனால் தேர்தலொன்றை நடத்தினால் இலங்கை படுபாதாளத்தினுள் வீழ்ந்து விடுமென்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற இன்றைய தினத்தில் நாட்டின் எதிர்கால நலன் குறித்தே மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டியுள்ளது. முதலில் எமக்குத் தேவையானது நம் தேசம் ஆகும். அதன் பின்னரே அரசியல் ஆதாயங்கள் குறித்து சிந்திக்க வேண்டும்!

editor.tkn@lakehouse.lk

# எமது தாய்த்திருநாட்டின் சுதந்திர வீரர்களை என்றும் நன்றியுடன் நினைவு கூருவோம்!

எமது தாய்த்திருநாடான இலங்கைத் திருநாடு சுதந்திரம் பெற்று இன்றோடு 75 ஆண்டு காலம் பூர்த்தியாகின்றது. சுதந்திர தினம் என்பது ஒரு நாட்டுக்கு மிக முக்கியமானதொரு தினம் ஆகும். சுதந்திரம் என்பதன் பொதுவான பொருள் என்னவென்று ஆராய்ந்தால் அந்நாட்டு மக்களின் அடிமை நிலை நீங்கி, மக்களின் உரிமைகள் மற்றும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதே ஆகும்.

பாடசாலைகள், வியாபாரத் தலங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டு மக்கள் அனைவரும் இந்த மாபெரும் தினத்தை அனுஷ்டிக்கின்றனர்.



வீடுகள், வாகனங்கள், வியாபார நிறுவனங்களில் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு இம்மாபெரும் தேசிய வைபவம் கொண்டாடப்படுகிறது.

1948.02.04 அன்று இலங்கைக்கு பிரித்தானிய ஆட்சியினால் சுதந்திரம் வழங்கப்பட்டது. எமது நாட்டின் அடிமைக் கோலம் நீங்கியது. மக்கள் அனைவரது அடிமைக் கோலம் நீங்கி அவர்களது கோரிக்கைகள், மக்களின் உரிமைகள் என்பன நிறைவேற்றப்பட்டன. எமது தாய்த்திருநாடான இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த அன்றைய சுதந்திரப் போராட்டத் தியாகிகளை, வீரர்களை, எம்மண்ணின் மைந்தர்களை அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. அவர்களை நினைவு கூருவதற்கும் இன்றைய சுதந்திர தினமானது ஏற்ற தினமாகவே அமைகிறது.



தாய்நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே அந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளிடம் காணப்பட்டது. அவர்கள் அன்று எடுத்த முயற்சியின் விளைவாகவே இன்று இலங்கை சுதந்திரமடைந்து ஒரு தனித்துவ நாடாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அன்றைய சுதந்திர வீரர்கள் தமக்குள் எந்தவித இனமத பேதமின்றி நாம் அனைவருமே இலங்கைத் தாயின் மைந்தர்கள் என்ற ரீதியில் போராடியதால் மட்டுமே சுதந்திரத்தை எமது நாட்டிற்கு பெற்றுத்தர முடிந்தது.

சுதந்திரப் போராட்டத் தியாகிகள் கொண்ட மனஉறுதி, ஒருமைப்பாடு, சுதந்திர தாகம் இவை அனைத்துமே இனி வரும் சந்ததியினருக்கும், ஒவ்வொரு இலங்கையருக்கும் இருக்க வேண்டியதாகும்.

மேலும் ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் தன் நாட்டை, தனது தாய் மண்ணை நேசிப்பவனாகவும் அதற்கு மரியாதை செலுத்துபவனாகவும் இருப்பது எமது நாட்டிற்கு பெருமை தரும் ஓர் விடயமாகும்.

இலங்கை மிகப்பழைமையான வரலாறு கொண்ட ஒரு நாடாகும். இயற்கை எழில் மிக்க ஒரு நாடாகவே அன்று முதல் இன்று வரை காணப்பட்டு வருகிறது.

இலங்கையில் இயற்கை எழிலோடு தேயிலை, தென்னை, இறப்பர் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையானது அக்காலத்தில் முக்கிய வர்த்தக கேந்திர நிலையமாகவும் செயற்பட்டு வந்தது. இங்கு இயற்கைத் துறைமுகங்கள் காணப்படுகின்றன. மேலும் இங்கு கறுவா, ஏலம் போன்ற பல வாசனைத் திரவியங்களும் காணப்பட்டமையால் அந்நியர்களின் பார்வை இலங்கை மீது பதிந்தது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர். ஆங்கிலேயரின் வருகையின் காரணங்கள் தங்களது மதத்தைப் பரப்புவதும் வர்த்தகமும் ஆகும். இலங்கையைக் கைப்பற்றினால் வர்த்தக நடவடிக்கைகளை செம்மையாக நிறைவேற்றலாம் என்ற எண்ணம் அவர்களிடம் காணப்பட்டது. அவர்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி நடத்தினர்.

இலங்கை கைப்பற்றப்பட்டதும் எமது நாடு அடிமைத்தனத்தினுள் சிக்கியது. மக்களின் கோரிக்கைகள், உரிமைகள் பிரித்தானிய அரசினால் மறுக்கப்பட்டன. மக்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். எமக்கு சுதந்திரமே கிடையாதா? என்று மக்கள் ஏங்கித் தவித்தனர்.

அந்த வேளையில்தான் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் தோன்றினர். இவர்கள் எழுத்து மூலம், பல பத்திரிகைகள் மூலம் சுதந்திரப் பிரசாரம் செய்தனர். இவ்வாறு இவர்கள் மேற்கொண்ட விடா முயற்சியின் பலனாக 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்றது.

இந்த சுதந்திர தினத்தை முப்படைகளின் மரியாதைகளோடு நாம் கொண்டாடி வருகிறோம். நாம் எமது நாட்டின் மீது அக்கறை கொண்ட நற்பிரஜைகளாக தேசபக்தி கொண்டவர்களாக என்றும் வாழ்வோமாக!

**விபுலமாமணி...**

# தனித்துவம் மிக்க தேசியக் கொடிக்கு அனைவரும் கௌரவம் வழங்குவோம்!

சுதந்திர தினமான இன்று எமது தேசியக் கொடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த எமது தேசத்துக்கு 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் கிடைத்தது. அடிமைத்தனத்தில் இருந்து எமது தேச மக்களுக்கு விடுதலை கிடைத்தது. அன்றைய தினம் தேசிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. எமது மக்கள் அனைவரும் தேசியக் கொடியினை, தம் வீடுகளிலும், வேலைத்தலங்களிலும், பொதுஇடங்களிலும், பாடசாலைகளிலும் பறக்கவிட்டு மரியாதை செய்கின்றனர்.

இன்று சுதந்திரதினத்தில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கம்பீரமாக தேசியக் கொடி பறப்பதனை அவதானிக்க முடிகின்றது ஒரு நாட்டில் பெருமையை பறைசாற்றும் சின்னமாக தேசியக் கொடி மதித்து கௌரவிக்கப்படுகிறது.

தேசியக் கொடியை ஏற்றும் போதும் அதனை கம்பத்திலிருந்து இறக்கும் போதும் ஒரு நாட்டில் தலைவருக்கு கொடுக்கப்படும் அதே அளவு மரியாதை தேசிய கொடிக்கு கொடுக்கப்படுகிறது. நாட்டின் முக்கிய உத்தியோகபூர்வ நிகழ்வுகளின் போது தேசியக் கொடி சகல அரசாங்க கட்டடங்களிலும் கம்பீரமாக பறக்கவிடப்படுகிறது.

இத்தனை சிறப்புவாய்ந்த தேசியக் கொடியானது தேசத்தில் சோகம் ஏற்படும் வேளையில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

முக்கிய நிகழ்வுகளின் போது தேசியக் கொடியை பயன்படுத்திய பின்னர் அவற்றை மிகவும் பாதுகாப்பாக இறக்கி நெறியாக மடித்து வைக்க வேண்டும். அடுத்த தேசிய நிகழ்வுகள் நடைபெறும் தினத்தில் அல்லது முக்கிய நிகழ்வுகளில் மாத்திரம் கம்பங்களில் பறக்க விட வேண்டும்.

தேசியக் கொடியை தலைகீழாக கவனக்குறைவின் நிமித்தம் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, இலங்கை சட்டப்படி ஒரு தண்டனைக்குரிய சட்டமாக கருதப்படுகிறது.

தேசியக் கொடியை பறக்கவிடும் போது அதன் ஒரு பகுதி தரையில் படுவதையோ வேறு ஏதாவது ஒரு பொருளின் மீது விழுவதையோ தடுக்க வேண்டும். இவ்விதம் தேசியக் கொடியை கட்டுவதும் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்.

அது போல் தேசியக் கொடிகளை அச்சிடும் போது அச்சகங்கள் அதன் இயற்கையான வர்ணங்களை மாற்றிவிடாமலும் அவதானமாக இருக்க வேண்டும். தேசியக் கொடியை பாதைகளின் வீதியின் குறுக்கே கட்டுவதும் அதனை அவமதிக்கும் செயலாக கருதப்படும்.

நாட்டின் சுதந்திரத்தின் சின்னமாக விளங்கும் தேசியக் கொடியை கௌரவிக்கக் கூடிய நற்பண்புகளை பாடசாலைகளில் அறிவுறுத்துவதற்கான திட்டங்களை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தேசிய கீதம் இசைக்கப்படும் போது நாம்அனைவரும் எழுந்து நின்று சிரம் தாழ்த்தி அதற்கு மாரியாதை செலுத்துவதைப் போன்று, தேசியக் கொடி கட்டடங்களில் ஆடம்பரமாக பறந்து கொண்டிருக்கும் போது அதனை அண்ணாந்து பார்த்து சிரம் தாழ்த்தி கௌரவித்தல் அவசியமாகும்.

75 ஆவது சுதந்திரதினமான இன்று நாட்டிலுள்ள எல்லா வீடுகளிலும் தேசியக் கொடியை பறக்கவிடுதல் அவசியமாகும். இதன்மூலமே இந்நாட்டு மக்கள் தற்போது அவர்களுக்கு கிடைத்திருக்கும் சுதந்திரக் காற்றை மகிழ்ச்சியோடு அனுபவித்து வருகிறார்கள் என்பதையும் எங்கள் நாட்டில் வலுவடைந்து வரும் தேசிய ஐக்கியத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கும்.

**நடராஜன் ஹரன்...**

# தேசிய கீதத்துக்கு உரிய மதிப்பளிப்பது இலங்கை மாதாவின் மக்களது கடமை

தேசிய கீதம் இசைக்கப்படும் போது அதற்கு மதிப்பளிப்பது இலங்கையர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இலங்கையின் இயற்கை வளம், அழகு என்பவற்றை எடுத்துக்கூறும் எமது தேசிய கீதம், இலங்கையர்களுக்கு இலங்கைத் தாயின் முக்கியத்துவம் பற்றியும் விபரிக்கிறது. நாட்டின் சகல பிரிவினருக்கும் இடையேயான ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் இப்பாடல், நாட்டுப்பற்றை ஊட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது.



எமது தேசிய கீதத்தைஇயற்றியவர் ஆனந்த சமரக்கோன் ஆவார். கவிஞர் ஆனந்த சமரக்கோன் ரவீந்திரநாத் தாகூரின் மாணவர். இவர் இந்தியாவில் தாகூருடன் தங்கிப் பாடம் படித்து 1939 இல் இலங்கை திரும்பினார்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் இறுதிக்காலத்தில், இந்திய விடுதலைப் போராட்டத்தின் செல்வாக்கினால், இலங்கையிலும் தேசிய விழிப்புணர்வு ஏற்பட்டது. தேசபக்திப் பாடல்கள் பல எழுதப்பட்டு பல்வேறு நிகழ்ச்சிகளின் போதும் பாடப்பட்டு வந்தன. பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சி முடிவுக்கு வந்து, இலங்கை விடுதலை பெற்றபோது, நாட்டின் இறைமையின் சின்னங்களாகத் தேசியக் கொடி, நாட்டுப் பண் என்பவற்றை உருவாக்கும் முயற்சி இடம்பெற்றது.

ஏற்கனவே புழக்கத்திலிருந்த தேசபக்திப் பாடல்களிலொன்றைத் தெரிவு செய்வதில் சிக்கல்கள் எழுந்தமையால், போட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்போட்டியில் சமர்ப்பிக்கப்பட்ட கீதங்களிலிருந்து ஒன்றைத் தெரிவு செய்வதற்காக நடுவர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

ஆனந்த சமரக்கோன் 1940 ஆம் ஆண்டு எழுதி ஏற்கனவே பரவலாகப் புழக்கத்திலிருந்த 'நமோ நமோ மாதா' என்று தொடங்கும் சிங்களப் பாடலும் தேர்வுக்காக நியமிக்கப்பட்டவற்றுள் அடங்கும். எனினும், பி. பி. இலங்கசிங்க, லயனல் எதிரிசிங்க என்னும் இருவரால் எழுதப்பட்ட ஸ்ரீ லங்கா மாதா பல யச மஹிமா என்று தொடங்கும் பாடல் தெரிவு செய்யப்பட்டு, 1948 பெப்ரவரி 4ஆம் தேதி இலங்கையின் சுதந்திர நாளன்று வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.

இதன் பாடலாசிரியர் இருவரும், தேசியகீதத் தேர்வுக்குழுவில் உறுப்பினராக இருந்ததால். இத்தெரிவு குறித்துச் சர்ச்சை ஏற்பட்டது. இதனால் இரண்டாவது, மூன்றாவது சுதந்திர தினங்களில் ஆனந்த சமரக்கோனின் பாடல் உத்தியோகபூர்வமற்ற முறையில் பாடப்பட்டு வந்தது.

1950 இல், அக்காலத்தில் நிதியமைச்சராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆலோசனையை ஏற்று ஆனந்த சமரக்கோனின் 'நமோ நமோ மாதா' என்று தொடங்கும் பாடலைத் தேசியகீதமாக ஏற்க முடிவு செய்யப்பட்டது.

1951 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி இதற்கு முறைப்படியான அங்கீகாரமும் கிடைத்தது. இப்பாடலுக்கான இசையும் ஆனந்த சமரக்கோன் அமைத்ததேயாகும். தொடர்ந்து வந்த நாட்டின் நான்காவது சுதந்திர தினத்தன்று இப்பாடல் முதன் முதலாக, கொழும்பு, மியூசியஸ் பாடசாலையைச் சேர்ந்த 500 மாணவ மாணவிகளால் பாடப்பட்டு வானொலி மூலம் நாடெங்கும் ஒலிபரப்பப்பட்டது.

இப்பாடல் பின்னர் பொருள் மாறுபடாமல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டில் தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி தமிழ்மொழிக்கு மொழிபெயர்த்தார்.

அவரது மொழிபெயர்ப்பின் அர்த்தம் வருமாறு:

சிறீ லங்கா தாயேநம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயேநம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 4 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.20
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் தை 21
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி









வலி. வடக்கில் 108 ஏக்கர் காணி விடுவிப்பு

# உத்தரவு பத்திரம் யாழ். அரசாங்க அதிபரிடம் இராணுவம் கையளிப்பு

## அமைச்சர் டக்ளஸ், அங்கஜன், சுமந்திரன் பங்கேற்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ்.வலி வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து சுமார் 108 ஏக்கர் காணி 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று விடுவிக்கப்பட்டது.

பலாலி அந்தனிபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் காணி விடுவிப்புக்கான உத்தரவு பத்திரத்தை யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதோட்ட, யாழ்.மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனிடம் கையளித்தார்.

காங்கேசன்துறை மத்தி (ஜே 234) 50.59 ஏக்கர், மயிலிட்டி வடக்கு (ஜே 246) 16.55 ஏக்கர் , தென்மயிலை (ஜே 240) 0.72 ஏக்கர், பலாலி வடக்கு (ஜே 254) 13.033 ஏக்கர், நகுலேஸ்வரம் (ஜே 226) 28 ஏக்கருமாக, 108 ஏக்கர் காணி மிக நீண்ட காலத்தின் பின்னர் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மீள்குடியேற்றத்திற்காக 130 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. மேலும், விடுவிக்கப்பட்டுள்ள 108 ஏக்கர் காணியில் 13 ஏக்கர் அரச காணியாகும். இந்த 04

இன்றைய 75ஆவது சுதந்திர தினத்தில்

# எமது உரிமைகள், சலுகைகளை பெற திடசங்கற்பம் கொள்வோம்



75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இத்தருணத்தில் நாட்டின் மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் தர வேண்டுமென்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருக்கும் இருக்கின்றது. இலங்கையில் கடந்த 74 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களை கண்டுள்ள இ.தொ.கா 75 ஆவது சுதந்திர தினத்தில் மலையக சமூகத்தின் மாற்றத்துக்காகவும் ஏற்றத்துக்காகவும் இடைவிடாது தம்மை அர்ப்பணித்து பணியைத் தொடர உறுதிகொள்ளுமென தனது சுதந்திர தின வாழ்த்து செய்தியில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பல்லின மக்கள் வாழ்ந்து வருகின்ற இந்த சுதந்திர நாட்டில் ஒரு நிரந்தர சமாதானத்தை அனைவருக்கும் இலங்கை தாய் தந்தருள எல்லாம்வல்ல இறைவனை பிராத்திக்கின்றோம்.

மலையகத்திலும் இந்த நாட்டின் இதர பகுதிகளிலும் வசித்து வரும் இந்திய வம்சாவளி 04

# ஓய்வு நிலை பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் இறைபதமெய்தினார்

## திங்களன்று கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நல்லடக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு உயர்மறை மாவட்ட ஓய்வு நிலை பேராயர் பேரருட்திரு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை நேற்று இறைபதமடைந்துள்ளார்.

நேற்றைய தினம் பேராயரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் மாலை 6 மணி வரை வைக்கப்பட்டதுடன் 04

# சுதந்திர தின விழாவில் பங்கேற்க மாட்டேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

இலங்கையின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கப்போவதில்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு, பணத்தை விரயம் செய்யும் சந்தர்ப்பங்களில் பங்குபற்ற வேண்டாமென ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவும் தெரிவித்துள்ளார்.

# ஒன்றிணைந்து பாடுபட்டாலே அடைந்த சுதந்திரம் அர்த்தபுஷ்டியானதாக மாறும்

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்



"நலிவடைந்துள்ள சகல துறைகளும் கட்டியெழுப்பப்பட்டு, பொருளாதார ஸ்திரமிக்க நாடாக எமது நாட்டை உயர்த்த வேண்டியது இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் கடமை என்பதை இந்நாளில் நினைவூட்டிப் பார்ப்பதே சிறந்தது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தனது 75வது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.மேலும் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான கரங்களைப் பலப்படுத்தி, அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி, நாட்டை சுபிட்சமானதும் வளமிக்கதுமான நாடாக மாற்றியமைக்க வேண்டும் என்பதே அனைவரினதும் குறிக்கோளாக அமைய வேண்டும்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து நாடு விடுபட்டிருந்தாலும், இலங்கையர் என்ற சுய அடையாளத்தை நிலைநிறுத்த வேண்டியுள்ளது. அந்தச் சுய அடையாளத்தை நிலைநிறுத்துவதற்காக, அர்த்தபுஷ்டியுடன் பணியாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.



அபிவிருத்தி லொத்தர் சபை 2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமான இலாபத்தை பதிவு செய்துள்ளது.அதைத் தொடர்ந்து 3000 மில்லியனுக்கான காசோலையை ஜனாதிபதி நிதியத்துக்கு வரவு வைக்குமாறு ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம், அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நரகல கையளிப்பதை காணலாம்.

# இலங்கைக் குடியரசு மேலும் செழிப்புற வேண்டும் -சவூதி தூதுவர்



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 75வது சுதந்திர தினத்தின் நிமித்தம் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத்தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி நல்வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துக் செய்தியில், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும், இலங்கை அரசு மற்றும் அதன் நேசமிகு குடிமக்களுக்கும் தனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ள அவர் இலங்கைக் குடியரசு மேலும் முன்னேற்றமும் செழிப்பும் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் ஹெரோயினுடன் பொலிஸ் உத்தியோகஸ்தர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அரியாலை பகுதியில் 130 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை ஹெரோயின் போதைப்பொருளை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் 29 வயதான பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சுதந்திர தினத்தையிட்டு

# ஜனாதிபதி பொது மன்னிப்பில் 588 கைதிகள் விடுதலை

அரசியலமைப்பின் 34ஆவது சரத்தில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 588 கைதிகளுக்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி வீரவில சிறைச்சாலையில் அதிகளவான 78 கைதிகளும், தல்தென சிறைச்சாலையில் 67 கைதிகளும், மஹர சிறைச்சாலையில் 66 கைதிகளும், பல்லேகல சிறைச்சாலையில் 49 கைதிகளும், பல்லன்சேன சிறைச்சாலையில் 41 கைதிகளும், அங்குனகொலபலஸ்ஸ சிறைச்சாலையில் 38 கைதிகளும் 29 சிறைச்சாலையில் இருந்து 588 கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர். கைதிகள் அனைவரும் இன்று (04) விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இவர்களில் 352 கைதிகள் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்காக புனர்வாழ்வுக்காக குறிப்பிடப்பட்ட காலத்தின் பாதியை கடந்துள்ளதால் விடுதலை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளனர். 04

களனி பல்கலைக்கழகம்

**கலாநிதிகளுக்கான வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்தல்**

**(Confucius Institute)**

களனி பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் வெளிநாட்டு கலாநிதிகளுக்கான (பெண்கள்) விடுதி வசதிகளை வழங்குவதற்கு, தளுகமவில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஒரு கிலோமீற்றருக்குள் அமைந்துள்ள வீடொன்றை, குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்த வீடு குறைந்தபட்சம் இணைந்த குளியலறையுடன் வளிச்சீராக்கப்பட்ட இரு (02) படுக்கையறைகளுடன் கூடிய சமையலறை உபகரணங்கள் உட்பட சகல வீட்டு உபகரணங்கள், நீர், மின்சாரம், தொலைபேசி வசதிகள் அடங்கிய முழுமையான வீடாக இருத்தல் வேண்டும்.

குறித்த தகைமைகளைக் கொண்ட வீட்டு உரிமையாளர்கள் கீழ்க்காணும் தகவல்களை, அத்தகவல்கள் உள்ளிடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கலாநிதிகளுக்கான வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்தல்" என்று குறிப்பிட்டு, பொறியிட்டு உதவிப்பதிவாளர், பொது நிர்வாகப்பிரிவு, களனிப் பல்கலைக்கழகம், தளுகம, களனி என்ற முகவரிக்கு 2023.02.28ம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் கிடைக்கச் செய்யுமாறு அறிவித்துக்கொள்கிறேன்.

1. குத்தகைக்கு விடுவதற்கு உத்தேசிக்கும் வீட்டின் முகவரி
2. அவ்வீட்டில் இருந்து தளுகமவில் அமைந்துள்ள களனிப் பல்கலைக்கழகத்திற்கு உள்ள தூரம் (கி.மீ)
3. வழங்குவதற்கு எதிர்பார்க்கும் வீட்டு உபகரணங்கள்
4. எதிர்பார்க்கும் மாதாந்த குத்தகை தொகை/வாடகை தொகை
5. வீட்டில் உள்ள அறைகளின் எண்ணிக்கை
6. உரிமையாளரின் பெயர்/முகவரி/தொலைபேசி இலக்கம்
7. உறுதியின் பிரதி மற்றும் வரைபடத்தின் பிரதி அரச மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு பெறுமதிக்கு அமைவாக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்தல் இடம்பெறும்.

**பதிவாளர்**
**2023.02.02**


# முஸ்லிம் லீக் வாலிப முன்னணி எச்.எம்.நஸீர் காலமானார்

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் முன்னாள் உதவிச் செயலாளரும் மன்னார் சிலாபத்துறை கமநல சேவை பிரதேச உத்தியோகத்தருமான எச்.எம்.நஸீர் நேற்று காலமானார்.

சிறிது காலம் சுகயீனமுற்றிருந்த எச்.எம்.நஸீர், கரவனல்ல வைத்தியசாலையில் நேற்று நண்பகல் காலமானார்.

சிலாபத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கன்னத்தொட்டையில் வசித்து வந்தார்.ஆசிரியை பறுதாவின் கணவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையுமான இவரது ஜனாஸா இன்று காலை 10 மணிக்கு கன்னத்தொட்டை ஜும்ஆப் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்படும்.

# வவுனியாவில் கன மழை. 63 பேர் பாதிப்பு; இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதம்



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் நேற்று பெய்த கடும் மழை காரணமாக 23 குடும்பங்களை சேர்ந்த 63 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

திருநாவற்குளம், மகாறம்பைக்குளம், வெங்கலச்செட்டிக்குளம், பிரமநாலங்குளம் உட்பட மாவட்டத்தின் பல்வேறு 04

# உடப்புஸ்ஸலாவ கதிர்வேலாயுத ஆலய மஹாகும்பாபிஷேகம்

உடப்புஸ்ஸலாவ நகரில் அமைந்துள்ள சென்மாக்றெட் தோட்ட ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா நாளை ஞாயிற்றுகிழமை நடைபெறவுள்ளதையொட்டி

ஆலய பிரதமகுரு குகபிரதிஸ்டாபதி சத்தியோஜாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ த.தேவேந்திரன் குருக்கள் தலமையில் நேற்று காலை சுபநேரத்தில் கிரியாரம்பம் நடைபெற்றது. இதை தொடர்ந்து இன்று சனிக்கிழமை விசேட பூஜைகளுடன் காலை 10 மணி முதல் மாலை 05 மணிவரை பக்தர்களின் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணி முதல் 11.30 மணிவரை அமையபெறும் சுப முகூர்த்த வேளையில் பக்தஅடியார்கள் புடைசூழ வேத பாராயணங்களுடன் ஆலய பிரதம குரு குகபிரதிஸ்டாபதி சத்தியோஜாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ த.தேவேந்திரன் குருக்கள் தலைமையில், பிரதிஸ்டாதிலகம் சிவாகம சிரோண்மணி கிரியாதத்தவநிதி சிவஸ்ரீ தியாக சங்கராஜா சிவாச்சாரியார் நல்லாசியுடன் கங்கையிலிருந்து புனித நீர் யானை ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு மஹாகும்பாபிஷேக குடமுழுக்கு நடைபெற உள்ளது.

இதை தொடர்ந்து பக்த அடியார்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன் மகேஸ்வர பூஜையுடன் பகல் 12.30 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

**ஆ.ரமேஸ்**

## ஒப்பந்தக்காரர்களின் நிலுவை ...

செலுத்துவது தாமதமாகியுள்ள நிலையில் அவ்வாறான நிறுவனங்களுக்கு எதிர்வரும் தமிழ், சிங்கள புதுவருடத்திற்கு முன்பதாக அனைத்து நிதியையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் பெரும் நிதி நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. நிர்மாணப் பணிகள் தாமதமாகி நிலுவைப் பணத்தை செலுத்துவதிலும் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

அந்த வகையில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு உரிய நிதியை பெற்றுக் கொடுப்பதற்காக திறைசேரி மூலம் 11.6 பில்லியன் ரூபா நிதி திறைசேரி பிணைமுறி மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அந்த நிறுவனங்களுக்கான அனைத்து நிலுவைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க நேற்றைய தினம் வழங்கப்பட வேண்டிய நிதியில் 40 வீதத்தை அனைத்து நிறுவனங்களினதும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்பதாக மேலும் 30 வீதத்தையும் ஏனைய 30 வீதத்தை தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு முன்பதாக வழங்கி நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

## ரூ.10 பில். ஒதுக்கீட்டில்...

பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இம்முறை நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் நெல் கொள்வனவு செய்யப்பட மாட்டாதென்றும் நெல் கொள்வனவுக்கான பொறுப்பை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் இம்முறை 66,000 மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் மூலம் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாதம் 10 கிலோ அரிசி என இரண்டு மாதங்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக் கட்சி...

மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் கூடவுள்ள இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு அங்கத்துவ கட்சியாக இருந்து எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஒரு புதிய அணுகுமுறையை பரிந்துரை செய்துள்ளது. அதாவது இந்தத் தேர்தல், வட்டார அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையிலும் பிரதிநிதிகளை தெரிவு செய்கின்ற ஒரு புதிய முறையை நாங்கள் பரிந்துரை செய்திருந்தோம். அந்த பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக தேர்தலில் களமிறங்க தீர்மானித்ததாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

## தபால் மூல வாக்களிப்பு...

தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது. இதற்கிடையில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டுமென்று கோரியும், நடத்தக் கூடாதென கோரியும் உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் மீதான தீர்ப்பு எதிர்வரும் 10 ஆம் திகதியன்று உயர் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்படவுள்ளது.

## கெமுனுவுக்கு ...

முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கைது செய்யப்பட்டமைக்கும் தமக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வசந்த முதலிகே விளக்க மறியலில் வைக்கப்பட்டமைக்கும் தமக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாதென சஞ்சு சமரசிங்க என்ற 'மோட்டிவேஷன் அப்பச்சி' தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## 13 ஐ நடைமுறைப்படுத்த...

அண்ணாமலை, இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை பாஜக மாநில தலைவர் அண்ணாமலை புதுதில்லியில் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லி சென்று பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவை வியாழக்கிழமை காலை அவரது இல்லத்தில் சந்தித்த அண்ணாமலை, தமிழக அரசியல் நிலவரம் தொடர்பாக எடுத்துரைத்துள்ளதுடன் மேலும், சில முக்கிய தலைவர்களை அண்ணாமலை சந்தித்துள்ளார். இதனைத்தொடர்ந்து வியாழக்கிழமை மாலை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை அண்ணாமலை சந்தித்து, இலங்கை தமிழர் பிரச்சினை மற்றும் தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதித்தார். இதன்போது, இலங்கையில் 13 ஆவது சட்டத் திருத்தத்தை எந்த மாற்றமுமில்லாமல் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கை மனுவை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் கையளித்தார்.

## பொதுப்பயன்பாடுகள்...

கையளித்துள்ளனர்.

மொஹான் சமரநாயக்க மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் உதேனி விக்கிரமசிங்க ஆகியோர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

## உத்தரவு பத்திரம் யாழ்.... 03ஆம் பக்க தொடர்...

காணி யாழ்.வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து 05 இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கும் 75 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

## எமது உரிமைகள், ... 03ஆம் பக்க தொடர்...

மக்கள் அவர்களது உரிமைகள், சலுகைகள் எல்லாவற்றிலும் விடுதலை பெற்ற மக்களாக இருக்க வேண்டும் என்பது எமது வாஞ்சை. "பாதுகாப்பான தேசம் சுபீட்சமான நாடு" என்பதற்கமைவாக, எமது கட்டுக்கோப்பை மேலும் பலப்படுத்தி, இதன் வாயிலாக எமக்குரிய உரிமைகள், சலுகைககள் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்கு இந்த 75ஆவது சுதந்திர தினத்தில் நாம் திடசங்கற்பம் எடுத்துக் கொள்வோம்.

## ஓய்வு நிலை பேராயர்... 03ஆம் பக்க தொடர்...

அதனையடுத்து மறைந்த ஆயரின் பிறந்த ஊரான பிலபிட்டியவுக்கு பூதவுடல் எடுத்துச் சென்று அங்கு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று மதியம் 12 மணிக்குப் பின்னர் பேராயரின் பூதவுடல் அனுராதபுரம் புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை பேராயரின் பூதவுடல் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்திற்கு எடுத்து வரப்பட்டு மக்கள் அஞ்சலியின் பின்னர் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித லூசியாள் பேராலயத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் அனைத்து ஆயர்களின் பங்கேற்புடன் இடம்பெறும் திருப்பலி பூசையின் பின்னர் பேராயரின் பூதவுடல் அங்கு நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

## ஜனாதிபதி பொது மன்னிப்பில்... 03ஆம் பக்க தொடர்...

அந்த பொதுமன்னிப்புக்கு தகுதியான கைதிகளின் எண்ணிக்கை நேற்று (03) பிற்பகலில் நிறைவடையாத பட்சத்தில், இந்த தொகை இன்னும் இருக்கலாமென சிறைத்துறை தெரிவித்துள்ளது. அந்த கைதிகள் வரும் நாட்களில் விடுதலை செய்யப்படுவர்.

## வவுனியாவில் கன மழை... 03ஆம் பக்க தொடர்...

பகுதிகளில் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதுடன் சில வீதிகளும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது. இதேவேளை அறுவடைக்கு தயாராக இருந்து நெற்பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேலும் வவுனியா நகரில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரையான 24 மணித்தியாலயத்தில் 189.2மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நானுஓயா பஸ் விபத்து: தொடர்புடைய சாரதி பிணையில் விடுதலை

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியின் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற கோர பஸ் விபத்து தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பஸ் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு நுவரெலியா நீதவான் நீதிமன்றில் (02) அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட போது சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் ஒரு இலட்ச ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது. அந்நபர் ஹொரண, குடு உதுவ பகுதியைச் சேர்ந்த 62 வயதுடையவராவார்.

நுவரெலியாவிலிருந்து பாடசாலை மாணவர்களுடன் கொழும்பு நோக்கிச்சென்ற பஸ் வேன் ஒன்றுடனும்முச்சக்கர வண்டி ஒன்றுடனும் மோதி விபத்துக்குள்ளானது.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் வேனில் பயணித்த 6 பேரும் முச்சக்கரவண்டி சாரதியுமாக 7 பேர் உயரிழந்ததுடன் 53 பேர் காயமடைந்தனர்.

## இருதரப்பு உறவுகளை மேலும்...

ஜோ பைடன் தெரிவித்துள்ளார். 75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கை மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி அந்த வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்த , அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்ட், அமெரிக்க ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். இரு நாட்டு மக்களின் அமைதியான, வளமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்துக்காக, அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால நட்புறவையும் தொலைநோக்கையும் தொடர்ந்து பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜோ பைடன் இந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு இணையாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கும் 75 ஆண்டுகள் நிறைவடைவதாகவும், இந்த நீண்டகால உறவு பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் சுபீட்சத்தை மேம்படுத்த உதவும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். காலநிலை மாற்றத்துக்கு எதிராகப் போராடுவது, மனிதக் கடத்தலைத் தடுப்பது மற்றும் பாதுகாப்பான, சுதந்திரமான மற்றும் திறந்த இந்துபசுபிக் பிராந்தியத்தை பேணுவது உள்ளிட்ட விடயங்களில் வரலாறு முழுவதும் உலகளாவிய பாரிய சவால்களை இரு நாடுகளும் எதிர்கொண்டதாக ஜோ பைடன் நினைவு கூர்ந்துள்ளார்.

## சுதந்திரத்துக்காக போராடிய...

மரியாதையுடனும் நினைவுகூர வேண்டும். அவர்களின் ஆன்மா இந்த நாட்டின் மகத்தான வரலாற்றில் வெல்ல முடியாத ஒரு குறிப்பு என்பதை நான் மிகுந்த மரியாதையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

இலங்கையர்களாக ஒன்றிணைந்து இந்த மண்ணின் சுதந்திரத்துக்காக தம்மை அர்ப்பணித்த வரலாற்று முன்னோர்கள் என்றென்றும் நினைவுகூரப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. சுதந்திரப் போராட்டத்தை திரும்பிப் பார்க்கும்போது, ஒற்றுமையாக ஒன்றிணைந்து முன்னேற வேண்டும் என்பதே வரலாறு கூறும் படிப்பினையாகும். ஆனாலும், இலங்கை சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பெற்ற சுதந்திரத்தை தேசிய, அங்கத்துவம், கல்வி, மதம் என்பவற்றில் அர்த்தமுள்ளதாக்க நாம் தவறிவிட்டோம். ஒரு நாடு என்ற வகையில் சாதனைகள், பின்னடைவுகள் மற்றும் தோல்விகள் கடந்த 75 ஆண்டுகளாக நமக்கு அனுபவத்தை வழங்குகின்றன.

குறிப்பாக இலங்கை சமீபகாலமாக அடைந்துள்ள பொருளாதார மந்தநிலை, நாட்டின் வரலாற்றில் மிகவும் சோகமான மற்றும் பாரதூரமான நிலைமையாகும், மேலும் முறையான முற்போக்கான வேலைத்திட்டங்களின்றி அதிலிருந்து மீள்வது கடினம்.

குறுகிய இனவாதம் மற்றும் வகுப்புவாதத்தில் சிக்கிக் கொள்வது உண்மையான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான வழி அல்ல, உண்மையான சுதந்திரத்தை அடைய அனைவருக்கும் சம உரிமையுள்ள குடிமக்களாக நாம் ஒன்றுபட வேண்டும். அனைத்து குடிமக்களின் தேவைகளையும் சுயமரியாதையையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புடன், வேற்றுமையில் ஒற்றுமையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். அந்த வகையில் ஒரு காலனித்துவத்திலிருந்து விடுபடுவது மட்டுமன்றி, இந்நாட்டு மக்கள் சாதிக்க வேண்டிய பல விடயங்களும் உள்ளன.

அதற்காக ஒவ்வொரு நொடியையும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற உன்னத எதிர்பார்ப்புகளுடன் முழு நாட்டுக்கும் உறுதியான, பெருமைமிக்க சுதந்திர தினமாக அமைய வாழ்த்துகிறேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

## நடைபெறும் பகுதியில் ...

திலின கமகே நேற்று தடை உத்தரவொன்றை பிறப்பித்துள்ளார்.

இன்றைய தினம் நடைபெறவுள்ள சுதந்திர தின நிகழ்வுகளுக்கு தடை ஏற்படுத்தும் வகையில் அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் மற்றும் சிவில் அமைப்புகள், எதிர்க்கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதுடன் அந்த ஆர்ப்பாட்டங்களை தடை செய்யுமாறு கோரி கொழும்பு கோட்டை ,கொம்பெனி வீதி மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையங்கள் நீதிமன்றத்திடம் விடுத்துள்ள வேண்டுகோளை கவனத்திற் கொண்டே கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிபதி மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதற்கிணங்க காலி முகத்திடலுக்கு பிரவேசிக்கும் சுற்றுவட்டம், யானை குளிக்கும் சுற்று வட்டம், மாக்கர் மாவத்தை, கடற்பிரதேச மாவத்தை, உள்ளிட்ட வீதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் உட்பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

எவ்வாறெனினும் அமைதியான ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள முடியும் என்றும் நீதவான் பொலிசாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## இலங்கையை கட்டியெழுப்ப...

சீர்திருத்த திட்டத்தை நாட்டில் தற்போது முன்வைத்துள்ளோம். பெருமைமிகு தேசமாக இருந்த இலங்கையரின், கடந்த கால பலத்தை மீண்டும் மீட்டெடுத்து, நவீன தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைந்து, போட்டி நிறைந்த உலகப் பொருளாதாரத்தின் புதிய இலக்குகளை நோக்கி நாம் துரிதமாக நகர வேண்டும்.

2023 இல் 75 ஆவது சுதந்திர தின விழாவுடன் ஆரம்பமாகும் இப்புதிய மறுசீரமைப்புப் பயணத்தை, 2048 ஆம் ஆண்டு 100ஆவது சுதந்திர தின விழா வரை, மாறாத அரச கொள்கையை நிலைநிறுத்துவதே எமது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். நூற்றாண்டு சுதந்திர தினத்தின் போது நாட்டு மக்களின் அனைத்து அடிப்படைத் தேவைகளும் பூர்த்திசெய்யப்பட்ட, உயர் பொருளாதார எழுச்சியைக் கொண்ட, உலகளாவிய மூலதனத்தின் மையமாக விளங்கும் புதிய இலங்கையை உருவாக்க முடியுமென்று நான் திடமாக நம்புகிறேன். அதற்காக, இன்றே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அச்சமின்றி முன்னெடுப்பேன் என உறுதியளிக்கிறேன். அதற்கு உங்கள் நம்பிக்கையையும் ஆசிகளையும் நான் எதிர்பார்க்கிறேன்.

அணிசேரா என்றபோதும் தீர்க்கமான பலமுள்ள, பின்வாங்காத, காலநிலை மாற்றத்திற்கு தீர்வு காண்பதுபோன்ற நிலையான இலட்சியங்களுடன் கூடிய புதிய வெளியுறவுக் கொள்கையை தற்போது செயல்படுத்தி வருகின்றோம்.

உலகின் அனைத்து நாடுகளுடனும் இணைந்து செயற்படக்கூடிய இலங்கையர் என்ற வகையில் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

உலகம் முழுவதும் வாழும் இலங்கை மக்கள் எமது நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கி வரும் பங்களிப்பை நான் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். நமது இளைஞர் சமூகம் புதிய தொழில் முயற்சிகளை தொடங்குவதற்கான திட்டங்களை கொண்டிருந்தாலும் மூலதன பற்றாக்குறை பிரச்சினையாக உள்ளது.

எமது இளம் சந்ததியின் அத்தகைய திட்டங்களில், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு முதலீடு செய்யும் திறன் உள்ளது.

எனவே, இந்த நாட்டில் உள்ள இளைஞர் சமூகமும், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் புதிய வர்த்தகத் திட்டங்கள் மூலம் இலங்கையின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப பாடுபடுவார்களென நான் நம்புகின்றேன்.

## தாய்நாட்டுக்கு சிறந்ததோர்...

சுதந்திர தினத்தை இன்று நாம் கொண்டாடுகிறோம்.

எங்களில் பெரும்பாலானவர்கள் சுதந்திர இலங்கையில் பிறந்த தன் பாக்கியத்தை அங்கீகரிக்கின்ற வகையிலும், இந்த முக்கியமான மைல்கல்லை அடைந்திருப்பதையிட்டு எமது தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் பெருமிதத்துடனும் இந்த நிகழ்வைக் கொண்டாடுகிறோம். 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்து காலனித்துவ ஆட்சியின் கீழ் வாழ்ந்து அனுபவித்த வேதனைகள் பற்றியும் எமது முன்னோர்கள் எமக்கான சுதந்திரத்தை பெற்றுத் தருவதற்காக மேற்கொண்ட போராட்டங்கள் பற்றி எண்ணிப் பார்ப்பதற்கும் இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

இன்று நாம் எமது சுதந்திரத்தைக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அதற்காகப் போராடியவர்களுக்கும், எமது நாட்டுக்காக ஒரு தொலைநோக்குப் பார்வையை கொண்டிருந்தவர்களுக்கும், அதற்காகத் தம்மையே தியாகம் செய்தவர்களுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

கடந்த 75 ஆண்டுகளில் தீவிரவாதிகள் மற்றும் பிரிவினைவாதி களிடம் இருந்து கடினமாக வென்றெடுக்கப்பட்ட சுதந்திரத்தை நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் இதேபோன்ற தியாகங்களைச் செய்த ஆயுதப் படைகளைச் சேர்ந்த துணிச்சலான உறுப்பினர்களுக்கும் நாம் எமது மரியாதையை செலுத்த வேண்டும்.

ஒரு சுதந்திர தேசமாக நாம் பல முன்னேற்றங்களை அடைந்து ஒரு இளைஞர் படையை கட்டியெழுப்பினோம், எமது மக்களுக்கு சிறந்த சுகாதார மற்றும் கல்விச் சேவைகளை வழங்கினோம். எவ்வாறாயினும், அண்மைக்காலமாக எமது நாடு பல்வேறு சவால்களை எதிர்கொண்டு பொருளாதார பின்னடைவுக்கு முகம்கொடுத்துள்ளது. தன்னிறைவையும் உணவுப் பாதுகாப்பையும் அடைய விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் அரசாங்கம் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சவால்களை முறியடித்து பொருளாதார ரீதியில் நல்ல முன்னேற்றகரமான ஒரு தேசத்தை உருவாக்குவதே எமது உண்மையான விருப்பமாகும்.

## 75 ஆவது சுதந்திர தின விழா இன்று...

பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், இராஜதந்திரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு சுதந்திர தின நிகழ்வை சிறப்பிக்கவுள்ளனர்.

சுதந்திர தின பிரதான நிகழ்வை முன்னிட்டு கொழும்பு காலி முகத்திடல் உட்பட அதனை அண்டிய பிரதேசம் எங்கும் தேசிய கொடிகள் மற்றும் வர்ண கொடிகள் பறக்கவிடப்பட்டு அந்தப் பிரதேசம் விழாக் கோலம் பூண்டு காணப்படுகின்றன. அத்துடன் விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலை 8.15க்கு ஜனாதிபதியின் வருகையை தொடர்ந்து சுதந்திர தின பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

தேசிய கொடியை சம்பிரதாய முறையில் ஏற்றி ஜனாதிபதி சுதந்திர தின பிரதான நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் ஜனாதிபதிக்கு மரியாதை நிமிர்த்தம் 21 பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதலாவது தேசிய சுதந்திர தின வைபவம் ஆகும்.

இம்முறையும் வழமைப் போன்று தேசிய கீதம் சிங்களம், தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் மாணவ, மாணவிகளால் பாடப்படவுள்ளதுடன் ஜயமங்கள காதாவும் இசைக்கப்படவுள்ளன. இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை, தேசிய இளைஞர் படை, ஆகிய வற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் ஆறாயிரத்திற்கும் அதிகமான படை வீரர்களின் மரியாதை அணிவகுப்பும், முப்படைவீரர்களின் சாகசங்களும் பார்வையாளர்களை கவரும் வகையில் இடம்பெறவுள்ளமை விஷேட அம்சமாகும்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண, பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, பொலிஸ் மாஅதிபர் சந்தன விக்ரமரட்ண ஆகியோரும் சுதந்திர தின நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் மேற்கு பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தீபால் புசெல்ல சுதந்திர தின முப்படை பிரதான அணிவகுப்பின் கட்டளை தளபதியாக செயற்படவுள்ளார்.

கடற்படையை பிரதிநிதித்துவப்படுத்தி கொமொடோர் ராஜப்பிரி சேனசிங்கவும், சீனக்குடா விமானப் படைத் தளத்தின் தளபதி எயார் கொமொடோர் தேசப்பிரிய சில்வாவும் தலைமை வகித்து விஷேட வாகனத்தில் அணிவகுத்து செல்லவுள்ளனர்.

இராணுவ அணிவகுப்பில் இராணுவத்தின் ஆயுதங்கள், கனரக கவச வாகனங்கள், யுத்த தளபாடங்கள், உபகரணங்கள். ஆட்டிலரி, பீரங்கி தாங்கிய வாகனங்கள், மோப்ப நாய்கள் பொறியியல் உபகரணங்கள் உட்பட யுத்த காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் இராணுவம் பயன்படுத்தும் பல்வேறு வாகனங்களும் அணிவகுத்து செல்லவுள்ளன.

அதேபோன்று கடற்படையின் பல்வேறு வகையான பிரிவினர் அணிவகுப்பில் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களில் கடற்படையின் விஷேட படகு பிரிவினர், மீட்பு பிரிவினர், மெரைன் படைப் பிரிவினர், பெண்கள் படைப்பிரிவினர் இதில் அடங்குவர்.

அதேபோன்று விமானப் படையினரும் தரையில் தமது பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி விமானப் படையினரால் பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் அணிவகுத்து செல்லவுள்ள அதேசமயம் கொழும்பு காலி முகத்திடல் மற்றும் அதனை அண்டிய வான் பரப்பில் விமானப் படையின் பல்வேறு ரக விமானங்கள், ஹெலிகொப்டர்கள், தாக்குதல் விமானங்கள் தேசிய கொடியை பறக்க விட்ட நிலையில் வானில் சாகசங்களை காண்பித்த வண்ணம் அணிவகுத்து பறந்துச் செல்லவுள்ளன.

எப்7, ரக தாக்குதல் விமானங்களும், எம்ஏ 60, வை12, பிரி6 ரக விமானங்களும், பெல் 412, பெல் 212, எம்ஐ 17 ரக ஹெலிகொப்டர்களுமே கொழும்பு வான் பரப்பில் தமது சாகசங்களை காண்பிக்கவுள்ளது. பொலிஸாரின் அணிவகுப்பிற்கு மேலதிகமாக பொலிஸாரின் மிகவும் பழைமை வாய்ந்ததும் பாரம் பரியதுமான பாண்ட் வாத்தியங்களுடன் அணிவகுத்து செல்லவுள்ளனர். அத்துடன் இம்முறையும் மரியாதை அணிவகுப்பில் பொலிஸ் குதிரைப் படையினரும் கலந்து கொள்ளவுள்ளனர். பொலிஸாரை தொடர்ந்து பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரும் அணிவகுத்து செல்லவுள்ளனர். இது தவிர சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசிய மாணவர் படையணியினர் மற்றும் தேசிய இளைஞர் படையணியினரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


அதேபோன்று, யுத்தத்தின்போது அங்கவீனமுற்ற படை வீரர்கள் மற்றும் ஓய்வு பெற்ற படை வீரர்களும் விசேட வாகனத்தில் அனுபவித்து செல்ல உள்ளனர்.

அத்துடன் தேசத்திற்காக அர்ப்பணித்தவர்களை நினைவு கூரும் வகையில்

காலி முகத்திடல் கடலில் நங்கூரமிடப்பட்டுள்ள இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கஜபாகு கப்பலிலிருந்து கப்பலில் இருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படவுள்ளமை விஷேட அம்சமாகும்.

இதேவேளை சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பௌத்த, இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய மத தலங்களில் சமய வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன.

# அக்குறணை மண்ணில் சமூகப் பணியில் ஒளிக்கீற்றாக திகழும்
# அப்துல் காதர் முஹமட் நௌஸார்



## முதன் முதலில் புகைப்படத்துறையை அக்குறணைக்கு கொண்டு வந்தவர்

**அக்குறணை மண்ணில் புகைப்படத் துறையை முதன் முதலில் அறிமுகப்படுத்தி அத்துறையில் தனித்துவமிக்க பெயரை பதிவு செய்துள்ளவர் தான் அக்குறணை மேசன் ஸ்டூடியோவின் ஏக உரிமையாளர் அப்துல் காதர் முஹமட் நௌஸார். 1977 ஆம் ஆண்டு முதல் இத்துறையில் ஈடுபட்டுள்ள இவர் மக்களின் மனதில் 'பிளேஸ்' ஆக ஒளிக்கீற்றாக திகழ்கிறார். ஏனென்றால் கமராவும் ஸ்டூடியோவும் அவர் வாழ்க்கையாகிவிட்டதால். அதுமட்டுமல்லாமல் மக்களுடைய நலனில் அக்கறையுடன் செயற்படும் ஒரு முக்கியமானவராவார். இந்த நௌஸார் அக்குறணை எங்கும் பரந்துபட்ட பணிகளில் சமூகப் பணியாற்றி வருபவர்.**

**இவர் தான் கடந்து வந்த பாதையை தினகரனுடன் பகிர்ந்து கொண்ட போது....**



### குடும்பம் பின்னணி?

நான் 1960 இல் அக்குறணை துனுவில வீதியில் பிறந்தவன். மல்வானஹின்னயில் வளர்ந்தவன். அக்குறணை பாலிகா பாடசாலைக்கு அருகாமையில் அப்புகஹாமுல்ல வராசின்னயில் திருமணம் முடித்துள்ளேன். ஐந்து பிள்ளைகளில் நான்கு பிள்ளைகள் திருமணம் முடித்துள்ளார்கள்.நான் பொது வேலைகளில் ஈடுபடும் போது குடும்பத்தினர் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். பின்பு நான் அதனைச் சமாளித்துக் அக்காரியத்தை செய்யும் போது முழு ஒத்துழைப்பையும் வழங்குவார்கள்.

என்னுடைய தாயின் பெயர் நசூஹா பீபி, எனது தாய் எனது ஒரு வயதிலேயே இறந்து விட்டார். தந்தையின் பெயர் அப்துல் காதர். தந்தை ஒரு வியாபாரி. அவர் வியாபாரியாக இருந்த போதிலும்



அவரால் வியாபாரத்தில் மீண்டெழுந்து நிற்க முடியாமல் போயிற்று. யாருடைய உதவியும் ஆதரவும் அவருக்கு கிடைக்கவில்லை.வீட்டில் ஐந்து பேர். இருப்பதற்கு இடம் போதாது. அவர் கஷ்டத்துடன் இருந்தார். ஆதலால் அவர் எங்களைப் படிப்பிப்பதில் சிரமங்களை எதிர்நோக்கினார்.இவ்வாறான சூழலில் தான் இறையடி எய்தினார்.

என் தாயை நான் இதுவரை காலத்திலும் "உம்மா" என்று சொல்லி அழைத்ததில்லை. ஒரு வயதிலேயே தாய் இறந்து விட்டார். எனக்கு தாயினுடைய அன்பு, பாசம், இரக்கம் என்பன எவையும் கிடைக்கவில்லை.



### கல்வி வாழ்க்கை தொடர்பில்?

நான் ஆரம்ப பாடசாலையை மல்வானஹின்ன பாடசாலையில்தான் கற்றேன். பின்பு அதில் இருந்து அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையிலும் கற்றேன். அப்பொழுது எங்களது வீடு சிறியது. படிக்கக் கூடிய சூழல் இல்லை. அஸ்ஹர் பாடசாலைக்கு அருகில் உள்ள ஹாஜியார் ஒருவரின் இல்லத்தில் ஓர் அறையில் வாடகையில் இருந்து படித்தேன். படிக்கும் போது ஒரு வியாபாரம் செய்தேன். முன்னாள் கிராம உத்தியோகஸ்தர் சுஹைர் ஹாஜியார் அவர் இப்போது சுகயீனமுற்று இருக்கிறார். அல்லாஹ் அவருடைய உடல் ஆரோக்கியத்திற்கு நல்லருள் புரிய வேண்டும். அவர் இந்தி



யாவில் இருந்து கொண்டு வந்த சாரிகளை வாங்கி இன்னுமொருவரிடம் வியாபாரம் பண்ணுவதற்காக நான் கொடுத்தேன்.

அதில் 50 சாரிகள் இருக்கும். அது கிட்டத்தட்ட 15,000 ரூபா வரும். அந்த சாரி அனைத்தையும் கொடுத்தவர் எடுத்துச் சென்று விட்டார். நான் அப்பொழுதுகடனைஅடைப்பதா? அல்லது படிப்பதா? என்ற ஒரு தர்மசங்கடமான நிலை தோன்றியது.

அப்பொழுது தங்கக் கடையில் வேலை செய்வதற்கு குடும்பத்தில் இருந்து அழைப்பு வந்தது. அப்படி வருவதென்றால் எனக்கு கடன் செலுத்த வேண்டி இருக்கிறது. அதற்கு பணம் உதவி செய்வீர்களா எனக் கேட்டேன். அதற்கு இணக்கம் தெரிவித்தார்கள். அதன் பின்பு காட்டகஸ்திகிலிய சென்றேன். அங்கு தங்க வியாபாரம் செய்து கொண்டு செல்லும் போது புகைப்படத் துறையிலும் ஆர்வம் காட்டினேன். அதிலும் வெற்றியைக் கண்டேன். அங்கும் பிரபல்யம் அடைந்தேன்.

அப்பொழுது ஒரு தீர்மானம் எடுத்தேன். சாரி வாங்கின கடனையும் கொடுத்து விட்டு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கி ஓட வேண்டும் என்ற ஆசை இருந்தது. அக்குறணை துனுவில வீதியைச்



சேர்ந்த முஹமட் சலீம் காட்டகஸ்திகிலியவுக்கு பைசிக்கள் ஒன்றை எடுத்து வந்தார். அதற்கு விலை விசாரித்து அதனைப் பெற்றுக் கொண்டு ஊர் வந்தேன். அதன் பின்பு ஓர் இலக்கை அடையும் வரையிலும் நான் 'டீ' குடிப்பதில்லை என்றதொரு மன வைராக்கியம் இருந்தது. கடனையும் செலுத்த வேண்டும் ஒரு பைசிக்களையும் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் செலவைக் குறைத்து இலக்கை அடையும் வரையிலும் முயற்சி செய்து அந்த மோட்டார் சைக்கிளையும் பெற்றுக் கொண்டேன்.

அதன் பிரகு அக்குறணை சென்று வியாபாரம் செய்யலாம் என்ற எண்ணத்தோடு அக்குறணைக்கு



வந்தேன். 1977 இல் 150 ரூபாவுக்கு கடையொன்றை கூலிக்கு வாங்கினேன். அவர்கள் இதுவரைக்கும் திருப்பிக் கேட்கவில்லை.

### புகைப்படத்துறையின் ஆர்வத்திற்கான காரணம்?

எங்கள் வீட்டில் பெட்டிக் கமரா ஒன்றை வைத்திருந்தேன்.அதை எடுத்து சரி செய்து கொண்டு கண்டிக்கு சென்று அதற்குப் போடக் கூடிய புகைப்படச் சுருளை வாங்கி வருவேன். அதில் புகைப்படம் எடுத்து மற்றவர்களுக்கு இலவசமாகக் கொடுப்பேன். அப்படி இலவசமாக கொடுத்தவர்களில் சிலர் பெரும் செல்வந்தர்களாக இருக்கிறார்கள். முன்னாள் மல்வானஹின்ன கிராம உத்தியோகஸ்தர் ஜமால்தீன் அவர்களிடம் என்னுடைய ஆரம்ப கால புகைப்பட வரலாற்றைச் சற்று வினவினால் தெளிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அக்குறணையில் "சுப்பர் கலர் சென்றர்" என்ற பெயரில் புகைப்பட சுருள்களை சேகரிக்கும் நிலையம் ஒன்றைத் திறக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அது சிறிய இடத்தில் 150 ரூபாவுக்கு கூலிக்கு எடுத்து திறந்தேன். அதற்கு மின்சாரம் இல்லை. தண்ணீர் இல்லை. எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இருக்கவில்லை. 12 x 12 அடி என்ற அளவிலான ஓர் இடத்தை அக்குறணை அஸ்னா ஜும்ஆப் பள்ளியை நிர்மாணிப்பதற்காக பங்காற்றியவரான சவ்லதி ஹாஜியார் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

என்னுடைய சகோதரிகள் இந்த இடத்தை மறைப்பதற்கு வீட்டில் உள்ள உடைகளை எல்லாம் தந்தார்கள். ஓலைப் பண்ணையால் மேல் கூரையை மறைத்தேன். படியில் ஏறுவதற்கு பலகையிலான ஏணிப்படியையும் கொண்டு வந்து வைத்தேன். அதுவும் கட்டம் கட்டமாகத்தான் இந்த இடத்தை செப்பனிட்டு வந்தேன். வீட்டிலுள்ள பொருட்



களை கொண்டு வந்து அழகுபடுத்தினேன். மின்சாரம் வசதிகளையும் பெற்றேன் அதற்குப் பின்பு இன்னும் மேலதிகமாக வசதிகளைக் கொண்ட இடமாக மாற்றியமைத்துள்ளேன். இப்படியெல்லாம் செய்து ஓர் பரிபூரணமான இடமாக என்னுடைய சொந்தப் பணத்தில் செய்துள்ளேன். இந்த இடத்தைத் தந்துதவியவர்கள் இன்னும் திருப்பிக் கேட்கவில்லை. அதனைத் தந்த ஹாஜியார் மரணம் அடைந்து விட்டார். அதற்குப் பின்பும் யாரும் ஒரு வார்த்தை கேட்கவில்லை. குறித்த ஹாஜியாரின் மூன்றாவது பரம்பரையில் அவர்களுடைய மகளும் மருமகனும் இருக்கிறார். இதுவரையில் அவர்களும் கேட்கவில்லை.

"அவர்கள் 150 ரூபா இல்லாமல் ஒரு வருடத்திற்கு 250 கூட்டிக் கொடுங்கல், நீங்கள் தான் கட்டினீர்கள், நீர் மின்சாம் எல்லாம் எடுத்து இருக்கின்றீர்கள். 250 கூட்டித் தந்தால் போதும். நீங்கள் செய்து கொண்டு செல்லுங்கள்" என்று மட்டும் கூறினார்கள். ஆனால் இதுவரையிலும் என்னிடம் அவர்கள் கேட்கவில்லை. இப்பொழுது மூன்றாவது பரம்பரை போய் கொண்டு இருக்கிறது. எவ்வாறாயினும் இன்றைக்கு இந்த இடம் அவர்களுக்கு உரித்துடையதே! திடீரென்று அவர்கள் வந்து கேட்டால் நான் கொடுக்கின்ற நிலையில் இல்லை. இதை நானும் அவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் விளங்கிக் கொள்ளும் தன்மையையும் நல்ல மனப்பான்மையையும் கொண்டவர்கள். அதற்காக நான் இதை எடுத்துக் கொள்ளப் போவதுமில்லை. நல்ல மனசாட்சியுடன் நாங்கள் இருவரும் பழகி வருகிறோம். அவர்கள் எந்த இடையூறுகளையும் செய்யவில்லை. ஆனாலும் அவர்களுக்கு கூடுலான வாடகையொன்றை மேலும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இன்னும் எனக்கு இருக்கிறது. 150 ரூபாவில் இருந்து இன்று வரைக்கும் பெரியளவில் கொடுத்து வருகின்றேன்.

### இந்த தொழிலில் நீங்கள் வெற்றி பெறக் காரணம்?

தான் செய்யும் தொழிலின் மீது முதலில் அன்பு இருத்தல் வேண்டும். அந்த வகையில் பிரியத்தோடு



சோர்வின்றி செயற்படத் தொடங்கினேன். கொழும்பில் அதிகம் தொடர்பு இருந்தமையால் கொழும்பிலுள்ள ஸ்டூடியோக்காரர்கள் சிங்கப்பூர் நாட்டுக்கு அனுப்பித்தான் வர்ணப் புகைப்படங்களைப் பெற்றுக் கொள்வார்கள். அப்பொழுது அவர்களிடமிருந்து அந்த சிங்கப்பூர் முகவரியைப் பெற்றுக் கொண்டு வந்து வர்ணப் புகைப்படத்தைக் கழுவதற்காக நானும் சிங்கப்பூர் நாட்டுக்கு அனுப்பி எடுத்துக் கொடுப்பேன். ஒரு வாரத்தில் சிங்கப்பூரில் இருந்து புகைப்படம் வந்து விடும்.

உண்மையில் அக்குறணை மக்களை நான் மறக்க முடியாது. பாராட்டியாக வேண்டும். அவர்கள் எப்போது கண்டிக்கு போக மாட்டார்கள். ஸ்டூடியோ என்றால் நௌஸார்தான் மேசன் என்றால் நௌஸார் தான். அவர்கள் என்னோடு அன்பு இரக்கம் பாசமிக்கவர்கள். அதேபோன்று இன்று வரைக்கும் நானும் அவர்களுடன் இரக்கம் அன்பு பாசமிகுந்தவனாக இருந்து வருகின்றேன்.யார் வந்து புகைப்படத்தைக் கேட்டாலும் அவர்களுடைய முகவரியைப் பெற்று வீட்டுக்குச் சரி கொண்டு போய் கொடுத்து விட்டு




வருவேன். இரவு என்று பார்க்காமல் எத்தனை மணிக்கு வந்து புகைப்படம் கேட்டாலும் புகைப்படம் பிடிக்க வேண்டும் என்று கோரினாலும் சரி நானோ பிள்ளைகளோ சென்று அந்த உதவியை அக்குறணை மக்களுக்கு செய்து கொடுப்பேன். இது அக்கறணை மக்களுக்குத் தெரியும்.

தேவையானளவு எல்லா வகையிலான விளம்பரங்களையும் செய்துள்ளேன். வானொலி, பத்திரிகை போன்ற சகலதிற்கும் விளம்பரம் செய்வேன். சிலர் வீணாக செலவு செய்கிறேன் என்று கூறுவார்கள். ஆனால் விளம்பரம் இல்லாமல் வியாபாரம் இல்லை. விளம்பரம் கட்டாயம். அதற்குச் சந்தை வாய்ப்பு அவசியம். அது என்றைக்கு வீண் இல்லை. வீடுகள் கட்டும் போது 5, 10 தட்டுகள் கட்டுவது என்பதுதான் வீண். இதன் மூலம்தான் ஐந்து பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். தொழிலின் மீது வெறுப்பு இல்லை. என்னிடம் தற்போது 15 பேர் வரையிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

இவை மட்டுமல்ல பல்வேறு வியாபாரங்களும் செய்து வருகின்றேன்.



### நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள்

சில சவால்களையும் எதிர்நோக்கியுள்ளேன். மரம் ஒன்றுஸ்டூடியோவில்வீழ்ந்தது.அதனால்ஸ்டூடியோ முற்றாக சேதம் ஏற்பட்டது. அதைப் போன்று தண்ணீரைத் திறந்து விட்டார்கள். அதிலும் ஒரு பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் அல்லாஹ் எங்களைக் கைவிடவில்லை. கடைசியாக வந்த வெள்ளப் பெருக்கிலும் எனக்கு எந்த வித அனர்த்தங்களும் வரவில்லை. என்னை அல்லாஹ் பாதுகாத்தான்.



### ஸ்டூடியோ தொழில் பற்றி கற்றுக் கொண்டது தொடர்பாக கூற முடியுமா?

எனக்கு புகைப்படம் பிடிக்கத்தான் தெரியும். ஆனால் அதனைக் கழுவத் தெரியாது. ஒருவரை கண்டிக்குப் போய் ஒருவரை அழைத்து வந்தேன். அவரிடம் நான் படிக்கும் போது ஒரு வேலைக்காரனாக இருந்தேன்.

புகைப்படம் கழுவுவதற்கு பழகினாலும் கழுவதற்கு எமது ஸ்டூடியோவில் இடமில்லை. அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்று செய்தேன். இதற்கு சகோதரிமார்களுடைய ஆதரவும் பங்களிப்பும் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நான் நன்றி கூர கடமைப்பட்டுள்ளேன். யாருடைய உதவியும் இல்லாமல் புகைப்படத்தைப் பிடித்து தானே கழுவிக் கொள்ளுகின்ற திறனையும் ஆற்றலையும் பயிற்சியையும் பெற்றுக் கொண்டேன்.

இவ்வாறு செய்து கொண்டு செல்லும் போது பல விதமான நெருக்கடிகளும் பிரச்சினைகளும் இருந்தன. ஆனால் மன தைரியத்தை கைவிடவில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மனதில் வெறுப்பு வரவில்லை. ஒரு கரையைக் காணுவோம் என்ற வகையில் மிகுந்த ஆர்வத்தோடு செயற்பட்டேன்.

ஆளடையாள அட்டை ஆட்பதிவுத் திணைக்களத்திலும் குரவரவு குடியகல்வு திணைக்களத்திலும் ஒன்லைன் மூலமாக பதிவு செய்துள்ளார்கள். எங்களது ஸ்டூடியோவில் புகைப்படம் பிடித்தால் அங்கு சென்று அலுவலக விடயங்களை நிறைவு செய்து கொள்ளலாம்.



### கிடைத்த விருதுகள் தொடர்பில்

மத்திய மாகாண சபையின் கைத்தொழில் வர்த்தக அமைச்சால் சிறந்த முயற்சியாளர் விருதுகளை 15 தடவை பெற்றுக் கொண்டேன். அமெரிக்காவில் புகைப்பட கல்வி கற்கை நிறுவனத்தினால் புகைப்படம், சந்தைப்படுத்தும் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கையில் இருந்து விண்ணப்பம் செய்தேன். அதற்கு 200 டொலர் செலுத்தித்தான் தான் விண்ணப்பம் செய்ய வேண்டும். புகைப்படத்தில் பல்வேறு தொழில் நுட்ப முறையில் விநியோக வியாபாரத்தை நடைமுறைப்படுத்தியிருந்தேன். குடை, பேக் போன்ற பல புதிய காட்சிப் பொருட்களை செய்தேன். இவைகளை அமெரிக்காவுக்கு அனுப்பினேன். அதில் 107 பேரில் 7 ஆவது போட்டியாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். இப்போட்டியில் தெரிவுக்காக மத்தியஸ்தர்களாக பணியாற்றியவர்களுடைய எழுத்துக் குறிப்பை எனக்கு அனுப்பி இருந்தார்கள். அது ஒரு பிரமிக்கத்தக்கதாக இருந்தது. அந்த கடிதத்திற்கு அமெரிக்கா செல்வதற்காக ஐந்து வருட விசா தொடர்ச்சியாக வழங்கப்பட்டது. 1995 – 2011 வரையிலும் விருதுகள் கிடைத்துள்ளன. நாடளாவிய ரீதியில் நட்சத்திர விருதுகள், தேசிய மட்டத்திலும் மூன்று விருதுகள் பல்வேறு பட்ட விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளேன் என்று குறிப்பிட்டுக் கூறலாம்.

கலந்துரையாடல் **தியாகு**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி. போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உற்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு 19 மி.மீ. கருங்கல் கொள்வனவு செய்தல்

இவ் அதிகார சபையில் உள்ள திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான 19 மி.மீ. கருங்கல்லை மூன்று மாத தேவைப்பாட்டிற்காக பெற்றுக்கொள்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | அளவு | கேள்விப்படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) |
|---|---|---|---|
| PRDA/WP/PRO/2023/06 | 19 மி.மீ. அளவான கருங்கல் வழங்குதல் | $300M^3$ | ரூ. 1,000.00 + வெட் |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.02.03 முதல் 2023.02.17 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்வி படிவக் கட்டணத்திற்கு உற்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்காக கேள்வித் தொகை ரூபா. 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.02.20 மு.ப. 11.00 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொலைபேசி இல. : 011-5676903**

---

தோட்ட மக்களுக்கு அளவை நிறுவையில் அநீதி:

# தேயிலை தளிர் அளவீடு செய்யும் தாராசு அதிகாரிகளால் பறிமுதல்

**நுவரெலியா மாவட்ட செயலகம் நடவடிக்கை**

**கொட்டகலை தினகரன், ஹற்றன் சுழற்சி நிருபர்**

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும், பொகவந்தலாவ மேல்பிரிவு தோட்ட பகுதியில் தேயிலை கொழுந்து அளவீடு செய்யும் டிஜிட்டல் தாராசு, அதிகாரிகளால் நேற்று முன்தினம்(02) பறிமுதல் செய்யப்பட்டது.

நுவரெலியா மாவட்ட செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரிகளால் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் பொறுப்பதிகாரி ஆரியபால தெரிவித்தார்.



பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்திற்கு கீழ் இயங்கும் பொகவந்தலாவ மேல் பிரிவு தோட்டப்பகுதியில் தொழிலாளர்கள் பறிக்கும் பச்சை தேயிலை கொழுந்தை அளவீடு செய்து கொண்டிருந்த போதே இச்சுற்றிவளைப்பை அதிகாரிகள் மேற்கொண்டனர். இதன்போது கைப்பற்றப்பட்ட டிஜிட்டல் தாராசு இறுதியாக 2020ம் ஆண்டு 12ம் மாதம் முத்திரை பதிக்கப்பட்டு காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.



தோட்ட நிர்வாகமானது ஒரு தொழிலாளி பறிக்கும் 15 கிலோ கிராம் பச்சை தேயிலை கொழுந்துக்கு 03 கிலோவும் 10 கிலோகிராமுக்கு 02 கிலோகிராமும் 05 கிலோவுக்கு 01 கிலோகிராம் தேயிலை கொழுந்தை பிடித்துக் கொள்வதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் மேற்படி தாராசினை ஹற்றன் நீதவான் முன்னிலையில் முன்னிலைபடுத்தப்பட்டு பொகவந்தலாவ தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக வழங்கு தொடர உள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்)**

## மீகொட ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பொலிஷ் செங்கல் கொள்வனவு செய்தல்

## கேள்வி இலக்கம் – PRDA/WP/PRO/2023/08

இவ் அதிகாரசபையில் கீழேயுள்ள கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு இவ்வாறான வழங்கல்கள் மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| S/No | Item Description | Quantity | Bid Bond | |
|---|---|---|---|---|
| | | | Cash (RS) | Bank/Insurance Bond) |
| 1 | Wire Cut Brick (பொலிஷ் செங்கல்) | 103,000 | 31,000.00 | 62,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.02.03 முதல் 2023.02.16 நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை கேள்விப்படிவக் கட்டணம் ரூ.1150.00 இற்கு (அதிகார சபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்காக கேள்விப் பிணையை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேலே குறிப்பிடப்படும் பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. மேற்படி பெறுகைகளுக்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரரால் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச்சான்றிதழை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.02.17 பி.ப.2.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல.59, சென்செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12,**
**தொ.பே - 0115676903.**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## டயர் மற்றும் டியூப்களைக் கொள்வனவு செய்தல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2023/05**

இந்த அதிகார சபையின் கனரக வாகனம் மற்றும் இலகுரக வாகனங்களுக்குத் தேவையான டயர்களைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| S/No | Vehicle Type | Tyre size | Quantity | | | Bid Bond | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Tyre | Tube | Flap | Cash (Rs) | Bank / Insurance Bond |
| 1 | Low Bed | 1000 x 15 | 4 | 4 | 4 | | |
| 2 | Low Bed | 1000 x 20 16 PR | 4 | 4 | 4 | | |
| 3 | Motor Cycle | 100 x 90 x 17 | 12 | - | - | | |
| 4 | Motor Grader | 1100 x 20 Lug | 6 | 6 | 6 | | |
| 5 | Tractor | 12.4/11 x 28 | 2 | 2 | - | | |
| 6 | Bachoe Loader | 12.5 x 80 x 18 | 2 | 2 | - | | |
| 7 | Motor Grader | 1400 x 24 Lug | - | 2 | 2 | | |
| 8 | Motor Grader | 15 x 19.5 Lug | 4 | 4 | 4 | | |
| 9 | Bachoe Loader | 16.9 x 24 Lug | 2 | - | - | | |
| 10 | Double Cab | 195 x 14 | 8 | - | - | | |
| 11 | Crew Cab | 195 x 15 | 2 | - | - | | |
| 12 | Double Cab | 205 R16 | 4 | - | - | | |
| 13 | Jeep | 215 x 75 R15 | 4 | - | - | | |
| 14 | Double Cab | 235 X 75 R15 | 6 | - | - | | |
| 15 | Double Cab | 255 x 70 R15 | 28 | - | - | 60,000.00 | 120,000.00 |
| 16 | Double Cab | 265/75 R16 | 2 | - | - | | |
| 17 | Motor Cycle | 275 X 17 | 12 | - | - | | |
| 18 | Motor Cycle | 275 X 18 | 1 | - | - | | |
| 19 | Motor Cycle | 300 X 10 | 2 | - | - | | |
| 20 | Motor Cycle | 300 X 18 | 1 | - | - | | |
| 21 | Three Wheel | 400 x 8 | 6 | - | - | | |
| 22 | Tractor | 600 x 16 | 2 | - | - | | |
| 23 | Tractor | 750 x 16 | 4 | - | - | | |
| 24 | Lorry | 825 x 16 Lug 16PR | 4 | 4 | 4 | | |
| 25 | Tipper | 900 x 20 Lug 16PR | 16 | 10 | 10 | | |
| 26 | Tipper | 900 x 20 Rib 16PR | 4 | - | - | | |
| 27 | Motor Cycle | 90x 18 | 2 | - | - | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.02.03ஆம் திகதியிலிருந்து 2023.02.17ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணமான 1,150.00 ரூபாவைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) இவ்வதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு கேள்விதாரரினால் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-02-20ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு, மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

---

# பெறுகை அறிவித்தல்

## சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவிற்குத் தேவையான பின்வரும் கணனிகள், கணனி துணைப்பாகங்கள் மற்றும் அச்சுப்பொறிகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கும் வழங்குநர்கள் மீளளிக்கப்படாத 3,000.00 ரூபா தொகையை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான பற்றுச்சீட்டை சமூக பாதுகாப்புப் பிரிவிற்குச் சமர்ப்பித்து குறித்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2023-05-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2023-02-28ஆம் திகதி வரையில் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவிலுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம்.

**கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் பொருட்கள்**

- கணனி இயந்திரங்கள் (Desktops) 28
- அச்சுப்பொறிகள் (Printers) 26
- கணனி பெட்டறிகள் (UPS) 35

இயைபுடைய சகல துணைப்பாகங்கள் சகிதம் இந்த உபகரணங்களை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவிற்குக் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். 2023-02-28ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ள விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் நீங்கள் அல்லது உங்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். உங்கள் விலைமனுக்கள் 02 மாத காலம் செல்லுபடியாதல் வேண்டும்.

இதன்பொருட்டான மேலதிக விபரங்களை 011-2864398 தொலைபேசி இலக்கத்தில் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**ஆர்.பீ.பி. திலகசிறி,**
**தலைவர், சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம்,**
**பணிப்பாளர் நாயகம் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்,**
**4ஆம் மாடி, செத்சிறிபாய,**
**பத்தரமுல்ல.**

## உள்ளூராட்சித் திணைக்களம் – கிழக்கு மாகாணம்

### 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நாகராசா மணிவண்ணன் ஆகிய நான், 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 66(இ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் பதவி வெற்றிடத்திற்கு புதிய தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2023.02.14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் இக்கூட்டம் தொடர்பான அறிவித்தல் என்னால் 2317/29ஆம் இலக்க 2023.01.30ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையில் (அதி விசேடம்) விடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**நா. மணிவண்ணன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்.**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

# சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரலுக்கான அழைப்பு

## 01/05/2023 முதல் 30/04/2024 வரையான காலகட்டத்தில் 30% கட்டாய மீள்காப்புறுதித் தடையை உள்ளடக்கிய பின்வாங்கல் திட்டத்தின் பெறுகை

1. தலைவர், நிலையான அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு, (இனிமேல் SCAPC என அழைக்கப்படுகிறது) தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் சார்பாக (இனி NITF என அழைக்கப்படுகிறது) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு 01/05/2023 முதல் 30/04/2024 வரையிலான 30% கட்டாய மீள்காப்புறுதி அமர்வை உள்ளடக்கிய பின்வாங்கல் திட்டத்தின் பெறுகைக்காக தகுதியான சர்வதேச மறுகாப்பீட்டாளர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தகுதியான தரகர்களிடமிருந்து விலைமனுக்களை அழைக்கின்றது
2. NITF 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி சட்டத்தால் நிறுவப்பட்டது, பின்னர் 2007ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்டு உள்ளூர் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து கட்டாய மறுகாப்பீட்டு அமர்வுகளை ஏற்க NITF அதிகாரம் பெற்றது. அதன் பிரகாரம் இலங்கையில் பொது காப்புறுதி வணிகத்தை பரிவர்த்தனை செய்யும் அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் தங்கள் மீள்காப்புறுதி அமர்வுகளில் 30% ஐ NITF இற்கு ஒப்படைப்பது கட்டாயமாகும். 30% கட்டாய மீள்காப்புறுதி திட்டத்திலிருந்து எழும் அதன் சாத்தியமான பொறுப்புகளை நிர்வகிப்பதற்காக, NITF 01/05/2023 முதல் 30/04/2024 வரையிலான காலத்திற்கு பின்னடைவு திட்டத்தை பெற முடிவு செய்துள்ளது.
3. ஆர்வமுள்ள தரப்பினர், 2023 மார்ச் 16ஆம் திகதி வரை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவு மூலம் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணமான 75,000.00 இலங்கை ரூபா அல்லது 210 USD செலுத்திய பின், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தியதன் பின் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், 4 வது மாடி, இல. 95, திரு. சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2 எனும் முகவரியிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை 09:00 மணித்தியாலம் முதல் 15:00 மணித்தியாலம் வரை வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை NITF (www.nitf.lk), நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு (www.treasury.gov.lk), அல்லது வெளிநாட்டு விவகார அமைச்சு (www.mfa.gov.lk) என்பவற்றின் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுக்களுடன் மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்திய வங்கி வரைவைச் சமர்ப்பித்தல் வேண்டும்.


| | இல. ரூபாவுக்கான வங்கிக் கணக்கு | USD க்கான வங்கிக் கணக்கு |
|---|---|---|
| வங்கியின் பெயர் | மக்கள் வங்கி | மக்கள் வங்கி |
| கிளை | குயீன்ஸ் கிளை | குயீன்ஸ் கிளை |
| கணக்கின் பெயர் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் |
| கணக்கிலக்கம் | 033-1-001-0-0000061 | 033-4-021-4-2467951 |
| **Swift Code** | PSBKLKLX | PSBKLKLX |

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''01/05/2023 முதல் 31/04/2024 வரையிலான 30% கட்டாய மீள்காப்புறுதி அமர்வை உள்ளடக்கிய பின்வாங்கல் திட்டத்தின் பெறுகை - **NITF/REI/RETRO/2023/01**'' எனக் குறிப்பிட்டு 2023 மார்ச் 17ஆம் திகதி (இரு நாட்களும் உட்பட) 15:00 மணித்தியாலம் இலங்கையின் நிலையான நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கூரியர் சேவை மூலம் கொழும்பு 02, இல. 95, திரு. சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

4. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தரகர்கள் அல்லது உத்தியோகபூர்வ அங்கீகாரக் கடிதத்துடனான அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் சமுகத்துடன் கொழும்பு 02, இல. 95, திரு. சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 4ஆம் தளத்திலுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை அறையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். கூட்டத்தில் விலைமனுதாரர்களின் பெயர்கள் மற்றும் விலைகளை NITF அறிவிக்கும்.
5. கடித மொழிமூலம் ஆங்கிலமாகும். எவ்வாறாயினும் மேற்படி ஆவணங்கள் ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஏதேனும் மொழியில் இருந்தால் அத்தகைய ஆவணங்களுடன் சான்றளிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பும் இருத்தல் வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு இறுதியாகக் கருதப்படும் என்பதுடன் வழங்கப்பட்ட தகவல்களை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும்.
6. அனைத்து விலைமனுதாரர்களுதம் (சர்வதேச மீள்காப்புறுதியாளர்கள் / தரகர்கள் இலங்கையின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ளவர்கள்) இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வணிக வங்கியிலிருந்தோ அல்லது வேறொரு நாட்டில் உள்ள வங்கியிலிருந்தோ பெறப்பட்ட விலைக்கோரல் பிணை முறியை வழங்குதல் வேண்டும். ஆனால் இலங்கையில் செயல்படும் வர்த்தக வங்கியால் உறுதி செய்யப்பட்ட உத்தரவாதம் இருக்க வேண்டும். விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி 8,000,000.00 ரூபா அல்லது அதற்குச் சமமான USD ஆக இருத்தல் வேண்டும். இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இலங்கை மத்திய வங்கியினால் இதுபோன்ற பரிவர்த்தனைக்காக நிறுவப்பட்ட விற்பனை விகிதத்தைப் பயன்படுத்தி விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 147 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் (2023 ஆகஸ்ட் 11ஆம் திகதி வரையில்) இலங்கை, கொழும்பு 02, இல. 95, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திக்கு முகவரியிடப்பட்டு மேற்குறிப்பிடப்பட்ட NITF வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்..
7. ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் நபர்களைத் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| **தொடர்புகொள்ள வேண்டிய நபர்** | : | **முகாமையாளர் - மீள்காப்புறுதி மற்றும் SRCC** |
| **நேரடி தொலைபேசி** | : | **+94 112026699** |
| **தொலைநகல்** | : | **+94 114700988** |
| **மின்னஞ்சல்** | : | **pro_reinsurance@nitf.lk** |

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, திரு. சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02. இலங்கை.**




CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் (தென் மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | குளங்களின் புனரமைப்பு வேலைகள் (உலக வங்கி - நிதியிடப்பட்ட CSIA திட்டத்தின் கீழ் தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ளவை) | மதிப்பீட்டுப் பெறுமதி மில்லியன் ரூபாவில் | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MOA-337283-CW-RFB | லுணுகம்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவு, வீரவில கமநலசேவை நிலைய பிரதேசம், மத்தள கிராம சேவையாளர் பிரிவு, வீரவில அடுக்கையிலுள்ள குடாநெரலுகஸ்வெவ குளம் | 34.79 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 425,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 2 | LK-MOA-337284-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், காவன்திஸ்ஸபுர கிராம சேவையாளர் பிரிவு, யோதவெவ அடுக்கையிலுள்ள சாமகுளியவெவ-1 குளம் | 27.63 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 338,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 3 | LK-MOA-337282-CW-RFB | லுணுகம்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவு, வீரவில கமநலசேவை நிலைய பிரதேசம், மத்தள கிராம சேவையாளர் பிரிவு, வீரவில அடுக்கையிலுள்ள பாலுஜதுரவெவ குளம் | 49.06 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 600,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 4 | LK-MOA-337279-CW-RFB | லுணுகம்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவு, வீரவில கமநலசேவை நிலைய பிரதேசம், மத்தள கிராம சேவையாளர் பிரிவு, வீரவில அடுக்கையிலுள்ள லுணுவாரனியவ குளம் | 46.22 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 565,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 5 | LK-MOA-337278-CW-RFB | லுணுகம்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவு, வீரவில கமநலசேவை நிலைய பிரதேசம், மத்தள கிராம சேவையாளர் பிரிவு, வீரவில அடுக்கையிலுள்ள பலுகஸ்வெவ குளம் | 30.91 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 378,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 6 | LK-MOA-337291-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், உத்தஹாகந்தர கிராம சேவையாளர் பிரிவு, பபாவ அடுக்கையிலுள்ள மளித்தவெவ குளம் | 31.20 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 381,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 7 | LK-MOA-337300-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், உத்தஹாகந்தர கிராம சேவையாளர் பிரிவு, பபாவ அடுக்கையிலுள்ள பந்துவெவ குளம் | 71.12 | C4 அல்லது அதற்கு மேல் | 7500 | 869,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 8 | LK-MOA-337321-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், விகாரமகாதேவிபுர கிராம சேவையாளர் பிரிவு, நிமலாவ அடுக்கையிலுள்ள பலுடிகன குளம் | 47.90 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 585,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 9 | LK-MOA-337290-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், உத்தஹாகந்தர கிராம சேவையாளர் பிரிவு, யோதவெவ அடுக்கையிலுள்ள ருவன்வெவ குளம் | 46.46 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 568,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 10 | LK-MOA-337323-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், விகாரமகாதேவிபுர கிராம சேவையாளர் பிரிவு, நிமலாவ அடுக்கையிலுள்ள நிமலாவ குளம் | 63.2 | C4 அல்லது அதற்கு மேல் | 7500 | 695,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 11 | LK-MOA-337288-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், மஹசென்புர கிராம சேவையாளர் பிரிவு, யோதவெவ அடுக்கையிலுள்ள கோனபடியவெவ குளம் | 55.32 | C4 அல்லது அதற்கு மேல் | 7500 | 676,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 12 | LK-MOA-337285-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், காவன்திஸ்ஸபுர கிராம சேவையாளர் பிரிவு, யோதவெவ அடுக்கையிலுள்ள சாமகுளியவெவ-2 குளம் | 59.56 | C4 அல்லது அதற்கு மேல் | 7500 | 728,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |
| 13 | LK-MOA-337287-CW-RFB | திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு, யோதகண்டிய கமநலசேவை நிலைய பிரதேசம், ஜுல்பாலம கிராம சேவையாளர் பிரிவு, யோதவெவ அடுக்கையிலுள்ள கொடிகஹவெவ குளம் | 42.95 | C5 அல்லது அதற்கு மேல் | 7500 | 525,000.00 | 2023 ஜுலை 10ஆம் திகதி |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ஹம்பாந்தோட்டை, நிர்வாகக் கட்டிடத்தொகுதி, 3ஆம் மாடி, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (தென் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 047-2256304, தொலைநகல்: 047-2256303) மற்றும் அதே இடத்தில் 2023 பெப்ரவரி 06ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து 2023 பெப்ரவரி 26ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு துறையில் மேற்குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) பெப்ரவரி 06ஆம் திகதி முதல் 2023 பெப்ரவரி 26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத்தள விஜயமும் 2023 பெப்ரவரி 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023 பெப்ரவரி 27ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (தென் மாகாணம்), 3ஆம் தளம், நிர்வாகக் கட்டிடத்தொகுதி, ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
12. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2023 பெப்ரவரி 27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (தென் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்),**
**3ஆம் தளம்,**
**நிர்வாகக் கட்டிடத்தொகுதி,**
**ஹம்பாந்தோட்டை.**

2023-02-03ஆம் திகதி.

## உத்தியோகபூர்வமற்ற முதல் டெஸ்ட்

# இலங்கை ஏ இடம் தோல்வியை தவிர்த்தது இங்கிலாந்து லயன்ஸ்

இலங்கை ஏ மற்றும் இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கு இடையிலான முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது.

காலியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று (03) 333 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து லயன்ஸ் அணி ஆட்ட நேர முடிவின்போது 221 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து தோல்வியை தவிர்த்துக் கொண்டது.

இதன்போது இலங்கை ஏ அணி சிறப்பாகப் பந்து வீசி கடைசி வரை நெருக்கடி கொடுத்தது. இங்கிலாந்து லயன்ஸ் அணியின் முதல் விக்கெட்டை 2 ஓட்டங்களில் வீழ்த்திய வேகப் பந்து வீச்சாளர் மிலான் ரத்னாயக்க அடுத்தடுத்து மேலும் இரு விக்கெட்டுகளை விழ்த்தியதால் இங்கிலாந்து லயன்ஸ் 40 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

தொடர்ந்து இங்கிலாந்து லயன்ஸ் விக்கெட்டுகளை காத்துக்கொள்ள போராடியது. அந்த அணி 67 ஓட்டங்களுக்கு 4ஆவது விக்கெட்டை பறிகொடுத்தபோது மத்திய பின்வரிசை வீரர்கள் நிதானமாக ஆடினர்.

ஜோஷ் பஹனொன் 86 பந்துகளில் 57 ஓட்டங்களை பெற்றதோடு வேகமாக ஆடிய ஜக் ஹைன்ஸ் 38 பந்துகளில் 43 ஓட்டங்களை பெற்றார். விக்கெட் காப்பாளர் ஜெம்மி ஸ்மித் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களை பெற்று இங்கிலாந்து லயன்ஸின் தோல்வியை தவிர்க்க உதவினார்.

முன்னதாக 580 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை ஏ அணிக்காக அணித் தலைவர் நிபுன் தனஞ்சய சதம் (128) பெற்றார்.

207 ஓட்டங்களுடன் நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்து நிஷான் மதுஷ்க 241 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அவர் தொடர்ந்து மூன்று நாட்கள் துடுப்பெடுத்தாடியமை குறிப்பிடத்தக்கது.

இறுதியில் இலங்கை ஏ அணி 663 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்தியது. இதன்போது இங்கிலாந்து லயன்ஸ் அணி சார்பில் 44.1 ஓவர்கள் பந்துவீசிய ஜக் கார்சன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு 50 ஓவர்கள் பந்துவீசிய லியாம் பீட்டர்ஸன் வைட் 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்தப் போட்டியில் இலங்கை ஏ அணி தனது முதல் இன்னிங்ஸில் 136 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்ததோடு இங்கிலாந்து லயன்ஸ் முதல் இன்னிங்ஸில் 467 ஓட்டங்களை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டி வரும் பெப்ரவரி 07ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது.



# 40 நாடுகள் ஒலிம்பிக்கை புறக்கணிக்க அச்சுறுத்தல்



அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை 40 நாடுகள் வரை புறக்கணிக்கக் கூடும் என்றும் அது ஒட்டுமொத்த போட்டியையும் அர்த்தமற்றதாக்கும் என்றும் போலந்து விளையாட்டு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கமில் போர்ட்னிக்சுக் தெரிவித்துள்ளார்.

2024 ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க ரஷ்யா மற்றும் பெலாரஸுக்கு அனுமதி அளிக்க சர்வதேச ஒலிம்பிக் குழு திட்டமிட்டிருக்கும் நிலையில் போலந்து, லிதுவேனியா, எஸ்டோனியா மற்றும் லத்விய நாடுகள் ஒலிம்பிக்கில் பங்கேற்பதை நிராகரித்துள்ளன.

இது நிகழ்ந்தால் பாரிஸ் ஒலிம்பிக்கை புறக்கணிப்பதாக உக்ரைனும் கூறியுள்ளது.

எனினும் புறக்கணிப்பு என்பது விளையாட்டு வீரர்களை தண்டிப்பதாக மாத்திரமே இருக்கும் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு கடந்த வியாழக்கிழமை (02) தெரிவித்தது.

இந்நிலையில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் திட்டத்தை தடுப்பதற்கு பிரிட்டன், அமெரிக்கா மற்றும் கனடா உட்பட 40 நாடுகளின் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக போர்ட்னிக்சுக் தெரிவித்துள்ளார்.



அம்பாறை மாவட்ட சதுரங்க விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டத்திற்கு தெரிவான ஒலுவில் அல்–மினாரா வித்தியாலய மாணவர்களான எப்.ஏ முஹம்மட் மற்றும் எம்.ஆர் சிரீன் ஆகியோர் பயிற்சியாளர் மற்றும் அதிபருடன் காணப்படுகிறார்கள்.
(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# டெண்டுல்கர் பாராட்டு



தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மற்றும் அந்நாட்டின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 5 கோடி இந்திய ரூபாய் தொகையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

உலகக் கிண்ணத்தை வென்றதன் மூலம், இந்தியாவில் உள்ள இளம் பெண்களுக்கு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற கனவைக் கொடுத்திருப்பதாக அந்த இளம் அணிக்கு டெண்டுல்கர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அகமதாபாத்தில் கடந்த புதனன்று (02) நடந்த மூன்றாவது டி20 போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் உலகக் கிண்ணம் வென்ற இந்திய இளம் மகளிர் அணியை பாராட்டும் நிகழ்வு இடம்பெற்றது.



# டி20 உலகக் கிண்ணம்: இலங்கை மகளிர் அணியினர் தென்னாபிரிக்காவுக்கு பயணம்

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை அணி நேற்று (03) அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

சாமரி அத்தபத்து தலைமையிலான 15 வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் அதிகாரிகள் என 10 பேர் இலங்கை அணியில் இடம் பெற்றுள்ளனர்.

தென்னாபிரிக்கா புறப்பட்டுச் சென்ற இலங்கை அணி டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னதாக பெப்ரவரி 6 ஆம் திகதி அயர்லாந்துடனும் பெப்ரவரி 8 ஆம் திகதி மேற்கிந்திய தீவுகளுடனும் பயிற்சிப் போட்டிகளில் ஆடவுள்ளது.

வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி ஆரம்பமாகும் மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி ஏ குழுவில் இடம்பெற்றுள்ளது. இந்தக் குழுவில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை அணி தொடரில் முதல் போட்டியில் வரும் வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது. அனுபவ வீராங்கனைகள் மற்றும் இளம் வீராங்கனை ஒன்றிணைந்த அணி ஒன்று கிடைத்திருப்பது சாதகமான ஒன்றாகும் என்று சாமரி அத்தபத்து தென்னாபிரிக்கா செல்லும் முன்னர் நம்பிக்கை தெரிவித்தார்.

# வரலாற்றில் மிக வயதான நாயாக 'பொபி' சாதனை



போர்த்துக்கலின் 30 வயதான நாய் ஒன்று இதுவரை பதிவான மிக வயதான நாய் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

12 தொடக்கம் 14 ஆண்டுகள் மாத்திரமே ஆயுள் எதிர்பார்ப்பைக் கொண்ட பொபி என்ற இந்த நாய் கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி உலகில் இதுவரை வாழ்ந்த மிக வயதான நாய் என்பது உறுதி செய்யப்பட்டது.

முன்னதாக 1939 ஆம் ஆண்டு 29 வயது வரை வாழ்ந்த அவுஸ்ரேலியாவின் ப்ளுவாய் என்ற நாயே இதுவரை வாழ்ந்த மிக வயதான நாயாக சாதனை படைத்திருந்தது.

கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதிக்கு பொபியின் வயது 30 ஆண்டு மற்றும் 226 நாட்களாக பதிவானது.

இதனை போர்த்துக்கள் அரசின் விலங்குகள் தேசிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் செல்லப்பிராணிகள் தரவு மூலம் உறுதி செய்யப்பட்டதாக கின்னஸ் உலக சாதனை பதிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த நாய் போர்த்துக்கலின் மேற்குக் கரைக்கு அருகில் இருக்கும் கொங்கியுரோஸ் என்ற கிராமத்தில் தனது வாழ்நாள் முழுவதும் ஒரே குடும்பத்தின் செல்லப்பிராணியாக வாழ்ந்து வருகிறது.

பொபி வயது முதிர்ச்சியால் நடப்பதற்கு சிரமப்படுவதாகவும் காண் பார்வை குறைந்திருப்பதாகவும் அதனை வளர்க்கும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# அமெரிக்க வானில் சீனாவின் உளவு 'பலூன்' கண்டுபிடிப்பு



நாட்களில் அமெரிக்காவின் முக்கிய தளங்களுக்கு மேலால் பறந்த சீனாவினது என்று சந்தேகிக்கப்படும் உளவு பார்க்கும் பலூன் அவதானிக்கப்பட்டுள்ளது.

இது சீனாவுக்குச் சொந்தமான “வானின் அதிக உயரத்தில் பறக்கும் கண்காணிப்பு பலூன் ” என்பது உறுதியானது என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த பலூன் மிக அண்மையில் மேற்கு மாநிலமான மொன்டானாவில் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த பலூன் பாகங்கள் தரையில் விழுவதால் ஏற்படக் கூடிய ஆபத்துப் பற்றிய அச்சம் காரணமாக அதனை சுட்டு வீழ்த்தாமல் இருக்க இராணுவ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் சீனா இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை. நிலைமை குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜொ பைடனுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பொருள் அலஸ்காவின் அலூடியன் தீவுகள் மற்றும் கனடா வழியாக பறந்திருப்பதோடு பின்னர் கடந்த புதனன்று (01) மொன்டானாவின் பிலிங்ஸ் நகருக்கு மேலால் தெரிந்துள்ளது.

இந்தப் பொருளை சுட்டு வீழ்த்த வெள்ளை மாளிகை உத்தரவிடும் பட்சத்தில் எப்–22 உட்பட போர் விமானங்களை அரசு அதற்காக தயார் நிலையில் வைத்திருப்பதாக பெயர் குறிப்பிடாத மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தல் தொடர்பில் ஆராய்வதற்கு பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டின் மற்றும் அமெரிக்கக் கூட்டுப் படை தளபதி ஜெனரல் மார்க் மில்லி உட்பட முன்னணி இராணுவ தலைவர்கள் கடந்த புதனன்று சந்தித்துள்ளனர்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டோனியோ பிளிங்கன் அடுத்த வாரம் சீனாவுக்கு பயணிக்கவுள்ள நிலையிலேயே இது நிகழ்ந்துள்ளது. பைடன் நிர்வாகத்தின் அமைச்சரவையைச் சேர்ந்த ஒருவர் சீனா பயணிப்பது இது முதல் முறையாக அமையும்.

# ஆர்ஜன்டீனாவில் 2,000 நாணயத்தாள்



அதிகரிக்கும் பணவீக்கத்தை எதிர்கொள்ளும்வகையில்ஆர்ஜன்டீனாவில் புதிய 2000 பேசோ நாணயத் தாள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக அந்நாட்டு மத்திய வங்கி தெரிவித்துள்ளது. கடந்த 12 மாதங்களில் ஆர்ஜன்டீனாவில் நுகர்வோர் விலைவாசி 95 வீதமாக உயிர்ந்த நிலையில் இந்த புதிய நாணயத்தாள் ஒன்றின் உத்தியோகபூர்வ பெறுமதி 11 டொலர்களாக அமையும்.

இது 1991 தொடக்கம் ஆர்ஜன்டீனாவின் மிக வேகமான பணவீக்கமாக பதிவாகியுள்ளது.

தற்போது ஆர்ஜன்டீனாவின் மிக உயர்ந்த நாணயத்தாளாக 1,000 பேசோஸ் இருப்பதோடு அது கறுப்புச் சந்தையில் 2.70 டொலர் மாத்திரம் பெறுமதி கொண்டதாக உள்ளது.

# ஐ.எம்.எப். நிபந்தனைக்கு இணங்க பாக். முடிவு



சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) கடனை பெறுவதற்காக நினைத்துப் பார்க்க முடியாத நிபந்தனைகளுக்கு பாகிஸ்தான் அரசு இணக்கத்தை வெளியிடும் என்று அந்நாட்டு பிரதமர் ஷெஹ்பாஸ் ஷரீப் நேற்று (03) தெரிவித்துள்ளார்.

தற்போது ஸ்தம்பித்திருக்கும் முக்கிய நிதி உதவியை புதுப்பிக்கும் கடைசி பேச்சுவார்த்தைக்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் வரும் செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் வரவுள்ளனர்.

வரும் ஒக்டோபரில் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் வரி அதிகரிப்பு மற்றும் மானியங்களை குறைக்கும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பாகிஸ்தான் அரசு நிராகரித்திருந்தது.

“நான் விபரித்துக் கூறாதபோதும் எமது பொருளாதாரம் முகம்கொடுக்கும் சவால் கற்பனை செய்துபார்க்க முடியாதது. சர்வதேச நாணய நிதியத்தின் நினைத்துப்பார்க்க முடியாத நிபந்தனைகளுக்கு நாம் இணங்க வேண்டி ஏற்படும். ஆனால் நிபந்தனைகளுடனேயே அவைகளுக்கு இணக்கம் வெளியிடப்படும்” என்று தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த ஷரீப் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் அரசியல் குழப்பம் மற்றும் மோசமடையும் பாதுகாப்பு பிரச்சினைக்கு மத்தியில் அதிக அளவான வெளிநாட்டு கடன்களை செலுத்த முயற்சிப்பதால் பாகிஸ்தான் பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 3.1 பில்லியன் டொலர் வரை குறைந்திருப்பதாக பாகிஸ்தான் மத்திய வங்கி கடந்த வியாழனன்று தெரிவித்தது. இது மூன்று வாரங்களுக்கும் குறைவான காலத்திற்கான இறக்குமதிகளுக்கு மோதுமான அளவு என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் வருடாந்திர பணவீக்கம் கடந்த புதன்கிழமை 48 ஆண்டுகளில் இல்லாத அளவு உச்சம் பெற்றிருக்கும் சூழலில் அடிப்படை உணவுப் பொருட்களை வாங்கவும் மக்கள் அவதிப்படுகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 4ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.





தினகரன்
The Thinakaran
Tamil Daily Newspaper
WEDNESDAY FUBRUARY 4, 1948
அடிமைவாழ்வு அகன்றது: விடுதலை, விடுதலை, விடுதலை!
"பூரண சுதந்திரம் பெற்ற புது வாழ்வில் பிரவேசித்தோம்"
புதிய அந்தஸ்தை அடையும் இலங்கைக்கு பிரதமர் அட்லி பாராட்டு
அமெரிக்க மக்களின் நட்பை குறித்து ஜனாதிபதி வாக்குறுதி
பிரிட்டிஷ் லட்சியம் வெற்றி பெற்றது
சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர்
"நாட்டில் வகுப்புவாதம் மறைந்தொழிய வேண்டும்"
புதுடில்லியில் இந்தியப் பிரதம மந்திரி நேரு எச்சரிக்கை
காந்தி ஞாபகார்த்த நிதி
கைதிகளுக்கு மன்னிப்பு
இன்று 1886 பேர் விடுதலை
நான் ஒரு மோரிஸ் கார் விலைக்கு வாங்கப் போகின்றேன்
MORRIS
பிரிட்டிஷ் கார் கம்பனி

# சுதந்திர தின பவளவிழா

நாட்டுக்கு 1948 இல் கிடைத்த சுதந்திரம், இரத்தம் சிந்தாத போராட்டத்தால் பெற்றுக் கொண்ட ஒன்றல்ல. விசேடமாக 1815இல் கண்டிய ஒப்பந்தம் மூலம் இல்லாமல் போன சுதந்திரத்தை வெற்றி கொள்வதற்காக இலங்கையில் பல சந்தர்ப்பங்களிலும் ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்றன.

1818 மற்றும் 1848 களிலேயே அனைவரையும் ஈர்த்த போராட்டங்கள் இடம்பெற்றன. ஆனால் அந்த இரண்டு போராட்டங்களுக்கும் இடையே நடைபெற்ற மேலும் பல போராட்டங்களும் உள்ளன. இந்தப் போராட்டங்கள் போன்று அதற்கு தலைமை தாங்கியவர்களைப் பற்றிய விடயங்கள் குறித்து இன்றும் குறைந்தளவே கவனம் செலுத்தப்படுகின்றது.

1815 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அது கண்டிய ஒப்பந்தத்தின் மூலமாகும். அதன் பின்னர் கடந்து சென்ற காலங்கள் இலங்கையருக்கு நன்மையாக அமையவில்லை. ஆங்கிலேயர்கள் கண்டி ஒப்பந்தத்தின் சரத்துக்களை மீறி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். விசேடமாக மதம், கலாசாரம் தொடர்பாக அக்கறை செலுத்தாமல் நடவடிக்கையில் ஈடுபட்டதால் கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பிரபுத்துவ தலைவர்கள் கூட ஏமாற்றத்திற்குள்ளானார்கள்.

விசேடமாக வெல்லச, பின்தென்ன போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சுயாதீனமாக நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சி செய்தார்கள். கண்டி அரசன் கூட அவர்களின் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கவில்லை. இதனால் அவர்கள் மன்னர் மீது உண்மையான விசுவாசிகளாக காணப்பட்டார்கள். அத்துடன் ஊவா ஒருபோதும் அந்நியரின் ஆதிபத்தியத்திற்கு உட்படவில்லை. அதனால் மக்களுக்கு வெள்ளையர்களின் தோல் மற்றும் நடவடிக்கை மாத்திரமல்ல மொழியும் கூட வேறாகத் தோன்றியது.

பிரதேசவாசிகளை கோபமூட்டும் செயல்களை ஆங்கிலப் படையினர் மேற்கொண்டார்கள். அவர்கள் மக்களிடமிருந்து கொள்ளையடித்தார்கள். அத்துடன் நின்றுவிடாது பிரித்தாளும் அவர்களின் கொள்கைக்கு அமைய சிங்கள மற்றும் ஏனைய மக்களிடையே மோதல்கள் ஏற்படும் சூழலை உருவாக்கினார்கள். சிங்களவர்கள் அதிகமாக வசித்த பிரதேசமான வெல்லசைக்கு முஸ்லிம் முகாந்திரம் ஒருவரை அதன் காரணமாகவே நியமித்தார்கள்.

அது மாத்திரமல்ல துரைசாமி தொடர்பாக முதலில் தகவல் கிடைத்தவுடன் அவரை பிடிப்பதற்காக முஸ்லிம் ஒருவரையே அனுப்பினார்கள் . அத்துடன் 1815 டிசம்பர் மாதம் கண்டியில் முஸ்லிம் மக்கள் மத ஊர்வலம் ஒன்றையும் முதற் தடவையாக நடத்தி இருந்தார்கள். இவ்வாறு உள்நாட்டு மோதல்களுக்கு வழி ஏற்படுத்தினார்கள். அதனால் தாங்கள் விரும்பிய சுதந்திரம் ஆங்கிலேயரிடமிருந்து கிடைக்காது என்பதை புரிந்து கொண்ட சிங்களவர்கள் புரட்சியில் இறங்கினார்கள்.

அதன் முதலாவது சந்தர்ப்பமாக இஹகம மடுகல்லே சூழ்ச்சி குறிப்பிடப்படுகின்றது. 1816 இல் இடம்பெற்ற அந்த சூழ்ச்சி மல்வத்து மகாவிகாரையின் தேரரான இஹகம தேரரால் உடுகபடா நிலமே பதவியை வகித்த மடுகல்லே நிலமேயியன் திட்டத்துக்கு அமைய செயல்படுத்தப்பட்டது.

திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக பிரபுக்களின் ஒத்துழைப்பை கோரி இருவரும் இரகசியமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள். அவ்வாறான ஒரு கலந்துரையாடல் எக்நெல்லிகொட நிலமேக்கும் இஹகம தேரருக்கும் இடையே நடைபெற்றது. அங்கு அனைத்து தகவல்களையும் அறிந்து கொண்ட எக்நெல்லிக்கொட ஆங்கிலேயருக்கு தெரிவித்தார். இறுதியில் மடுகல்லே உடுகபடா நிலமே மற்றும் இஹகம தேரரும் கைது செய்யப்பட்டார்கள்.

அரச இரத்தம் உடைய ஒருவரை அரசராக நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டம் தோல்வியடைந்தது. அதன் பின்னர் கிவுலேகெதர மொஹட்டால, பூடாவே ரடேரால, கொஹுகும்புரே ரடே ரால ஆகியோர் தலைமை தாங்கி ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெறும் நோக்கில் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார்கள். இது பற்றிய முதல் செய்தி ஆங்கிலேயர்களுக்கு 1817 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கிடைத்தது.

அவர்களுக்கு, காவி உடை அணிந்த ஒருவர் தலைமை தாங்கும் அணி ஒன்று ஊவா தென்கிழக்கு பிரதேசத்தில் நடமாடுவதாக தகவல் கிடைத்தது. அது பற்றி ஆராய ஹஜ்ஜி மரிக்கார் தலைமையில் ஒரு குழுவினர் அனுப்பப்பட்டார்கள். சிங்களப் படை ஹஜ்ஜி மரிக்காரை கைது செய்தது. பின்னர் அது தொடர்பாக ஆராய பதுளை உப ஏஜெண்டான சில்வெஸ்டர் டக்ளஸ் வில்சன் அனுப்பப்பட்டார். அவரும் கொல்லப்பட்டார். அதன் பின்னர் இரு தரப்பாரிடையேயும் யுத்தம் மூண்டது. துரைசாமியை அரசனாக நியமித்த சிங்களப்படையினர் கெப்பெட்டிபொல, மடுகல்ல போன்ற நிலமேக்களை போன்று கிவுலேகெதர மொஹட்டால, பூடாவ ரடேரால போன்ற தலைவர்களும் ஹாமாபொல ரன்கிரி, அம்பகொல்லேரால போன்ற கிராமத்தவர்களும் இணைந்து யுத்தம் ஒன்றை நடத்தினார்கள் இறுதியில் அந்த யுத்தம் பதவி ஆசை கொண்ட பிரபுக்களால் காட்டிக் கொடுக்கப்பட்டதன் காரணமாக 1818 இல் முடிவுக்கு வந்தது.

யுத்தத்தின் இறுதிக் கட்டம் மிகவும் வேதனைமிக்கதாக இருந்தது. இது தொடர்பாக பின்னர் தெரிவித்த பிரித்தானியரான நீதிபதி ஆர்ச் போல்ட் லோரி இழைக்கப்பட்ட பாதிப்புகள் குறித்து தன்னால் வெட்கமின்றி ஞாபகப்படுத்த முடியாது எனத் தெரிவித்திருந்தார். அத்துடன் பிரித்தானிய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த நிலைமை காரணமாக புரட்சியின் பின்னரான வருடத்தில் பிரதேசங்களின் நிலைமை பற்றி பின்வருமாறு தெளிவுபடுத்தி இருந்தார்.

"1819 ஆம் ஆண்டளவில் மக்களின் தலைவர்கள் மற்றும் முக்கிய குடும்பங்களில் எந்தவொரு அங்கத்தவரும் எஞ்சியிருக்காத அளவுக்கு நிலைமை காணப்பட்டது. துப்பாக்கிகளுக்கும் வாள்களுக்கும் தப்பியவர்கள் கொலரா மற்றும் வைசூரிக்கு இரையானார்கள். பட்டினியால் நூற்றுக்கணக்கானோர் இறந்தார்கள். இதன் பின்னர் பல வருடங்கள் பிரதேச மக்களுக்கு உதவி செய்யவும் அவர்களை ஆளவும் அரசு எடுத்து எந்த ஒரு முயற்சியும் ஆரம்பிக்கப்பட்ட உடனேயே கைவிடப்பட்ட முயற்சிகளாகும். உடரட்ட காலத்தில் வாழ்ந்த உயர்குடியினர்களின் வழித்தோன்றல்களும் மறைந்து போனார்கள். கீழ்மட்ட குடும்பத்தில் உள்ளவர்களும் நலிந்தவர்களாகவே காணப்பட்டார்கள்.

இக்காலப் பகுதியில் அரிவாள்,மண்வெட்டி,கோடரி போன்று ஆயுதங்களை கையில் தாங்கி தங்களது தோட்டங்களில் வேலை செய்த அப்பாவிகள் கூட ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என கைது செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு தந்திரமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு1818 இல் போராட்டத்தை அழித்த ஆட்சியாளர்கள் கண்டி ஒப்பந்தத்தையும் இரத்து செய்தார்கள். பின்னர் 1818 நவம்பர் 21ஆம் திகதி 56 சரத்துகள் கொண்ட மலைநாட்டு பிரகடனத்தில் கைச்சாத்திட ரோபோட் பிரவுன்ரிக் நடவடிக்கை எடுத்தார். மலைநாட்டுக்கே உரித்தான பழக்கவழக்கங்களை சீர்குலைத்து ஆங்கில நிர்வாகம், நீதி,வரிஅறவிடல் என்பவற்றை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் பிரவுன்ரிக்கின் எதிர்பார்ப்பை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள உள்ளூர் மக்கள் இடமளிக்கவில்லை. அதன்படி 1820 அளவில் மீண்டும் போராட்டம் ஆரம்பமானது. 1820 ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பமான இந்த போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர் ஹேவாஹெட்டயில் பிறந்த குமாரசுவாமி எனப்படும் ராமசாமி என்பவர் ஆவார். அவர் விமலதர்ம நரேந்திரசிங்க என தன்னை அறிமுகம் செய்ததோடு,1818 மலைநாட்டு புரட்சியின் போது ருவன்வெலயில் கைது செய்யப்பட்டு கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 1818 போராட்ட காலத்தில் துரைசாமியையும் பல தடவைகள் சந்தித்தவர் எனக் கூறப்பட்டுள்ளது.

துரைசாமி போன்று வேடுவ மக்களிடம் ராமசாமிக்கும் உயர்ந்த இடமிருந்தது. ஒருமுறை பின்தென்னையில் மாரக்க என்னும் இடத்திற்கு வருகை தந்த வேளையில் அங்கிருந்த வேடுவ தலைவர் உள்ளிட்ட 700 பேர் தமது அரசன் என குமாரசாமியை வணங்கியுள்ளார்கள்.

எவ்வாறாயினும் பின்தென்னே கணேகொட திசாவையால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவலுக்கு அமைய ஜனவரி 12ஆம் திகதி அவர் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டார். ஆங்கிலேய இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட விமலதர்ம நரேந்திரசிங்கவுக்கு புரட்சி செய்த குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் தண்டனை குறைக்கப்பட்டுதோடு அவர் முருசீக்கு நாடு கடத்தப்பட்டார்.

அவ்வாறு அந்தப் புரட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் மே மாதம் அளவில் புரட்சியொன்று வெடித்தது. அது கொப்பேகடுவ என்பவரின் தலைமையிலாகும் . அவரும் வில்பாவிடமிருந்து கண்டி திஸா பதவியைப் பெற்றிருந்தவர் . அவரது போராட்டத்தின் போது பல தபால் நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. அவரும் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் தண்டனை குறைக்கப்பட்டவராவார்.

அதன் பின்னர் 1823 பெப்ரவரி மாதம் ரத்மலே உன்னான்சே என்னும் பிக்கு ஒருவர் போராட்டத்தில் குதித்தார். அதுவும் தோல்வியடைந்ததோடு அவ்வருடம் மே மாதம் மாத்தளை கஹவத்தே உன்னான்சேயின் தலைமையில் மீண்டும் ஒரு புரட்சி ஆரம்பமானது. இந்தப் புரட்சி அதிக காலம் நீடிக்கவில்லை. ஆங்கிலேயர்களால் கஹவத்தே உன்னான்சேயுடன் ரடே ராலவும் கைது செய்யப்பட்டு 1823 ஒகஸ்ட் ஐந்தாம் திகதி தூக்கிலிடப்பட்டார்கள்.

இந்தப் புரட்சியின் அடுத்த கட்டம் ஹாரிஸ்பத்துவே சேதரலாகே தலைமையில் நடந்தது. கல்லேல்லே வணிகசேக்கர முதலிஹாமி என கூறப்பட்டவர் பிந்தென்னே மாரக்க என்னும் வேடுவ கிராமத்தில் முடிசூடப்பட்டிருந்தார். வேடுவ மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த சேதரலாகினகேயின் போராட்டமும் அவருடன் வேறு ஐந்து தலைவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு நிறைவுக்கு வந்தது. இவ்வாறான எழுச்சிகள் பலவற்றை ஆயிரத்து எண்ணூற்று முப்பது தசாப்தத்தில் காணக்கூடியதாக இருந்தது. அது 1831 மற்றும் 1836 காலங்களிலாகும். எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆங்கிலேயர்கள் குறிப்பிட்ட புரட்சியாளர்களை கைது செய்து தண்டனை வழங்கினார்கள்.

மீண்டும் 1840 களில் உள்ளூர் மக்களின் பல எழுச்சிகள் இடம்பெற்றன. பெந்தொட்ட உன்னான்ஸே எனப்படும் சந்திர ஜோதி சீலானந்த என்னும் பிக்கு அந்த தசாப்தத்தின் முதலாவது எழுச்சிக்கு தலைமை தாங்கியுள்ளார்.1842 ஆம் ஆண்டு ஆரம்பமான போராட்டம் சிறிது காலத்திலேயே ஆங்கிலேயர்களால் கட்டுப்படுத்த முடிந்தது. எவ்வாறாயினும் 1843 இல் இன்னுமொரு புரட்சி ஆரம்பித்தது.

அதற்கும் தலைமையை பெந்தொட்ட உன்னாசேயே பெற்றுக் கொடுத்தார். கடுமையான தாக்குதலை மேற்கொள்வதற்கு அந்த புரட்சியின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி 10 ஆயிரத்துக்கு அதிகமான மலைநாட்டு படையணி பதுளையில் பிரித்தானிய முகாமை கைப்பற்றுவதே திட்டமாக இருந்தது. அதன் பின்னர் முறையே கண்டியையும் கொழும்பையும் பிடிப்பதே யுத்தத்தின் நோக்கமாக காணப்பட்டது. ஆனால் ஜூன் 30 ஆம் திகதி பெந்தோட்டே உன்னான்சே கைது செய்யப்பட்டதோடு அவருக்கு 14 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.


பின்னர் 1848 ஆம் ஆண்டு புரட்சி ஆரம்பிக்கப்பட்டது. அது ஆங்கிலேயர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பாரிய புரட்சியாகும். எவ்வாறாயினும் அந்த புரட்சியும் ஆங்கிலேயரால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

1818 இலிருந்து 1848 வரை மேற்கொள்ளப்பட்ட யுத்தத்துக்கு காரணமாக பல முக்கிய விடயங்கள் கூறப்பட்டன. இராஜ்ய உரிமையாளர் மறைந்திருந்து இறுதியில் வந்து இராஜ்யத்தை ஏகாதிபதிகளிடமிருந்து மீட்பார் என்பதாகும். விசேடமாக இவ்வாறான நம்பிக்கைகள் மக்களிடையே ஏற்படுவதற்கு பல வதந்திகள், அரச உரிமையாளர்கள் பற்றிய எதிர்வுகூறல்கள், கட்டுக்கதைகளே காரணமாக அமைந்திருந்தமை இந்த கிராமிய போராட்டங்களின் பொதுவான அடையாளங்களாக காண முடியும்.



மலிக் சமிந்த தர்மவர்தன
(தமிழில்: வீ.ஆர்.வயலட்)



# இன ஐக்கியத்தை கட்டியெழுப்புவதே உண்மையான சுதந்திரத்தின் அர்த்தம்!

முன்னெப்போதும் இல்லாதவாறு மனித சமூகத்தில் வன்முறைகள் மலிந்து காணப்படுகின்றன. இன்றைய உலகம் எத்துணை கொடூரம் நிறைந்தது என்று உணரும் வகையில் செயற்பாடுகள் அரங்கேறுகின்றன.

இன்றைய உலகைப் பார்த்து எந்தவொரு உணர்ச்சியுள்ள மனிதனும், மனிதனால் மனிதனுக்கெதிராகவும் இயற்கைக்கெதிராகவும் மேற்கொள்ளப்படுகின்ற கோரச்செயல்களால் மனமுடைந்து போவதுடன் அவற்றைக் கண்டு அச்சமடைகிறான்.

இதற்கு சமயவேறுபாடுகள் காரணமா? அல்லது அதிகார வேட்கை காரணமா? என்பதெல்லாம் ஆய்வுக்குரிய வினா அல்ல.

சுதந்திர இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினம் (04.02.2023) இன்றாகும். இலங்கை மூன்று தசாப்த காலம் கொடிய யுத்தத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்டு இன்று ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடும் நிலைக்கு மாறியுள்ளது. அதற்கு அப்பால் கொரோனா பொருளாதார நெருக்கடி போன்றனவும்

## நாட்டு மக்களிடையே சமய வேறுபாடுகள் களையப்பட வேண்டும்

தாக்கத்தை ஏற்படுத்தின.

இன்றைய நிலையில் ஒவ்வொரு இலங்கையரும் நிரந்தர சமாதானத்திற்காக மேலும் பலதூரம் பயணிக்கவேண்டியுள்ளது என்பது மட்டும் நிதர்சனமான உண்மையாகும்.

1948 இல் இலங்கையின் சுதந்திரம் அனைத்து இனங்களும் சேர்ந்து வென்றெடுத்தது என்பதில் மாறுபட்ட கருத்திற்கிடமில்லை. நிரந்த சமாதானத்தை விரும்பும் ஒவ்வொரு இலங்கையனும் தன்னிலை உணருவான்.

சமய வேறுபாடுகள் என்பது ஒரு புதிய தோற்றமல்ல. இது மனித இனத்தின் நீண்ட வரலாறு போன்றே தொன்மையானது. ஒரே பிராந்தியத்துக்குள்ளும் ஒரே கலாசாரத்துக்குள்ளும் பல்வேறு சமய நம்பிக்கைகளும், சமயங்களும், ஆதரவாளர் குழுக்களும் தற்போது காணப்படுவது போன்றே அன்றும் காணப்பட்டன.

சிலவேளை சமய வேறுபாடுகள் காரணமாக ஏற்பட்ட முறுகல்கள் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. எண்ணிலடங்காத பெறுமதியான உடைமைகளையும் அழித்துள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சமய வேறுபாடுகள் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள் பிரிவுகளுக்குள்ளும் யுத்தங்களைத் தோற்றுவித்துள்ளன. எல்லா சமயத்தவர்களும் உள்நோக்கங்கள் எதுவுமில்லாமல் திறந்த மனதுடன் செயற்படவேண்டும். சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் விரும்பும் ஒவ்வொருவரும் 'வாழு வாழவிடு' எனும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். சமயங்கள் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான ஆயுதங்களாகப் பாவிக்கப்பட வேண்டுமே தவிர அவை சமாதானம், புரிந்துணர்வு, நம்பிக்கை போன்றவற்றை அழிக்கும் ஆயுதங்களாகப் பாவிக்கப்படக் கூடாது.

சமாதானமானது சுதந்திரமான சூழலில் முறையாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்திலாவது இலங்கையர்கள் நிரந்தர சமாதானமாக வாழமுடியும்.

உலகமயமாக்கலின் அழுத்தத்தின் கீழ் எந்தவொரு நாடும் தனித்தியங்க முடியாது. நாம் யதார்த்த நிலையில் வாழ எமது ஒவ்வொரு வழியிலும் சமாதானம் தேவையாகவுள்ளது. மனித இனத்தின் பெரும் பகுதி வறுமையினால் வெறுமனே உயிர்பிழைத்தலுக்காகக் கஷ்டப்பட்டு வாழ்கிறது. சமூகத்தில் மனிதன் அவனுக்காகவே உருவாக்கிக் கொண்ட ஒழுங்கின்மை, குழப்பம் என்பன நிறையவே உள்ளன.

இன்று கல்வி என்பது அதன் நோக்கத்திலிருந்து வழுவி பாடசாலைக்கு அப்பால் ரியூசன் கலாசாரத்தை நம்பியிருக்கிறது. போட்டி மிகுந்த சூழலில் மாணவர்கள் தமது ஒழுக்கவிழுமியங்களை மறந்து விடுகின்றனர். அவர்களுக்கு பரஸ்பரம் புரிந்துணர்வைக் கட்டியெழுப்ப நேரமில்லை.

ஆசிரியர்களில் ஒரு தரப்பினர் கல்வியை தமது ரியூசன் என்ற கடைகள் மூலம் எப்போது விற்க ஆரம்பித்தார்களோ, அன்றே பாரம்பரிய மரியாதைக்குரிய ஆசிரிய_ மாணவ உறவு விலைபேசப்பட்டு விட்டது எனலாம்.

குறிப்பாக காலை ஆராதனைகளின் போது கல்விச் சமூகத்தினர் மத்தியில் இன நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் வகையிலான உரைகளை அதிபர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் சகல இனங்களிடையேயும் நல்லிணக்கம், பரஸ்பரம் புரிந்துணர்வு வலுப்பெற உதவுமென்பது நம்பிக்கையாகும்.

சமயங்களின் ஸ்தாபகர்களின் குறிக்கோள்களை சரிவரப் புரிந்து கொள்ளாத, அளவுக்கதிக ஆர்வம் கொண்ட அல்லது அர்ப்பணிப்புக் கொண்டவர்களே சமய வேறுபாடுகளை ஒரு பிரச்சினையாக மாற்றுவதற்கு காரணமாகவுள்ளனர். இவர்களின் செயற்பாடுகளே முரண்பாடுகளை உற்பத்தியாக்குவதற்கும் மனக்கிளர்ச்சி மற்றும் தீவிரவாத உணர்ச்சி போன்றவற்றிற்கு தூபமிடவும் உதவுகின்றன.

சமய வேறுபாடுகளை நேரியமுறையில் நோக்கி அதனை மனிதகுலத்தின் ஒற்றுமைக்குப் பாவிக்க முடியாமல் உள்ள நிலையானது சமய வேறுபாடுகளை மிகவும் எளிதில் எரியக்கூடிய ஆபத்தான நிலையாகப் பார்க்க பலரைத் தூண்டியுள்ளது.

ஒருவர் தனது சமயத்தில் கண்மூடித்தனமாகத் தொங்கிக் கொண்டு மற்றைய சமயங்களை இழிவுபடுத்துவது கூடாது. ஒருவர் சொல்வது எல்லாம் சரி எனவும் மற்றவர் சொல்வது எல்லாம் பிழை எனவும் கூறுவதை ஒரு சமயமும் ஆதரிக்கவில்லை. அப்படியான சுபாவமே சமய அடிப்படைவாதத்திற்கான காரணமாகும். இந்த அடிப்படைவாதமே கண்களை மறைக்கின்றன.



ஒரு சமயத்தைப் பின்பற்றுபவர் ஒரு அடிப்படைவாதியாக இருக்கத்தேவையில்லை. அடிப்படைவாதம் உண்மையை மறைக்கின்றது, பார்வையை மட்டுப்படுத்துகின்றது, மனக்கிளர்ச்சிகள் மூலம் வழிநடத்தப்படுகின்றது. மனக்கிளர்ச்சி மூலமான செயற்பாடுகள் மிகவும் ஆபத்தான தீப்பற்றியெரியக் கூடிய மனம் போனபடியான தாறுமாறான செயல்களில் இறங்கத் தூண்டும்.

ஒருவருக்கு மதத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். ஆனால் பிரித்தறியும் அறிவை உள்ளடக்கிய புத்திசாலித்தனத்தை கைவிடக் கூடாது. இது எல்லா சமய போதகர்களாலும் ஊக்குவிக்கப்படும் ஒரு நடைமுறையாகும்.

உலகம் சுருங்கி பூகோளக் கிராமமாக மாற்றமடைவதை நாம் காண்கின்றோம். இவ்விதமாக மாற்றமடைந்து வரும் பூகோளக் கிராமத்திற்குள் நாம் சமய வேறுபாடுகளுடனேயே வாழ வேண்டியுள்ளது. சமய வேறுபாடுகளை நாம் விளங்கிக் கொள்ளாத போது அதனை நாம் எமக்கு விரோதமானதாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அடுத்த கட்டமாக நாம் அதனை எதிர்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் சமயங்கள் உடைந்த துணிக்கைகளாக மாற வேண்டி வரும்.

தற்கால பூகோள அமைப்பில் நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிடினும் வேறுபாடுகளை வேறுபாடுகளாகவே நோக்க வேண்டியுள்ளது. நவீன சமூக அமைப்பு பல்கலாசார, பல்சமய எனக் கூறப்படும் போதுநாங்கள்கோபப்படக்கூடாது.இவை யாவும் தற்காலத்தில் மட்டுமல்லாது எமது நீண்ட வரலாற்றிலும் காணப்பட்ட யதார்த்தமான நிலையாகும். இனிமேலும் மக்கள் ஏனைய கலாசாரங்களினதும் சமயங்களினதும் தாக்கங்களிலிருந்து பிரிக்கப்பட்டு தனிமையில் வாழ முடியாது.



நாங்கள் சீராக இயங்காவிடின் சமாதானமும் நல்லிணக்கமும் நிறைந்த உலகைப்பற்றிய எமது எதிர்பார்ப்புகள் ஒரு கனவாக மட்டுமே இருக்கும். சிலபோது கனவுகூட இல்லாமல் ஒரு கற்பனையாக மட்டுமே இருக்கும். எனவே நாங்கள் அடிமட்ட யதார்த்தங்களைப் புரிந்தவர்களாக விழித்தெழ வேண்டும்.

சமயம் ஒரு மனிதனின் தனிப்பட்ட விடயம். ஒவ்வொருவருக்கும் அவர் விரும்பும் சமயத்தைக் கடைப்பிடிக்கும் உரிமையுண்டு. ஒரு சமயத்திற்கு சேவையாற்றுவது என்பது அச்சமயத்தை நம்பிக்கையுடன் கடைப்பிடிப்பதாகும். எல்லோருக்கும் ஒரு சமயமே இருக்க வேண்டும் என்று எந்த சமயப் போதகரும் கூறியதில்லை.

சமயங்கள் என்பது அதனைப் பின்பற்றுவோரின் மகிழ்ச்சி மற்றும் நன்மைக்காக அச்சமயப் போதகர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட முயற்சிகளின் பலனேயாகும். எனவே ஏன் சமயத்தை விசனம், துக்கம், முரண்பாடு போன்றவற்றின் ஊற்றாக ஆக்கவேண்டும்?

இந்த வகையான ஞானம் ஊடாக அறிவுடை நிலையை நாங்கள் பின்பற்றுவதன் மூலம் முரண்பாடுகளும் மோதல்களும் இல்லாத வாழ்க்கையை வாழ முடியும். இதுவே வேறுபாடுகள் நிறைந்த உலகில் சமாதானமான சகவாழ்வுக்கான வழியாகும். நாங்கள் சமாதானமாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ விரும்பினால் இதுவே அதற்கான ஒரே ஒரு தேர்வு ஆகும்.

நிரந்தர சமாதானத்திற்கான சுதந்திரம் எம்மத்தியில் நிலவ வேண்டும். அதற்காக ஒவ்வொரு இலங்கையரும் இன்றைய 75வது சுதந்திர தினத்தில் திடசங்கற்பம் பூண வேண்டும்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# பிரித்தானியரிடமிருந்து விடுதலை பெற்றதும் கொண்டாடப்பட்ட முதலாவது சுதந்திர தினம்

**நாடே கொண்டாட்டத்தில் திளைத்திருந்தது. மக்கள் எல்லா இடங்களிலும் கூட்டமாக தேசியக்கொடிகளை கைகளில் ஏந்தியவாறு கூடியிருந்தார்கள். தூர இடங்களில் இருந்தும் அநேகமானோர் கொழும்புக்கு வந்திருந்தார்கள்.**

இலங்கை போக்குவரத்துச் சபை வாகனங்கள் இல்லாத காலத்தில் அவர்களுக்கு தனியார் பஸ் வாகனங்களே உதவின. ரயில் வண்டிகளில் தங்களால் முடிந்த அளவுக்கு சுதந்திர தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள வருபவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்கள்.

லேக் ஹவுஸ், துறைமுகம் உள்ளிட்ட கொழும்பின் கட்டடங்கள் அனைத்தும் சுதந்திரக் கொடியால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. 'ரேடியோ சிலோன்' நிகழ்ச்சிகளை அனைவரும் செவிமடுத்துக் கொண்டிருந்தனர். களனி ரஜமஹா விஹாரையிலிருந்து பிரித்தோதும் நிகழ்ச்சியும் அதில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் தண்டனை குறைக்கப்பட்டது. மேலும் சிறிய குற்றங்களைப் புரிந்த கைதிகள் 1886 பேர் மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டார்கள்.

அது மாத்திரமல்ல சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பாடசாலைகளில் அதிபர்களின் தலைமையில் மத வழிபாடுகளுக்கு முதலிடம் வழங்கப்பட்டு சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. வெளிநாட்டு தூதுவர்கள், விருந்தினர்கள் என முதலாவது சுதந்திரத்தினத்தை கொண்டாடுவதற்காக வருகை தந்திருந்தார்கள்.





இலங்கையின் சுதந்திர தினத்தின் பிரதம அதிதி இங்கிலாந்தின் ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் இளைய சகோதரர் க்ளோஸ்டர் பிரபு ஆவார். பிரித்தானியர்களால் கொண்டு செல்லப்பட்ட ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் அரசனின் சிம்மாசனம், கிரீடம்,வாள் உள்ளிட்ட அனைத்தையும் 1934ஆம் ஆண்டு மீளஅளிப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்நாட்டின் ஆளுநர் மாளிகையில் இருந்து ஊர்வலமாக அதிதிகள் தேசிய சுதந்திர தினம் கொண்டாடப்படும் சுதந்திர சதுக்கத்திற்கு ஊர்வலத்தில் அழைத்து வரப்பட்டார்கள். அதிதிகளுக்கு வழிநெடுகிலும் மக்கள் வாழ்த்துத் தெரிவித்தார்கள். கொழும்பு மேயர் உள்ளிட்ட உறுப்பினர்களும் அதில் இணைந்து கொண்டார்கள்.

கொழும்பு அளுத்கடை பிரதேசத்தில் இருந்து ஊர்வலத்தில் வந்த நீதிமன்ற நீதிபதிகளும் இந்த ஊர்வலத்தில் பர்சன் சந்தியில் இணைந்து கொண்டார்கள். சுதந்திர தின மேடை மிகவும் அழகாக உருவாக்கப்பட்டிருந்தது. அது இந்நாட்டின் அநுராதபுரம், பொலனறுவை அரச இராச்சியங்களை நினைவூட்டியது. அன்றைய அரச சபையின் தோற்றத்தை ஒத்திருந்தது.

சந்திரவட்டக்கல் கொண்ட படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் ஏறி வருபவர்களின் கண்களை கவரும் விதமாக விசேட மண்டபமொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் சிம்மாசனம், கிரீடம், அரச வாள் என்பன வைக்கப்பட்டிருந்தன. அந்த மேடைக்கு பிரதிநிதிகள் அழைத்து வரப்பட்டார்கள். தற்போது அனைவரும் அந்த சுப வேளையை எதிர்பார்த்து காத்திருந்தார்கள். ரேடியோ சிலோன் ஊடாக மல்வத்துமஹா நாயக தேரர், அஸ்கிரிய மஹாநாயக்க தேரர் ஆகியோர் நாட்டின் சுதந்திரம் பற்றி ஆற்றிய உரைகள் ஒலிபரப்பாகின. மதத்தலங்களில் மணியோசையுடன் இசைக்கருவிகளின் ஓசைகளும் வானைப் பிளந்தன.

காலை 10.30 க்கு க்ளோஸ்டர் பிரபு உள்ளிட்ட அதிதிகள் மண்டபத்துக்கு பிரவேசித்தவுடன் அரச பீரங்கி படையினரின் 21 மரியாதை வேட்டுக்கள் முழங்கின.

அதன் பின்னர் படையினரின் அணிவகுப்பு இடம்பெற்றது. அன்றைய தினம் தேசிய கீதமாக ஸ்ரீலங்கா மாதா பாலா யஸ மஹிமா கீதம் நொத்தாரிசான பி. பி இலங்கசிங்கவால் எழுதப்பட்டு லயனல் எதிரிசிங்கவால் இசையமைக்கப்பட்டு இருந்தது. இந்த எளிமையான சுதந்திர தின கொண்டாட்டம் 10 நிமிட நேரமே நடைபெற்றது.

அன்று பாடசாலை சிறுவனாக இருந்த சோம ஸ்ரீ கஸ்தூரி ஆராய்ச்சி அதனை இவ்வாறு விபரித்தார். "பெப்ரவரி நான்காம் திகதி எமது பாடசாலையின் அதிபர் பாடசாலை மைதானத்தில் நடப்பட்ட தூணில் தேசியக் கொடியை ஏற்றினார். அதன் பின்னர் எல்லோரும் கரகோஷம் எழுப்பினோம். எமது பாடசாலையில் உயர்வகுப்பு மாணவிகள் லமா சாரி அணிந்து கொண்டு எமது கைமுனு, கஜபா, விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற அரசர்கள் மற்றும் கெப்பட்டிபொல போன்ற வீரர்களினதும் புகழ் பற்றி பாடினார்கள். அதைக் கேட்ட எமது பிஞ்சு மனங்களில் தேசாபிமானம் துளிர் விட்டது".

**நுவன் மகேஷ் ஜயவிக்ரம...**
*தமிழில்:* **வீ.ஆர்.வயலட்**

# சிங்கப்பூராக மாறுமா இலங்கை?

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 25 ஆண்டுகால வியூகம்





சிங்கப்பூராக வேண்டும்! இந்த வாசகம் சாதாரண பொதுமக்களால் அநேகமான வேளைகளில் முணுமுணுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போதைய இலங்கையின் நிலை என்பது மிகமோசமானது. பொருளாதார ரீதியில் அதளபாதாளத்தில் வீழ்ந்துள்ளோம். இதிலிருந்து மீண்டெழ வேண்டும். இதுதான் தற்போதிருக்கும் ஒரே வழி.

மிக நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கை தனது 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. மிக எளிமையாக இந்த சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. ஒருபக்கம் இதற்கும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதற்குச் செலவிடும் பணத்தில் உணவின்றித் தவிக்கும் மக்களுக்கு உணவளிக்கலாம் என்று எதிர்க்கட்சிகளும் சாதாரண பொது மக்களும் முணுமுணுப்பதையும் கேட்க முடிகிறது. பொருளாதார நெருக்கடிக்கும், எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. '75 ஆவது சுதந்திர தினம் என்பது இலங்கையின் நூற்றாண்டு சுதந்திர தினத்திற்கான முதல்படி' என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார் .

2048 இல் இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாக மாற வேண்டும். இதற்காக உழைக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் இலக்காக உள்ளது.

இந்நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்துள்ளார். பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்குப் பின்னர் பெப்ரவரி 8ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடுகிறது. இதன்போது 2048ஆம் ஆண்டு சுதந்திர தின நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் வரை நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் புதிய கொள்கைள் மற்றும் சட்டங்கள் பற்றி ஜனாதிபதி நாட்டுக்கு அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பீட்டளவில் வளர்ச்சியடையாத வறுமையில் வாடி விவசாய சமுதாயமாக இருந்த சிங்கப்பூரை பிரதமர் லீ குவான் யூ 25 வருடங்களில் உலகின் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக மாற்றிக் காட்டினார். அதேபோன்று இலங்கையையும் 25 வருடங்களில் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் நோக்கத்தை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டிருக்கிறார். நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தனது நிலைப்பாட்டை அவர் வெளிப்படையாகத் தெரிவித்து வருகிறார். இதற்காக அவர் முனைப்புடன் செயல்படுவதையும் பார்க்க முடிகிறது.

புதிய வரிக் கொள்கைக்கு எதிராக எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுகின்றன. வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்த முடியாது என்று கூறி, அரசாங்கம் வங்குரோத்து நிலையைப் பிரகடனம் செய்தது. இதனால் பணவீக்கம் 80 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

தற்போது வரிகள் 36 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. அதனால் பெரும்பாலானோரின் வருமானம் குறைந்துள்ளது. ஆனால், 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய வரிச் சலுகையே பொருளாதார வீழ்ச்சியின் முதற்படியாக அமைந்தது. வரி குறைக்கப்பட்டதாக அப்போது மக்கள் ஆரவாரம் செய்து அதனை வரவேற்றனர். கொண்டாடினார்கள். ஆனால் வரிகள் குறைக்கப்பட்டதால் அரசாங்கம் வருமானத்தை இழந்தது. வரி குறைக்கப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. ஏற்கனவே வருமான வரி செலுத்தியவர்கள் கூட, இந்த இரண்டு வருடங்கள் அந்த வரிகளை செலுத்தவில்லை. தற்போது மீண்டும் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதுவும் 36 சதவீதம் வரி அறவிடப்படுகிறது. இதற்கு எதிர்ப்புக்கள் அதிகரித்த போதிலும், அரசாங்கம் எந்த நெகிழ்வுப் போக்கையும் காட்டவில்லை. இலங்கையில் வரி அறவீடுகள் மூலம் அரசாங்கம் பெறும் வருமானம் சுமார் 8 வீதத்திற்கும் குறைவாகவே இருக்கிறது. ஆனால் ஏனைய நாடுகளில் 20 – 25 சதவீதமாக வரி வருமானம் காணப்படுகிறது. மறைமுக வரி விதிப்புக்கள் குறைக்கப்பட்டு, நேரடி வரி விதிப்புக்கள் மூலம் விளிம்பு நிலையில் இருக்கும் மக்களுக்கு சமுர்த்தி போன்ற நிவாரணங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதியின் அக்கிராசன உரையில் 25 ஆண்டுகளுக்கான புதிய கொள்கைகள், அவற்றுக்குத் தேவையான புதிய சட்டங்கள் ஆகியவற்றை அறிமுகம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளை வியப்புடன் பார்க்கும் மக்கள், அந்நாடுகளில் உள்ள நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு பின்நிற்கின்றனர். அரசியல் கட்சிகளின் போலிப் பிரசாரங்களே மக்களின் இந்த அறியாமைக்குக் காரணமாக இருக்கிறது. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையான தீர்மானங்களும், கொள்கை வகுப்புக்களும் அடுத்த 25 வருடங்களுக்கான முதலீடாக இருக்கும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இரும்புக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் மட்டுமே இதுபோன்ற வீழ்ந்து கிடக்கும் நாடுகளுக்கு எழுந்து நிற்க முடியும்.

சிங்கப்பூரின் இன்றைய வளர்ச்சியை அனைவரும் மெச்சினாலும், சிங்கப்பூரின் ஆரம்பம் என்பது சவால் மிக்கதாகவே இருந்தது. இலங்கையும் தற்போது சிங்கப்பூரைப் போன்று 25 ஆண்டுத் திட்டங்களுடன் தனது 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகள், சட்டதிட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டு, தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே சிங்கப்பூர் போன்ற வளர்ச்சியும், மாற்றமும் இலங்கையில் ஏற்படும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இலங்கையில் நீண்டகாலமாக இழுபறி நிலையில் உள்ள தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ரணில் விக்கிரமசிங்க இருப்பதைப் பார்க்க முடிகிறது. இனவாத, தேசியவாதத்திற்குப் பணிந்துபோன அரசாங்கங்கள் மற்றும் அரசியல் தலைவர்களினால் நீண்டகாலமாக இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண முடியாமல் போனது. இலங்கையின் இன, மத பிளவுகளின் பின்னணியில் அரசியல் மறைந்திருந்தது. மக்களிடமிருந்து வாக்குகளைக் கொள்ளையிடுவதற்கு இவை ஆயுதங்களாக பயன்படுத்தப்பட்டன. விட்டுக் கொடுப்புடன் பிரச்சினைக்குத் தீர்வுகாண இதுவரை எந்தவொரு தலைவரும் முன்வரவில்லை. 13ஆவது அரசியலமைப்பின் மூலம், தீர்வு என்ற விடயத்தையும் இதற்கு முன்னர் இருந்தவர்கள் குப்பைக் கூடையில் போட்டிருந்தனர். இந்தியாவை சமாளிப்பதற்காக அதனை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதைப் போல பாசாங்கு செய்துகொண்டிருந்தனர். ஆனால், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தத்தின் ஊடாக பிரச்சினைக்குத் தீர்வுகாண தயார் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார். பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தீர்வுப் பொதியை ஏற்றுக்கொண்டால், எதிர்ப்பு அரசியல் முன்னெடுக்கப்பட்டு, தமக்கிருக்கும் வாக்குகள் குறைந்துவிடும் என்ற கவலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது.

இனநெருக்கடிக்கு தீர்வு மற்றும் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பில் பொது உடன்பாட்டை எட்டுவதற்காக கூடிய சர்வகட்சி கூட்டத்தைக்கூட பிரதான எதிர்க்கட்சி புறக்கணித்திருந்தது. இக்கூட்டத்திற்கு வந்தால், தமது வாக்கு வங்கி சரிந்துவிடும் என்ற நிலைப்பாட்டில் சஜித் பிரேமதாச இதனைத் தவிர்த்திருக்கிறார். தற்போது 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தத் தயார் என்று ரணில் விக்கிரமசிங்க அறித்திருப்பதற்கு தெற்கில் பௌத்த பிக்குகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

உண்மையில் அரசியல் ரீதியாக செயல்படும் பௌத்த பிக்குகள் மாத்திரமே தமது அரசியலுக்காக இப்போர்க்கொடியைத்தூக்கியுள்ளனர். ஆனால், இன்னமும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணாமல், இழுத்தடிப்புச் செய்வது, நாட்டை மேலும் பின்நோக்கி நகர்த்துவதற்கு வழிவகுக்கும். இதனை நன்கு அறிந்துள்ள ரணில் விக்கிரமசிங்க, இதற்கான தீர்வைக் காண்பதற்கான முழு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

வளர்ந்து நிற்கும் சிங்கப்பூரில் சாதி, இன, மத வேறுபாடுகள் இன்றி மக்கள் சிங்கப்பூரியன்களாக இணைந்து அந்நாட்டைக் கட்டியெழுப்பியுள்ளனர். இலங்கைக்கும் இதே வழியில் தான் விமோசனம் இருக்கிறது. இதற்காக உழைக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். அதுவும் இலங்கையராக ஒன்றிணைந்து உழைப்பது மட்டுமே தற்போது விழுந்துள்ள அதள பாதாளத்தில் இருந்து நாட்டை மீள்வதற்கு ஒரே வழி! இவ்வழியைப் பின்பற்றினால் மட்டுமே 2048 ஆம் ஆண்டிலாவது உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில் இலங்கை வளர்ந்திருக்கும்.

**ஹரேந்திரன்**

# சுதந்திரத்தின் பின்னர் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சி





ஆங்கிலேயரின் 133 வருடகால ஏகாதிபத்தியத்தில் இருந்து 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திரம் பெற்ற இலங்கை, இவ்வருடம் 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. இது பவள விழாக் கொண்டாட்டமாகும்.

இந்த சுதந்திர தினக் கொண்டாட்டம், 'ஒன்றாக எழுவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் காலிமுகத்திடலில் நடைபெறுகிறது.

சுதந்திரமடைந்து 75 வருடங்களை கடந்துள்ள எமது நாடு பல்துறைகளிலும் பாரிய முன்னேற்றங்களை அடைந்துள்ளது. அவற்றில் கல்வி துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இலவசக்கல்வி கொள்கையை முன்னெடுக்கும் இந்நாட்டில் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழக உயர்கல்வி வரையும் இலவசமாகவே கல்வி பெற்றுக்கொடுக்கப்படுகிறது. இதற்கு வித்திட்டவர் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர ஆவார். அவர் இந்நாட்டு இலவசக்கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

இதன் பயனாக தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே அதிகளவில் எழுத்தறிவு வீதத்தைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குகிறது. இந்நாட்டு சனத்தொகையில் சுமார் 98 சதவீதமானோர் எழுத்தறிவு பெற்றவர்களாக உள்ளனர். அதேநேரம் 10ஆம் வகுப்புக்கு மேல் கல்வி கற்பவர்களாக தற்போது 94 சதவீதமானோர் காணப்படுகின்றனர். அதனால் 5 வயது முதல் 16 வயது வரை அனைவரும் கல்வி பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் ஆரம்பக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் வழங்கப்படுவதோடு, அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகக் கல்வி நடைமுறையிலுள்ளது.

இந்நாட்டில் ஆண், பெண் இரு பாலாரும் கற்றுத் தேர்பவர்களாக உள்ளனர். அவர்கள் உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். அதன் பயனாக கல்வியறிவில் நாகரிகம் மிக்கதொரு நாடாக இலங்கை மிளிர்கிறது. இந்த உன்னதமான பெருமை எமது நாட்டுக்குக் கிடைப்பதற்குக் காரணமாக அமைவது பாராபட்சமின்றி அனைவருக்கும் வழங்கப்படும் இலவசக் கல்வியேயாகும்.

எமது நாட்டு மக்களின் வாழ்க்கை முறையிலும் கலாசாரத்திலும் இலவசக்கல்வி முக்கிய பங்காற்றத் தொடங்கியது.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி இலவச பாடப் புத்தகங்கள் 1980 முதல் வழங்கப்படுவதோடு 1993 இல் முதல் மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இலவச சீருடைக்குப் பதிலாக 2015இல் பண வவுச்சர் வழங்கும் முறைமை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

அதேநேரம் மாணவர்களின் தேக ஆரோக்கியத்தையும் போஷாக்கு மட்டத்தையும் பேணும் வகையில் ஆரம்பத்தில் இலவசமாக பிஸ்கட் மற்றும் பசும்பால் வழங்கப்பட்டதுடன், அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரணதுங்க பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் மாணவர்களுக்கு இலவசமாக சத்துணவு வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

பாடசாலைக் கல்வியில் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரம், உயர்தரப் பரீட்சைகளை நடத்தி, அவர்களை உயர் நிலைக்கு கொண்டு செல்லும் நடைமுறையும் எமது நாட்டில் காணப்படுகின்றது. அத்துடன், மாணவர்கள் கல்வியில் மாத்திரமின்றி ஏனைய செயற்பாடுகளிலும் ஆளுமை மிக்கவர்களாகச் சிறந்து விளங்கும் வகையில் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, கலை விழா உள்ளிட்ட செயற்பாடுகளும் பாடசாலை, வலயம், கோட்டம், மாவட்டம், மாகாணம் எனும் மட்டங்களில் நடத்தி மாணவர்கள் கல்வியுடன் இணைந்த பல்வேறு துறைகளிலும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி முறையான பாடத்திட்ட முகாமைத்துவம், இணைப் பாடத்திட்ட செயற்பாடுகள், மாணவர்களின் கற்றல் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக கற்றல் மற்றும் கற்பித்தலின் தரத்தை விருத்தி செய்தல், அவற்றை மதிப்பீடு செய்தல், மாணவர்கள் மத்தியில் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவப் பண்புப் பயிற்சித் திட்டங்கள் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

மேலும், இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள், பாடசாலைகளை பலப்படுத்துவதற்காக தொடர்ச்சியான விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், எமது நாட்டுப் பிள்ளைகளினுடைய வாழ்க்கைத் தேர்ச்சியாகவும் அவர்கள் மொழி ஆளுகையில் சிறந்து விளங்கும் வகையிலும் ஆங்கில மொழியை விருத்தி செய்யும் வேலைத்திட்டம் கொண்டு வரப்பட்டது. தற்போது தொழில்நுட்ப யுகமாக மாறியுள்ளதினால் நகர்ப்புறம் மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குத் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப வசதிகளை வழங்கியுள்ளதுடன், அப்பிரிவில் சேவையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காகத் தகவல் தொழில்நுட்பத் தொழில்சார் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தவிர, பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளை முறைசாராக் கல்வியில் இணைத்துக் கொள்ளும் வகையில் முறைசாராக் கல்வி வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தியுள்ளது. விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளீட்டுக் கல்வி முறையை பயன்படுத்துதலும் அவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

மாணவர்களுக்கு கல்வியறிவை புகட்டி வரும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒக்டோபர் 6ஆம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதுடன், ஆசிரியர்களின் மகத்தான சேவையைப் பாராட்டி அவர்களுக்கு குரு பிரதீபா பிரபா விருதும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பாடசாலை மட்டத்தில் கல்வித்துறையில் சிறந்த வளர்ச்சியை எட்டி வரும் எமது நாடானது வளர்முக நாடாகக் காணப்படும் போதிலும், 17 அரசாங்கப் பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ளது. அரசாங்கப் பல்கலைக்கழகத்துக்கு நுழைய முடியாத மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்குவதற்காக திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வியியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் தோற்றம் பெற்றதுடன், பல்வேறுபட்ட புதிய பாடநெறிகளும் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


1980 காலப்பகுதியில் கல்வி அமைச்சராகப் பதவி வகித்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவினால் கல்வியின் மறுமலர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றிலொன்றே தேசிய கல்வியியல் கல்லூரி முறை கொண்டு வரப்பட்டமையாகும்.

முப்பது வருடகால யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், கொவிட் 19 பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றினால் எமது நாடு பாரிய பாதிப்புகளை தொடர்ச்சியாக எதிர்நோக்கி வந்தாலும், பாடசாலை மாணவர்களுக்கான இலவசக் கல்வித் திட்டம் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆர். சுகந்தினி**



# பெருமையுடன் கொண்டாடப்படும் சுதந்திர பவளவிழா



# பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும் இலங்கைத் திருநாட்டின் 75 வருடங்கள்

இலங்கைத் திருநாடு சுதந்திரம் பெற்று 75 வருடங்களாகும் நிலையில், சுதந்திர இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் வழமை போன்று இம்முறையும் பெருமையுடன் நடைபெறுகின்றன.

நாட்டில் நிலவும் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நமது மூதாதையர்கள் அடிமைத்தனத்திலிருந்து தாய்த்திருநாட்டை வெற்றி கொண்ட ஞாப கார்த்தமாகவும் அவர்களுக்கு வழங்கப்படும் கௌரவமாகவும் இம்முறை நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படுகி றது.

நாட்டிற்கான செலவினங்கள் அதிகரித்து, வருமானம் பெரும் நெருக்கடிக்குள்ளா கியுள்ள நிலையிலும், நாட்டின் பேரபி மானத்தை பறைசாற்றும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களை தவிர்க்க முடியாத சூழ்நிலையில், செலவினங்கள் கட்டுப்ப டுத்தப்பட்டு எனினும் நாட்டின் தனித்து வத்தையும் பெருமையையும் பறைசாற்றும் வகையில் இம்முறை சுதந்திர தினத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

உலகின் பார்வையில் பல்வேறு கோணங் களிலும் சிறப்புப் பெறும் நாடான இலங்கை என்றும் தமது தனித்துவத்தையும் பேரபிமா னத்தையும் விட்டுக் கொடுக்காது ஏனைய சர்வதேச நாடுகளுடன் சரி சமமாக தன்னை இனங்காட்டி வந்துள்ளது.

யுத்தங்களும் பேரழிவுகளும் இயற்கை அனர்த்தங்களும் நாட்டை ஆட்டிப்படைத்த போதும், நாட்டின் தனித்துவம் செழுமை மற்றும் நற்பெயருக்கு எந்தவித களங்கமும் ஏற்படாத வகையில் நாடு முன்னோக்கி பய ணித்து வருகிறது.

உலக அளவில் ஒருபோதும் எதிலும் சளைக்காத நாடாக தொடரும் பயணத்தில் சுதந்திர இலங்கையின் 75 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

அந்த வகையில் பொருளாதார நெருக் கடிகளினால் சுதந்திர தினக் கொண்டாட் டங்கள் நடத்தப்படவில்லை. அதனை நடத்துவதற்குக் கூட வழியில்லாத நிலையில் நாடு காணப்படுகின்றது என்ற உலகின் பார்வையை தவிர்க்கும் வகையில் அனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்த 75வது சுதந்திர தினம் கொண்டாடப்



படுகிறது.

அத்துடன் நாடு பெரும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மெல்ல மெல்ல தலை தூக்கி வரும் நிலையில், அதற்கு பெரும் பங் களிப்பை வழங்கி வரும் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படுவதை தடுக்கவும் இம்முறை கொண்டாடப்படும் சுதந்திர தின நிகழ்வுகள் வழிவகுக்கும் என்றால் அது மிகையில்லை.

தேசபிதா டி.எஸ்.சேனநாயக்க முதல் இன்று இந்த நாட்டை ஆளும் தலைவர்கள் வரை தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக வும் அதன் பெருமையையும் தனித்துவத் தையும் கட்டிக் காப்பதற்காகவும் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ள னர்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் நாட்டின் தேவை மற்றும் அந்தந்த காலத்திற்கு பொருத்தமான பல்வேறு திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு அவ்வப்போது நாட்டை ஆண்ட தலைவர்களினால் முன்னெடுக்கப் பட்டு வந்துள்ளது.

அந்த வகையில் தற்போதைய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க பெரும் வீழ்ச் சிக்கு உள்ளாகியிருந்த நாட்டின் பொருளா தாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அதே வேளை, நாட்டின் எதிர்கால முன்னேற்றத் திற்கு பாரிய பங்களிப்பை வழங்கக்கூடிய முக்கியமான அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பெரும் அர்ப் பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

2022 ஆம் ஆண்டு நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு ஆண்டாகும். நாட்டில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களுக்கு மத்தியில்

நாடு மிகவும் இக்கட்டான நிலையில் நிர்க்கதியாகி காணப்பட்டபோது, அத்த கைய ஒரு சூழ்நிலையில் இந்த நாட்டை பொறுப்பேற்க அனைத்து தலைவர்களும் பின் வாங்கிய நிலையில் துணிச்சலுடன்

நாட்டைப் பொறுப்பேற்று நிலை மைகளில் மாற்றம் ஏற்படுத்திய சிறந்த அனுபவமும் விவேகமும் உள்ள அரசியல் தலைவராக ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவை குறிப் பிட முடியும்.

எமது நாட்டை மட்டுமன்றி முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அவரது செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

குறிப்பாக நாட்டில் நிலவிய அத்தியா வசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, உணவு பராமரிப்பில் ஏற்பட்டிருந்த பின்ன டைவு, நாட்டின் ஏனைய அனைத்து துறைக ளையும் செயல்படுத்தக் கூடிய எரிபொருள், எரிவாயு போன்ற முக்கிய தேவைகளையும் மக்கள் அன்றாடம் எதிர்கொண்ட வரிசை யுகத்தையும் மாற்றி, பல்வேறு அசௌகரி யங்களுக்கு மத்தியிலும் மக்கள் இயல்பாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய பெருமைக்குரியவராகவும் அவர் பார்க்கப்ப டுகின்றார்.



நாட்டின் அனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாட்டினதும் போராடி பெற்றுக் கொண்ட சுதந்திரத்தினதும் பெருமையை பறைசாற்றும் சுதந்திர தின கொண்டாட்டங் களை நடத்த வேண்டும் என்ற அவரது தீர்மா னம் அதற்காக மேற்கொண்ட செயற்பாடுக ளும் பிரமிக்கத்தக்கவை.

அந்த வகையில் இம்முறை இலங்கைத் திருநாட்டின் 75 வது சுதந்திர தினம் நாட்டிற் கும் நாட்டு மக்களுக்கும் பல்வேறு நன்மை களை கொண்டு வரும் வகையில் திட்டமி டப்பட்டு நடத்தப்படுகிறது என்பதையும் எவரும் மறுக்க முடியாது.

சுதந்திர தினத்தையொட்டி இம்முறை பல விசேட திட்டங்களும் நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றன.

நாடளாவிய 335 பிரதேச செயலாளர் பிரி வுகளையும் உள்ளடக்கும் வகையில் சுமார் 50,000 இளைஞர், யுவதிகளையும் இணைத் துக் கொண்டதாக பசுமை நகரங்களை கட் டியெழுப்பும் திட்டம் இந்த சுதந்திர தினத் தோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிந்தனையில் நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதாக இந்த திட்டம் முன்னெடுக்கப் படுகின்றது.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் இளைஞர் பாராளுமன்றம் ஆகியன ஒன்றிணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளன.

இதற்கு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை மற்றும் அதனோடு இணைந்த அனைத்து நிறுவனங்களின் பங்களிப்புக ளும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் விடயத்தோடு சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் தொண்டு நிறுவனங் களின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. மற்றும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவ தற்கு ஐக்கிய நாடுகள் தன்னார்வ தொண்டர் களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இம்முறை சுதந்திர தினத்திற்கு முன்னோ டியாக விசேட வழிபாடு ஒன்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் இடம்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய மத வழிபாடு கள் மற்றும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் வழமையை விட வித்தியாசமான வகையில் கலாசார நிகழ்வுகள் பல சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பத வியைப் பொறுப்பேற்றதன் பின்னர் நடை பெறும் முதலாவது சுதந்திர தின நிகழ்வாக இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்ப டுகிறது.



## பொருளாதார வீழ்ச்சிக்குள்ளான நாட்டை மீளக்கட்டியெழுப்பும் ஆற்றல் மிகுந்த தலைவர்; நாட்டில் நெருக்கடிகள் படிப்படியாக நீங்கும் அறிகுறிகள்

# ஐரோப்பியரின் ஆதிக்கத்திலிருந்து, அனைத்து இனமக்களாலும் மீட்டெடுக்கப்பட்ட தாயக சுதந்திரம்

**சுதந்திரத்தின் வரலாற்றுக் குறிப்பு:**

எமது நாட்டின் சுதந்திரத்திற்கு ஒரு சிறப் பான வரலாறு காணப்படுகிறது. கி.பி 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரினால் இலங் கையின் கரையோரப் பிரதேசங்கள் கைப்பற் றப்பட்டன. அதனைத்தொடர்ந்து கி.பி 1602 ஒல்லாந்தரின் ஏகாதிபத்தியத்துக்கு இலங் கையர்கள் அடிமைப்பட்டனர்.

கி.பி 1766 ஆம் ஆண்டளவில் பிரித்தானி யரின் ஆக்கிரமிப்பின் காரணமாக கந்த உட ரட்ட சிங்களவர்கள் என்று அழைக்கப்படும் மலைநாட்டு சிங்கள மக்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழ்ந்த இலங்கை மக்களும் மீண்டும் அடிமை நிர்வாகத்திற்கு உட்பட வேண்டி ஏற்பட்டது.



கந்த உடரட்ட சிங்களவர்கள் என்று அழைக்கப்படும் மலைநாட்டு சிங்கள மக் களின் பிளவு அதிகார குழுக்களினால் 1815 ஆம் ஆண்டளவில் உடரட்ட என்ற மலைய கப் பிரதேசத்தையும் எந்தவித சிரமமுமின்றி பிரிட்டன் தமது நிருவாகத்திற்கு உட்படுத் தியது. இதன் பின்னர் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் நிருவாகத்திற்குள் கொண்டு வரப்பட்டது.

இலங்கையர்களின் சுதந்திரப் போராட்டம் இங்கிருந்தே ஆரம்பமாகிறது. 1818 ஆம் ஆண்டு உடரட்ட என்ற மலையக பெருங் கலகம், 1823 ஆம் ஆண்டு கொஸ்வத்தை கிளர்ச்சி, 1826ஆம் ஆண்டு பிம்தென்னே கிளர்ச்சி, 1835 ஆம் ஆண்டு மல்வத்து விகாரையின் கிளர்ச்சி, 1848ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி முதலான கிளர்ச் சிகள் நாட்டு மக்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டவையாகும்.

1818 ஆம் ஆண்டு கிளர்ச்சியினால் சிறிய அளவில் அல்லது ஆங்கிலேயரின் நிர்வாகத் தில் அவர்களது கொடூரமான நிர்வாகத்தில் தளர்வை மேற்கொள்ள நேரிட்டது.

1831ஆம் ஆண்டில் அரசாங்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கோல்புறூக் ஆணைக்குழுவினர், முதல் முறையாக அவர்களது ஆட்சி முறையில் மறுசீரமைப்பு ஆலோசனையை சமர்ப்பித் தனர். பிரித்தானியர்களின் இந்த முயற்சி பெருமளவில் வெற்றியடையவில்லை.

1848 ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கி ளர்ச்சி ஆரம்பமானதுடன் அது இலங்கை சுதந்திரப் போராட்டத்தின் இறுதி கிளர்ச் சியாக அமைந்தது. 1796ஆம் ஆண்டில் இலங்கையின் ஒரு பகுதி மாத்திரம் பிரிட்ட னின் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படுத் தப்பட்டிருந்தது. அதன் பின்னர் 1815 ஆம் ஆண்டில் முழு நாடும் பிரிட்டனின் நிர்வா கத்திற்கு உட்பட்டிருந்த யுகம் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி முடி வுக்கு வந்தது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத் தது. சுதந்திரம் கிடைத்த பின்னர் கடந்த 72 வருட காலப்பகுதியில் 1948 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு இரத்து செய்யப்பட்ட பின்னர் இரண்டு அரசியல் யாப்புகள் மூலம் நாடு முன்னெடுக்கப்பட்டது.

இதில் முதலாவது 1972 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மக்கள் குடியரசு யாப்பு ஆகும். அத்தோடு இரண்டாவது 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல மைப்பாகும்.


வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்து தாய் நாட்டின் இறைமைக்காக இரத்தம் சிந்திய வர்கள் மற்றும் உயிர்த் தியாகம் செய்தவர்க ளின் எண்ணிக்கை எண்ணிலடங்காதவை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எமது தாய் நாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நாள் தொடக்கம் நாட்டு மக்கள் சுதந் திரத்திற்காக மேற்கொண்ட அளப்பரிய அர்ப் பணிப்பின் பெறுபேறே இன்று நாம் அனுப விக்கும் சுதந்திரமாகும்.

அடிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு கிளர்ச்சிக்கு மத்தியில் உயிரைத் தியாகம் செய்த பத்தா யிரம் பேரான தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் போன்ற நாட்டுப் பற்று கொண்ட அனைவரது அர்ப்பணிப்பையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள், காலத்தால் மறக்க முடியாத இந்த நாட்டு மைந்தர்கள்.

அதன் பெறுபேறாக எதிர்காலத்தில் நாடு சிறந்த பயன்களையும் முன்னேற்றத்தையும் பெற்றுக் கொள்வதற்கு பின்புலத்தை வகுப் பது தற்போதைய யுகத்தின் தேவையாகும்.

அதனை கருத்திற் கொண்டு நாட்டை ஆளும் தலைவர்களும் நாட்டு மக்களும் தமது அர்ப்பணிப்பையும் உழைப்பை யும் வழங்க வேண்டியது நாட்டிற்கான மாபெரும் பொறுப்பாகும்.



லோரன்ஸ் செல்வநாயகம்...


75
தேசிய சுதந்திர தினத்தை
அபிமானத்துடன் கொண்டாடுவோம்
“ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கௌரவமான வரலாற்றுக்கு உரிமை
கோரும் எமது இலங்கைத் தாய் நாட்டின் 75ஆம் சுதந்திரத்தை கொண்டாடும்
இவ் வேளையில் தாய் நாட்டின் முன்னேற்றத்தை கருதி இரவு பகலாக வியர்வை சிந்தி
கௌரவமாக வெளிநாட்டில் கடமையாற்றும் சகல
இலங்கையருக்கும் உளப் பூர்வ வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றோம்.
எமது தாய் நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு இரத்தம், வியர்வை, கண்ணீர்
மாத்திரமின்றி வாழ்கையையும் அர்ப்பணித்த வீரர்கள் சகலரையும் இவ்வேளையில் கௌரவத்துடன் நினைவுகூர விரும்புகிறோம்.
இவ்வாறு முன்னைய வீரர்கள் ஆக்கிரமிப்பாளர்களின் சவால்களுக்கு முகம்கொடுத்து தாய்நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றுக்
கொண்டது போலவே ஒரு போதும் இல்லாதவாறு தற்போது நாம்
எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களுக்கு முகம்கொடுத்து தாய்நாட்டில் பொருளாதார
சௌபாக்கியத்தை வெற்றி கொள்ளும் போராட்டத்தில் 75 ஆவது சுதந்திரத்தை கொண்டாடும்
இவ்வேளையில் தோல் கொடுப்பது. வெளிநாட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ள
கௌரவான இலங்கைப் புலம்பெயர் சமூகமாகும்.
நாட்டின் பெறுமதியான வளமான மனித வளம் ஆகிய நாம் சாதி, மத. இன பேதத்தை மறந்து
இலங்கையராக முன்வந்து முழு உலக மக்களுடனும் எமது தொடர்புகளை மேம்படுத்தி
சமாதானம் சகவாழ்வு மற்றும் பொருளாதார சௌபாக்கியத்துடனான வளமுள்ள தாய் நாடாக எமது நாட்டை
கட்டியெழுப்புவதற்காக சகலரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம் ”
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# சுதந்திர இலங்கையின் பொருளாதாரம் கடந்து வந்த பாதை ஒரு பார்வை



கலாநிதி. எம். கணேசமூர்த்தி
பொருளியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்



1948 இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பொழுது அதன் பொருளாதாரம் பிரித்தானியக் காலனித்துவக் கட்டமைப்பில் காணப்பட்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிக நல்ல நிலையில் இருந்தது என்பதை பொருளாதார வரலாற்றாசிரியர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

காலனித்துவத்தின் கீழ் என்னென்ன நல்ல விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டனவோ அவற்றுள் பல இலங்கையிலேயே முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது தொடர்பிலான பிரேரணை பிரித்தானியப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது இலங்கை சுதந்திரம் பெறத்தகுதியான நாடு என்பதை சிலாகித்து பிரேரணையை ஆதரித்திருந்தனர்.

ஆனால் 1919களில் இலங்கையில் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்த வாக்குரிமையை வழங்கும் யோசனை முன்வந்த போது மெக்கலம் தேசாதிபதி இலங்கை மக்கள் வாக்களிக்கும் அளவுக்கு அரசியல் ரீதியில் முதிர்ச்சியடையவில்லை எனவும் அதனால் எதிர்காலத்தில் ஆட்சியதிகாரம் ஒருசில குடும்பங்களின் கைகளில் சிக்குப்படும் நிலை ஏற்படும் என்றும் எச்சரித்திருந்தார்.

எவ்வாறாயினும் 1931இல் சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டு 1948இல் சுதந்திரம் பெற்றபோது 17வருட கால ஜனநாயக பாரம்பரியம் கொண்ட ஒரு நாடாக இந்நாடு இருந்தது. பிரித்தானியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட வெஸ்ட் மினிட்டர் ஆட்சிமுறை இலங்கையிலும் நடைமுறையில் இருந்தது. சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்டு ரோமன் டச்சு சட்டமுறைமை நடைமுறையில் இருந்தது. ஆங்கிலம் கற்ற தொழில் ஒழுக்கம் மிக்கதொரு அரச அதிகாரவர்க்கம் நாட்டில் காணப்பட்டது. அவுஸ்திரேலியா அல்லது தென்னாபிரிக்காவைப் போல இலங்கை ஒரு குடியேற்றக் காலனியாக இருக்கவில்லை. அதனால் பிரித்தானியரின் ஆட்சியை ஆங்கில மொழிமூலம் கல்விகற்ற இலங்கையைச் சேர்ந்த உள்நாட்டு அதிகார வர்க்கத்தினரே நடைமுறைப்படுத்தினர். இதனால் ஆரம்பத்திலேயே உள்நாட்டவர்களை ஆங்கிலக் கல்விக்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் பழக்கப்படுத்தினர். அதனால் சுதந்திரம் பெறும் போது ஆங்கிலேய கலாசாரப்பண்புகளுடன் கூடிய மத்தியதர வகுப்பொன்று இலங்கையில் காணப்பட்டது. ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்திய அதேவேளை உள்ளூர்வாசிகள் பிரிவேனாக்கல்வி முறையூடாக சிங்களமொழிக் கல்வியையும் குருகுலக்கல்வி முறையூடாக தமிழ்மொழிக் கல்வியையும் மத்ரஸா கல்வி முறையின் ஊடாக அரபு மொழியிலான கல்வியையும் பயிற்றுவித்தனர்.

இலங்கையில் பெருந்தோட்ட முறைமையினை ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய போது தொழிலாளர்களின் சுகாதார தேவைகளுக்கான மேலைத்தேய மருத்துவ முறைமையை அறிமுகப்படுத்திய போதிலும் பின்னர் அதனை நாடுமுழுவதும் விஸ்தரித்து சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் அறிமுகப்படுத்தியிருந்தனர்.

ஆகவே சுதந்திரம் பெற்றவேளை சார்பளவில் இலங்கையின் சமூகக் குறிகாட்டிகள் நல்ல நிலையில் இருந்ததோடு இக்காலப்பகுதியில் மக்களின் வாழ்க்கைத் தரமும் ஏனைய காலனித்துவ நாடுகளை விட நல்ல நிலையில் இருந்தது. பெருந்தோட்டத்துறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதனையொட்டி ஆரம்பிக்கப்பட்ட நெடுஞ்சாலைப் போக்குவரத்து வசதிகளும் புகையிரதப் போக்குவரத்து வசதிகளும் நாட்டின் பிரதான பகுதிகளை இணைக்கும் வண்ணம் விஸ்தரிக்கப்பட்டிருந்தன. வங்கிச்சேவைகள், காப்புறுதி, களஞ்சியப்படுத்தல், தபால் சேவை மற்றும் தொலைத் தொடர்புச் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆசியாவிலேயே முதன் முதலில் இலங்கையிலேயே வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிடலாம்.

இலங்கையில் பொருளாதாரத்தில் வெளிநாட்டு முதலீடு உட்பாய்ச்சப்பட்டு நவீன பெருந்தோட்டத் துறையொன்று ஏற்றுமதி நோக்கில் நவீன தொழில் நுட்பத்துடன் வெளிநாட்டு முகாமைத்துவத்துடன் இயங்கியது அதன் மூலம் பணப்புழக்கமிக்க ஒரு சந்தைப்பொருளாதாரமாக மாற்றப்பட்டிருந்தது. மக்கள் புதிய பொருள்களின் நுகர்வுக்குப் பழக்கப்படுத்தப்பட்டிருந்தனர். அதனால் நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகம் செல்வாக்கு மிக்கதாக மாறியிருந்தது. ஆகவே இலங்கை சுதந்திரம் பெற்றபோது ஒரு செழிப்புமிக்க சிறிய திறந்த பொருளாதாரமாக இருந்தது. அது மட்டுமல்லாது பிரித்தானியர்கள் இலங்கையை விட்டுச் சென்ற போது சுமார் 900 மில்லியன் ரூபாவை இலங்கையின் எதிர்காலத்தேவைக்கான ஒதுக்காக விட்டுச் சென்றிருந்தனர்.

ஆகவே இலங்கை சுதந்திரம் பெற்றபொழுது ஒரு சுதந்திர நாடாக தனது அபிவிருத்திப்பாதையில் பயணிக்கத் தேவையான நிதி உட்பட ஆரம்ப முன்நிபந்தனைகள் அத்தனையையும் பூர்த்திசெய்த ஒரு நாடாகக் காணப்பட்டது. 1953இல் இலங்கைப் பொருளாதாரம் தொடர்பில் உலகவங்கி வெளியிடப்பட்ட ஒரு அகராதியின் பருமனிலான முதலாவது அறிக்கையில் வேறெந்த நாட்டையும் போல இலங்கை அபிவிருத்திக்கான நிதித்தேவைக்கு வேறு மூலாதாரங்களில் தங்கியிருக்கத் தேவையில்லை எனக் குறிப்பிட்டிருந்தது.

இலங்கையை ஆசியாவிலேயே அபிவிருத்திக்கான மிகச் சிறந்த தெரிவாகப் பலரும் குறிப்பிட்டனர். 1950களின் இறுதிவரையிலும் இலங்கை ஜப்பானுக்கும் தாய்லாந்துக்கும் அடுத்தபடியாக சிறந்த தலா வருமானம் கொண்ட நாடாகவும் காணப்பட்டது. ஆனால் அபிவிருத்திக்காக இலங்கை கொண்டிருந்த அத்தனை சாதகமான நிலைமைகளும் மதிநுட்பமற்ற ஜனரஞ்சகப் பொருளாதாரக் கொள்கைகளாலும் பிழையான பேரினப்பொருளாதார முகாமைத்துவத்தாலும் வெகு சிக்கிரமே மறைந்து போயின. அதனைத் தொடர்ந்து கடன்வாங்கும் நாடாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட இலங்கை தொடர்ந்து வந்த அபிவிருத்தி வாய்ப்புகள் அனைத்தையும் தவறவிட்ட நாடாகப் பதிவாகியுள்ளது.

ஆரம்பத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக்கட்சி திறந்த லிபரல்வாதக்கொள்கையைக் கடைப்பிடித்ததோடு உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்க எடுத்த நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. 1956 இல் ஆட்சிக்கட்டில் ஏறிய கடும்போக்கு சிந்தனைவாத சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஒரு மூடப்பட்ட பொருளாதார முறைமையினையும் மேற்குலகிற்கு எதிரான சிந்தனைகளைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. இந்த இரண்டு கட்சிகளும் தனித்தனியாகவோ கூட்டுச் சேர்ந்தோ 1965, 1970, 1977 ஆகிய ஆண்டுகளில் மாறிமாறி ஆட்சிக்கட்டில் ஏறின. ஆட்சி மாறும் போதெல்லாம் பொருளாதாரக் கொள்கைகளும் மாற்றமடைந்து சென்றன.

அதனால் நிலையான ஒரு கொள்கையின் கீழ் தொடர்ச்சியாக பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போயிற்று. 1977இல் பதவிக்கு வந்த அரசாங்கம் 1994 வரையில் அதிகாரத்தில் இருந்தது. இக்காலப் பகுதியிலேயே இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை ஆழமாக வேரூன்றியது. 1977இன் ஜே. ஆர் ஜயவர்தன தலைமையிலான அரசாங்கம் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைத்தது மாத்திரமன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினையும் நாட்டில் ஸ்தாபித்தது.

அடுத்த வந்த சில ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி உயர்ந்த மட்டத்தில் இருந்த போதிலும் 1982 இனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அரசியற் குழப்பங்களும் இனவன்முறையும் 1988இல் ஏற்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் வன்முறைகளும் நாட்டின் அபிவிருத்திச் சாத்தியங்களை பலதாசாப்தங்களுக்கு பின்தள்ளிவிட்டன. 1983இனைத் தொடர்ந்த 29 ஆண்டுகள் நீடித்த கொடிய உள்நாட்டுப் போர் பேரளவு பொருள் சேதங்களையும் இலட்சக்கணக்கான உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

1993 இன் பின்னர் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும் 2005 – 2010 ஆண்டுகளில் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தொடர்ச்சியாகவே நாட்டை மூடப்பட்ட பொருளாதாரமாக மாற்றும் செயற்பாட்டை ஊக்குவித்தன. 2005 இன் பின்னர் பெரும் அளவிலான ஊழல்களும் மோசடிகளும் இடம் பெற்று வருவதாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஒரு புறம் நாட்டின் கடன் சுமை அதிகரித்துச் சென்றதுடன் வருமானம் ஈட்டித்தரும் மூலாதாரங்களும் பின்னடைவைச் சந்தித்தன.

2009 இல் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இலங்கையில் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்புத் திட்டங்களும் கனவுத் திட்டங்களும் வணிகம் சார்ந்த முறையில் முறையான சர்வதேச நிரம்பல் சங்கிலிகளை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெறவில்லை. இதனால் அத்தகைய திட்டங்கள் மூலம் நாட்டுக்குள் எதிர்ப்பார்க்கப்பட்ட அந்நியச் செலாவணி உள்வருகைகள் ஏற்படவில்லை. எனவே திருப்பிச்செலுத்தப்படவேண்டிய கடன்கள் அதிகரித்தன.

கொவிட் 19 பெருந்தொற்று இலங்கையின் நிலைமைகளை மேலும் மோசமாக்க கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என அறிவித்துவிட்டு காலதாமதமாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடியது. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதிகள் பற்றிய உடன்பாடு இதுவரையில் முழுமையடையாமல் இழுபறிநிலையில் உள்ளது. நாடு சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் முன்னொரு போதும் ஏற்பட்டிராத பொருளாதார நிதி நெருக்கடியினை இப்போது இலங்கை எதிர்கொள்கிறது. இதிலிருந்து மீளவேண்டுமாயின் மிகத் தீவிரமாக பேரினப் பொருளாதார மறுசீரமைப்புகளும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியமாகின்றன. உள்நாட்டில் பொது மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவதும் வெளிப்படைத் தன்மையும் நம்பகத்தன்மையும் பொறுப்புக்கூறும் தன்மையும் கொண்ட ஊழலற்ற ஆட்சிமுறையொன்றை தாபித்து சர்வதேசத்தின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவதும் முக்கியமாகும்.

# இலங்கையின் முன்னேற்றத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு

2500 வருடங்கள் தொன்மையான இலங்கை மகா பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கியது. நெற்களஞ்சியங்கள் பொங்கி வழிந்தன. வெளிநாடொன்றுக்குப் படையெடுத்துச் செல்லும் அளவுக்கு இலங்கை பலம் பெற்றிருந்தது. 1505 இல் முதல் தடவையாக போர்த்துக்கேயரினால் அடிமைப்படுத்தப்பட்டதிலிருந்து 1948 வரையான நான்கு நூற்றாண்டுகளுக்கு இலங்கை மக்களின் ஐரோப்பியர்களிடமிருந்தான சுதந்திரப் போராட்டம் நீடித்தது. இந்த நீண்ட வரலாற்றில் முஸ்லிம்களது தேசியப் பாதுகாப்புக்கான பங்களிப்பு மெச்சத்தக்கதாக அமைந்திருந்தது.

ஐரோப்பிய காலனித்துவத்துக்கு முன்னர் நடைபெற்ற தென்னிந்தியப் படையெடுப்புக்களுக்கு எதிராகப் போராடுவதில் இருந்து இலங்கையை ஆண்ட மன்னர்களுடன் இணைந்து 10 ஆம் நூற்றாண்டு காலப் பகுதிகளில் இருந்தே முஸ்லிம்களின் நாட்டைக் காக்கும் பணி முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. அனுராதபுர யுகத்திலே மன்னன் ஐந்தாம் மகிந்தவின் ஆட்சியிலே சோழர் படையெடுப்பு பல தடவை நிகழ்ந்திருக்கிறது. அச்சமயம் மன்னர் ருஹூணுவுக்கு தப்பி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டபோது முஸ்லிம்கள் மன்னரைக் காப்பாற்றப் போராடினார்கள் என மகா முதலியார் ஏ.டீ சேரம் தொகுத்த சன்னாவ தொகுப்பிலே குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் பொலன்னறுவை யுகத்திலே சோழர்களைத் தோற்கடித்து விஜயபாகு மன்னன் நாட்டை மீட்டெடுத்துள்ளார். இறைமையை மீளப் பெற்று முடிசூட்டு விழாவை வடிவமைக்கும் பொறுப்பை மன்னர் பெரிய தம்பி மரைக்காயரிடமே ஒப்படைத்துள்ளார். விஜயபாகுவின் பின்னர் இலங்கையின் பொற்காலமாகக் கருதப்பட்ட மகா பராக்கிரமபாகுவின் காலத்திலே தனது அமைச்சரவையில் நான்கு முஸ்லிம் அமைச்சர்களை அவர் நியமித்திருந்தார். இலங்கை மேற்கொண்ட வெளிநாட்டுப் படையெடுப்பு இந்த அமைச்சரவையின் தீர்மானத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. பின்னர் வருகின்ற தம்பதெனிய யுகத்திலே மகா பராக்கிரமபாகுவின் புதல்வர் நான்காம் விஜயபாகுவின் தேசிய இராணுவத் தளபதியாக இருந்த மித்த மன்னருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மன்னர் விஜயபாகுவைக் கொலை செய்துள்ளார். அந்த வேளையில் மன்னரின் தரப்பிலிருந்து மன்னரின் உயிர் காக்கும் படையிலே இராணுவத் தளபதியாக தாகூர் என்பவர் இருந்துள்ளார்.

கோட்டை இராஜ்ஜியத்தில் ஐரோப்பிய காலனித்துவம் துவங்குகின்ற போது போர்த்துக்கேயர் இங்கு வந்து சீதாவக்கையை ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னன் மாயாதுன்னைக்கு எதிராக போர் தொடுத்தார்கள். இந்நிலையில் நாட்டின் முஸ்லிம்களுக்கூடாக இந்திய முஸ்லிம்களிடம் மன்னர் உதவி கோரியுள்ளார். அங்கிருந்து பஜ்ஜி மரிக்கார், குஞ்சலி மரிக்கார், அலி இப்ராஹிம் தலைமையில் கள்ளிக் கோட்டையிலிருந்து இராணுவ உதவி கிடைப்பெற்றுள்ளது. இப்படையினர் கடுமையாகப் போராடினாலும் மன்னர் முற்றுகை இடப்படுவதை தவிர்க்க முடியவில்லை. இந்நிலையில் மன்னரின் சார்பாகக் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கும் தளபதி பஜ்ஜி மரிக்காரின் தலையைத் தந்தால் மட்டுமே முற்றுகையை நிறுத்துவதாக போர்த்துக்கேயர் அறிவித்தனர். அப்போது பஜ்ஜி மரிக்காரே முன்வந்து தனது தலையை கொய்து கொடுத்து மன்னரைக் காப்பாற்றியுள்ளார். முதலாம் இராஜசிங்கனுடைய முல்லேரியாப் போரிலே போராடி மரணித்த முஸ்லிம்களின் அடக்கஸ்தலங்கள் இன்றும் மாபிட்டிகம மையவாடியில் காணப்படுகின்றன.

சீதாவக்கையை யாழ்ப்பாண இராஜ்ஜியத்துடன் இணைப்பதற்கு மன்னன் மாயாதுன்ன விரும்பியபோது அப்பொறுப்பை அவர் இளைய அப்துர் ரஹ்மான் சித்தி லெப்பையிடமே ஒப்படைத்துள்ளார். அவரது கடுமையான போராட்டத்துக்காக மன்னர் மல்வானையை உயில் எழுதிக் கொடுத்துள்ளார். கண்டி இராஜ்ஜியத்தின் மன்னர் முதலாம் விமலதர்ம சூரியர் கிழக்குப் பிராந்தியத்தின் இராணுவக் கட்டளைத் தளபதிப் பொறுப்பை கோபால வைத்திய வம்சத்தினரிடம் ஒப்படைத்துள்ளார். கோபால வைத்திய வம்சத்தினர் கண்டி மன்னருக்கு வைத்தியம் பார்ப்பதற்காக ஸ்பெய்னிலிருந்து அழைத்து வரப்பட்ட வைத்தியர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாவர். இந்தத் தளபதியைக் கைது செய்த காலனித்துவ வாதிகள் இவரை விடுவிப்பதற்கு விலையாக விதித்த 5000 தங்க நாணயங்களை கொடுக்க முடியாத நிலையில் இவர் காலனித்துவவாதிகளால் கொல்லப்பட்டுள்ளார். இரண்டாம் ராஜசிங்க மன்னனுடைய காலத்தில் போர்த்துக்கேயர் மன்னரைத் துரத்தி வந்தபோது அவர் ஒளிந்திருந்த இடத்தைக் காட்டிக்கொடுக்காத முஸ்லிம் மூதாட்டியை அவர்கள் வெட்டிக் கொன்றனர். தன்னுயிரைக் காத்த அந்த மூதாட்டிக்காக மன்னர் பங்கரகம்மன என்ற கிராமத்தை அன்பளிப்பாகக் கொடுத்தார். இரண்டாம் விமல தர்மசூரியருடைய மகள் முடிசூடுவதற்காக நாவற்காடு நோக்கிச் செல்லுகின்ற போது செல்லங்கண்டல் என்ற பிரதேசத்தில் தங்கியிருந்த வேளை அப்பிரதேச முஸ்லிம்கள் அவர்களைத் தரிசிப்பதற்காக வந்துள்ளார்கள். அப்போது ஒரு திடீர் முற்றுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கிருந்த முஸ்லிம்கள் இதனை எதிர்த்துப் போராடி மன்னரின் மகளை காப்பாற்றி அனுப்பினார்கள். இரண்டாம் ராஜசிங்கனுடைய படையிலே முஸ்லிம்கள் இருந்திருக்கிறார்கள். ரந்தெனிவல யுத்தத்தில் முஸ்லிம்களின் ஒட்டகப்படை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தில் வெற்றி பெற்ற மன்னர் ஒட்டகங்கள் பொறிக்கப்பட்ட புடவையை ஹங்குராங்கெத்த ரஜமகா விகாரைக்கு அன்பளிப்புச் செய்தார். கன்னோருவ யுத்தத்தில் முஸ்லிம்கள் மன்னரின் தரப்பிலிருந்து போராடியமைக்காக அக்குரணை கிராமம் முஸ்லிம்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. கடைசி மன்னரான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனுடைய படையிலே சுமார் 850 முஸ்லிம்கள் இருந்துள்ளார்கள். தாய் நாட்டின் மீதான ஆங்கிலேயரின் படையெடுப்புக்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் ஒந்தாச்சி மடத்தில் வரி செலுத்த மறுப்புத் தெரிவித்து போராடிய முஸ்லிம்கள் கறுவாத் தோட்டத்துக்கு கொண்டு வரப்பட்டு தூக்கிலிட்டார்கள்.

இப்படியாக 10 ஆம் நூற்றாண்டு காலப் பகுதிகளில் நடைபெற்ற தென்னிந்தியப் படையெடுப்புக்களுக்கு எதிராகப் போராடுவதில் இருந்து 20 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெறும் வரைக்கும் முஸ்லிம்கள் தாய் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கவும் நாட்டின் சுதந்திரத்துக்காவும் போராடியுள்ளார்கள். இந்த 1000 வருடப் பாரம்பரியமே சுதந்திரத்துக்குப் பின்னரான 75 வருட காலம் வரை அவர்களை நாட்டுக்கு விசுவாசமானவர்களாக செயல்பட வைத்துள்ளது.

இதுபோல நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் இந்நாட்டு முஸ்லிம்களின் பங்களிப்பு மகத்தானதாக அமைந்திருக்கிறது. அனுராதபுர யுகத்தில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்க வேண்டிய தேவை தொடர்பில் மன்னர் ஆலோசித்த போது நாட்டுக்குத் தேவையான கைத்தறியை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வது தொடர்பில் முஸ்லிம்கள் ஆலோசனை வழங்கினர். இது தொடர்பில் அறிந்து வருவதற்காக இந்தியாவின் சாலிய பிரதேசத்துக்கு பேருவளை கொரகதுவவைச் சேர்ந்த பெரிய முதலி மரிக்காரை மன்னர் அனுப்பியுள்ளார். அவர் அங்கு சென்று அதனைக் கற்று அங்கிருந்து சிலரையும் அழைத்து வந்து நாட்டின் நெசவுத் தொழிலுக்குப் பங்களிப்புச் செய்தார். யாப்பஹுவ இராஜியத்தில் இரண்டாம் விஜயபாகு மன்னருடைய சகோதரன் முதலாம் புவனேகபாகுவின் காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முஸ்லிம்கள் வெளிநாட்டு வர்த்தகத்தை அறிமுகம் செய்து வைத்துள்ளார்கள். அபூ உஸ்மானுடைய தலைமையில் பக்தாதுக்கும் எகிப்துக்கும் மன்னர் தூதுக் குழுக்களை அனுப்பி இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்துக்கு வழி செய்துள்ளார்கள். தம்பதெனிய யுகத்தின் மன்னரான இரண்டாம் பராக்கிரமபாகு நோய் வாய்ப்பட்ட போது இந்தியாவின் சிந்துப் பிரதேசத்தில் இருந்து முஸ்லிம் ஸ்பெய்னின் மருத்துவர்களை அழைத்து இலங்கை முஸ்லிம்கள் மருத்துவம் பார்த்துள்ளார்கள். இவர்களில் அன்ஸார் இப்னு துபைல் உடையாரின் பங்களிப்பு காரணமாக அவருக்கு வைத்திய ரத்ன கோபால முதலிகே பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் நாட்டுத் தலைவர்களுடன் நெருக்கமாக இருந்து முஸ்லிம்கள் பங்களிப்புச் செய்துள்ளார்கள். சுதந்திரத்துக்குப் பின்னரும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தமது ஆயிரம் வருடப் பாரம்பரியத்தை இலங்கை முஸ்லிம்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். 1974 இல் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் நாடு அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையை எதிர்நோக்கிய போது கொடை வள்ளல் மறைந்த நளீம் ஹாஜியார் 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான அந்நியச் செலாவணியை தமது அன்பளிப்பாக வழங்கி நாட்டின் நெருக்கடித் தீர்வுக்கு பங்களித்துள்ளார். இலங்கை முஸ்லிம்களின் தேசியப் பங்களிப்புக்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்த வகையில் இலங்கையின் தேசியப் பாதுகாப்பிலும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் சுதந்திரத்துக்கு முன்பிருந்தே இந்நாட்டு முஸ்லிம்கள் பங்களிப்புச் செய்து வருவது இன்றைய 75 ஆவது சுதந்திர தினத்தன்று நன்றியுடன் நினைவுகூரத்தக்கதாகும்.

பியாஸ் முஹம்மத்











# சுதந்திரத்தின் முக்கியத்துவம்

யூ.கே.றமீஸ் எம்.ஏ.
(சமூகவியல்)

1948 பெப்ரவரி 04 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது. சுதந்திரத்தின் 75வது வருடத்தில் நாமிருக்கின்றோம். தேசபிதா டி.எஸ். சேனாநாயக்கா, எஸ்.டப்ளியூ.ஆர்.டி பண்டாரநாயக்கா, ரி.பி. ஜாயா, சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாச்சலம், சேர் ராஸிக் பரீத், பேர்னார்ட் ஜயதிலக்க, எப்.ஆர். சேனாநாயக்க போன்ற பலர் இணைந்து நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்தனர். அதற்காக நாம் அவர்களை நன்றிப்பெறுக்கோடு நினைவுகூர்கின்றோம். தேசபிதாக்கள் என்று அவர்களை அழைக்கின்றோம்.

ஆனாலும் கி.பி 1505 இல் இந்நாடு சுதந்திரத்தை இழந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று காலனியாதிக்கம் தொடர்ந்தது. சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனதும் பிறப்புரிமையாகும் என்று எமது மூதாதையர்களான சுதேசிகள் கருதினார்கள். இழந்த சுதந்திரத்தை பெற்றெடுக்க அவர்கள் போராடினார்கள். நீண்ட காலப் போராட்டங்களின் பின்னர் சுதேச அரசு ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. மக்களை இணைக்கின்ற பொறிமுறையாக அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டது. மக்களே அதற்கு அதிகாரத்தை கையளித்தார்கள். இதனை நடைமுறைப்படுத்தும் கருவியாக பாராளுமன்றம் காணப்படுகிறது. இதன் நிலை கெட்டுவிடும்போது தட்டிக்கேட்கும் நிறுவனமாக நீதிமன்றமும் அவற்றை வெளிக்கொண்டுவரும் நிறுவனமாக ஊடகங்களும் கோட்பாட்டளவில் காணப்படுகின்றன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட சுதந்திரத்தின் பெறுமதியை நாம் உணர்ந்துள்ளோமா?

சுதந்திரம் என்பது கட்டுப்பாடுகளற்றது என்று விளங்கக்கூடாது. செய்ய விரும்புவதை செய்ய அனுமதிப்பதும் செய்ய விரும்பாததை திணிக்காது இருப்பதும் சுதந்திரம் எனப்படுகிறது. இது மேலாதிக்கத்திற்கு எதிரானது, இயல்பானது, இயற்கையானது. இது காலனிய நீக்கத்தை குறித்து நிற்கிறது. இது கலாசார அடிமைத்தனத்திலிருந்து நீங்குவதாகும். எதிரியை வெறுப்பின்றி எதிர்கொள்வதாகும்.

'மனிதன் சுதந்திரமானவன். அவன் எதுவாக இருக்க வேண்டும் என்பதனை அவன்தான் தீர்மானிக்கின்றான்' என்று 1964 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற, பிரான்ஸ் நாட்டை சேர்ந்த தத்துவ ஞானியான 'ஜீன் போல் சாத்ரே' குறிப்பிடுவதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

எமது தலைவர்கள் சுதந்திரத்தை பெற்று தந்துவிட்டார்கள். நாம் எப்படியிருந்தோம் என்பதை வரலாற்றுப் பிரக்ஞையுடன் உணர்ந்து எதிர்காலத்தில் எப்படியிருக்க போகிறோம் என்ற முடிவை எடுக்கவேண்டியவர்கள் மக்கள்தான். அந்த முடிவுதான் எமது எதிர்காலத்தை தீர்மானிக்கும். மாற்றமாக வரலாற்றையோ வரலாற்றுப் பாத்திரங்களையோ குற்றம் சுமத்திக்கொண்டு இருப்பதன் மூலம் எவ்விதமான சாதகமான மாற்றங்களும் நிகழப்போவதில்லை.

எமக்கு நாங்களே விலங்கிட்டு அடிமைகளாக மாறிவிட்டோம். எமக்கு நாமிட்டுள்ள விலங்குகளை தகர்த்தெறிந்து அடிமைத்தளையிலிருந்து எம்மை நாம் விடுவித்துக் கொள்ள வேண்டும். குறுகிய தேசிய, இன, மத, பிரதேச வாதங்களுக்குள் சுருங்க முனைவது, பொதுநலத்தை விட சுயநலத்தை முற்படுத்துவது, மூலோபாய திட்டங்களைவிட சந்தர்ப்பவாத அடிப்படையில் முடிவுகளை எடுப்பது, நாட்டுப்பற்றில் காணப்படும் குறைபாடுகள், நிதானமின்மை, செயல்பாடின்மை, பதற்றம், கடின உழைப்பின்மை, உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பின்மை, நாட்டை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளின்மை என்று இவற்றை பட்டியலிடலாம். இவை யாவும் நாட்டை ஒருபோதும் முன்னேற்றத்தை நோக்கி நகர்த்தப்போவதில்லை. 'ஏகாதிபத்தியங்கள் அவற்றின் இயல்பினால் அழியும்' என்று மகாத்மா காந்தி நம்பினார். நாமும் எமது இயல்பினால் அழியக்கூடாது. மாற்றிக்கொள்ளவேண்டிய விடயங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அதுவே முன்னேற்றத்துக்கான அடித்தளமாகும்.

காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்டு 75 வருடங்களை நாமடைந்தபோதிலும் அதன் சிந்தனை ஆதிக்கத்திலிருந்து இன்னும் நாம் விடுபடவில்லை என்பது எமது குற்றமே. இலங்கையில் 'சிங்களம் மாத்திரம் அரசகரும மொழி' என்ற மொழிப்பிரச்சினை தோன்றிய போது 'இரு மொழிகள் ஒரு நாடு, ஒரு மொழி இரு நாடுகள்' என்ற கலாநிதி கொல்வின் ஆர். டீ சில்வாவின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. நாம் கடந்த கால தவறுகள் தொடர்பான மிக தைரியமான சுயவிமர்சனம் செய்வதும் எதிர்காலம் தொடர்பான மிக நுணுக்கமான, நீண்டகால, மூலோபாய திட்டமிடலில் ஈடுபடுவதும் மிக இன்றியமையாத விடயமாகும். அத்தகையதொரு முன்னெடுப்புக்கான ஆயத்தங்களை இன்று நாம் காண்பது வரவேற்கத்தக்கதே.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் பின்னடைவுக்குமான காரணிகள் காணப்படுகின்றன. இவற்றை சமூக இயங்கியல் விதிகள் என்று கூட குறிப்பிட முடியும். நீதியான செயல்பாடுகளும் அநீதியான முன்னெடுப்புகளும் கூட இருக்கின்றன. சமூக எழுச்சிக்கான நடைமுறைகளும் வீழ்ச்சிக்கான செயல்பாடுகளும் உள்ளன. வரலாற்று சமூகவியலின் நோக்கில் இதனை பார்த்தால் வரலாற்று கட்டங்கள் மாறியமைந்த போதிலும் விதிகள் மாறாது இருப்பதனை கண்டுகொள்ள முடியும். இவை குறித்து அலட்சியமாக இருப்பதுதான் எமது பின்னடைவுக்கான பிரதான காரணியாகும். 'நோயின் அடிப்படையே அலட்சியமாக இருப்பதுதான்' என்று குறிப்பிடுவார்கள். சமூக நோய்களுக்கும் இது பொருத்தமானதுதான். ஏகாதிபத்தியம் என்பது நமக்கு வெளியில் இருக்கிற ஒன்றல்ல. மாற்றமாக அது எமக்குள்ளேயே இருக்கிறது. அதனை முதலில் நாம்தான் வெளியேற்ற வேண்டும்.

21ம் நூற்றாண்டின் திறன்களான விமர்சன நோக்கு, தொடர்பாடல், புத்தாக்க சிந்தனை, தீர்மானங்களை முன்னெடுத்தல், பிரச்சினைகளை தீர்த்தல், படைப்பாற்றல், பிரச்சினை தீர்த்தல், விடா முயற்சி, இணைந்து பணியாற்றல், தகவல் திறன்கள், தொழிநுட்ப திறன்கள், டிஜிட்டல் கல்வியறிவு, ஊடக எழுத்தறிவு, உலகளாவிய விழிப்புணர்வு, சமூக திறன்கள் போன்றவற்றை மேம்படுத்த வேண்டுமானால் அடிமை மனோநிலையில் இருந்துகொண்டு யோசிக்க முடியாது. இவ்விடயங்களிலே நாடு ஒரு பாய்ச்சலை வேண்டிநிற்கின்ற காலத்தில் நாம் பிற்போக்கானவர்கள் போன்று சிந்திக்க முடியாது.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு உயிர்த்துடிப்புள்ள பிரஜைகளாக இருக்க முயற்சிப்போம். கைகட்டிப் பார்த்திருக்கும் பார்வையாளர் வகிபங்கிலிருந்து விலகி பங்கேற்கும் பிரஜை என்ற நடிபங்கிற்கு மாறிவிடுவோம். நாட்டின் சமாதான சகவாழ்வுக்கும் பொது அமைதிக்கும் பங்களிப்போம். வீதியை சுத்தப்படுத்துவது போன்ற சிறிய செயல் முதல் உயர் பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களை கட்டியெழுப்ப பங்களிப்போம். நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பின்பற்றி ஒழுகுவோம். வீதி ஒழுங்குகள் முதல் பொதுச் சட்டங்கள் அனைத்திலும் சட்டத்துக்கு கட்டுப்படும் பிரஜைகளாக மாறுவோம். நாட்டின் பொது அமைதிக்கும் சமாதானத்துக்கும் பங்களித்து அமைதியை விரும்பும் நற்பிரஜையாக மாற்றிக்கொள்வோம். குறுகிய இனவாத சிந்தனைகளிலிருந்து விடுபட்டு அனைத்து சமூகங்களுடனும் சகவாழ்வுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வை அமைத்துக்கொள்வோம்.

மனித விழுமியங்கள், பெறுமானங்களை மதித்து நடப்போம். நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் பங்களிப்போம். உள்ளூர் உற்பத்திகளை பயன்படுத்துவதுடன் ஏற்றுமதி பொருளாதாரத்துக்கும் பங்களிப்போம். சுற்றுச்சூழலை மாசடைவதிலிருந்து பாதுகாப்போம். பொது இடங்களில் அதற்கேயுரிய ஒழுங்குகளை பேணிக்கொள்வோம். கலாசார பண்பாட்டு சூழலை பாதுகாப்போம். நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற தாயக தேசத்தை நேசிப்போம். மற்றவர்களுக்கு குறை கூறி அலட்டிக்கொள்வதை விடுத்து எவ்வாறு நாட்டுக்கு பங்களிக்கலாம் என்பதை சிந்தித்து பொது விவகாரங்களில் ஒதுங்கியிறாது அனைவருடனும் இணைந்து பணியாற்றுவோம். சுதந்திரத்தின் மகிமையை உணர்ந்து பலமான இலங்கையை கட்டியெழுப்ப மன உறுதியுடனும் செயல்திறனுடனும் பேதமும் பகையும் மறந்து இணைந்து செயல்படுவோம்.

வரலாற்று சமூகவியலின் நோக்கில் இதனை பார்த்தால் வரலாற்று கட்டங்கள் மாறியமைந்த போதிலும் விதிகள் மாறாது இருப்பதனை கண்டுகொள்ள முடியும். இவை குறித்து அலட்சியமாக இருப்பது தான் எமது பின்னடைவுக்கான பிரதான காரணியாகும்.

எமது தலைவர்கள் சுதந்திரத்தை பெற்று தந்துவிட்டார்கள். நாம் எப்படியிருந்தோம் என்பதை வரலாற்றுப் பிரக்ஞையுடன் உணர்ந்து எதிர்காலத்தில் எப்படியிருக்க போகிறோம் என்ற முடிவை எடுக்கவேண்டியவர்கள் மக்கள்தான். அந்த முடிவுதான் எமது எதிர்காலத்தை தீர்மானிக்கும்.



XTRAPREMIUM EURO3 HI OCTANE PETROL WITH FRICTION BUSTERS
SERVO WORLD CLASS LUBRICANTS
LANKA SUPER DIESEL Euro4



# சுதந்திரத்தின் பின்னரான வெளியுறவுக் கொள்கை

**ஓர் அரசின் உயிர் வாழ்வு அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தாக அமையும். தகவல் தொழில்நுட்பத்தின் விருத்தி பொருளாதார வளங்களின் அருந்தல் விதி என்பன ஒன்று சேர்ந்து நாடுகளை கிராமங்களுக்கு நிகரானதாக்கியுள்ளது. தீவுகளாக இருக்கும் அரசுகளும் பின்தங்கிய சமூக வாழ்க்கையைக் கொண்டிருக்கும் தேசிய அரசுகளும் இப்போது தனித்து இயங்க முடியாத உலக ஒழுங்குக்குள் அகப்பட்டுள்ளன. இலங்கைக்குள் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும், இன முரண்பாடும் அதிகம் உலகைச்சார்ந்திருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.**

### 1948 – 1956 வரையான காலப்பகுதி

இக்காலப்பகுதியானது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகளான டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான அரசாங்கம், டட்லி சேனநாயக்க தலைமையிலான அரசாங்கம், சேர்.ஜோன் கொத்தலாவல தலைமையிலான அரசாங்கம் ஆகிய மூன்று பிரதமர்களின் ஆளுமை சார்ந்து இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை வகுக்கப்பட்டிருந்தது. இதில் டி.எஸ். சேனநாயாக்காவின் அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை இலங்கைக்கான வெளியறவுக் கொள்கையாக அமைந்ததோடு முதன்முதலாக அவ்வகைக் கொள்கை வகுப்புக்கான திட்டமிடலும் முன்மொழியப்பட்டது. ஆனால் அவ்வகை வெளியுறவுக்கொள்கை ஐ.தே. கட்சியினதும் டி.எஸ். சேனநாயக்காவினதும் வெளியுறவுக் கொள்கை என்பதினை விட பிரித்தானியாவிற்கு ஏற்ற கொள்கையாக அமைந்திருந்தது. பிரிட்டிஷாருக்கு டி.எஸ். இன் போக்கு நன்மையளித்தது.

பொருளாதார ரீதியில் அந்நிய முதலீட்டுக்கான வாய்ப்புக்களையும் தடையற்ற வர்த்தகப் பொருளாதாரப் போக்கினையும் ஐ.தே.க. அரசாங்கம் பின்பற்றியது. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, எரிபொருள் விநியோகம், வங்கி நடவடிக்கைகள், போக்குவரத்து என்பவற்றில் அந்நிய முதலீடுகள் வரவேற்கப்பட்டன. இது பிரித்தானியா உட்பட மேற்கு நாடுகளின் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்கான வெளியுறவுக் கொள்கையாக அமைந்திருந்தது.

1952 இல் ஆசிய – ஆபிரிக்க நாடுகளின் மாநாடொன்று பாண்டுங்கில் நடைபெற்றபோது அன்றைய இலங்கைப் பிரதமரான சேர்.ஜோன் கொத்தலாவல சீனப் பிரதமர் சூ என் லாய்க்கு கைலாகு கொடுக்க மறுத்தார்.

இக்காலப் பகுதியில் இந்திய எதிர்ப்பு ஓரம்சமாக வெளியுறவுக் கொள்கையில் காணப்பட்டாலும் இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான உறவு முறையில் புரிந்துணர்வுடன் கூடிய கொள்கை வகுப்புக் காணப்பட்டது. 1947 – 1948 டி.எஸ்.சேனநாயக்க – நேரு பேச்சுவார்த்தை, 1953ல் டட்லி – நேரு பேச்சுவார்த்தை, 1954 கொத்தலாவல – நேரு உடன்படிக்கை என்பன குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாகும். பேச்சுக்களும் உடன்பாடுகளும் எட்டப்பட்டனவே அன்றித் தோட்டத் தொழிலாளரின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதற்கு இலங்கைத் தலைவர்களின் வெளியுறவுக் கொள்கையில் காணப்பட்ட மேற்கு சார்புத்தன்மையும் ஒரு காரணமாகக் கொள்ளப்பட்டது.

அவ்வாறே 1947 முதல் 1948 வரை காஷ்மீர் தொடர்பான இந்திய – பாகிஸ்தான் போரில் இலங்கை நடுநிலைமை வகிப்பதாகக் காட்டிக் கொண்டு வெளிப்படையாக பாகிஸ்தானுக்கு ஆதரவளித்தது. 1954இல் கொழும்பில் நிகழ்ந்த தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பிரதமர்கள் மாநாட்டில் பிரதமர் கொத்தலாவல நேருவை அழைத்தபோதும் அவரது கருத்துக்களை நிராகரித்தார். எனவே இந்திய எதிர்ப்பினைக் கொண்டிருந்தாலும் புவிசார் அரசியலை அனுசரித்துப் போகும் வெளிவிவகாரக் கொள்கையை பின்பற்ற வேண்டிய நிலை இலங்கைத் தலைவர்களுக்குரிய அரசியலாகக் காணப்பட்டது.

சுதந்திர இலங்கையின் முதலாவது வெளியுறவுக் கொள்கை இந்தி எதிர்ப்பு வாதம், கமியூனிச எதிர்ப்பு வாதம், மேற்குடனான நட்பு வாதம் கொமன்வெல்த் மற்றும் அணிசேராமை தொடர்பான கொள்கை வாதங்களைத் தழுவியதான உறவை பின்பற்றியது.

இந்தியாவிடமிருந்து விலகியிருத்தல், பிரித்தானியாவுடன் நெருக்கமாயிருத்தல் என்ற தந்திரத்தைக் கைக்கொண்டு வந்தது.



### 1956 முதல் 1965 வரையான காலப்பகுதி

இக்காலம் இரண்டாவது அத்தியாயத்திற்கான காலப்பகுதியெனக் கருதப்படுகிறது. இக்காலத்திலும் மூன்று பிரதமர்கள் ஆட்சியாளர்களாக அமைந்ததோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சகாப்தமாக அமைந்திருந்தது. பெருமளவுக்குக் கூட்டுக்கட்சியின் ஆட்சியானபோதும் பிரதமர்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, டபிள்யூ.தகநாயக்கா, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் ஸ்ரீ.சு. கட்சியின் மேலாளர்களாகவும் அக்கட்சியின் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிப்பவர்களாகவும் காணப்பட்டனர். வெளிப்படையாக நோக்கும்போது பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கையினையே தகநாயக்காவும், சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பின்பற்றி வந்தனர். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆரம்பகால வெளியுறவுக் கொள்கை முழுமையாக கணவனின் வெளியுறவுக் கொள்கையாக அமைந்திருந்தது. பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்ததும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.

ஐ.தே. கட்சி பின்பற்றிய ஏகாதிபத்திய பொருளாதாரக் கொள்கையை நிராகரிக்கும் வகையில் அந்நிய நாட்டுக் கம்பனிகளையும், பெருந்தோட்டங்களையும் போக்குவரத்தையும் தேசியமயமாக்கும் கொள்கையை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா முன்வைத்தார். இதற்கு ஏற்ப இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மாற்றமடைந்தது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கொள்கையை பண்டாரநாயக்கா பின்பற்றினார். அதற்கு ஏற்ப சீனா, சோவியத் யூனியன் போன்ற சோசலிச முகாமுடன் நட்புறவை வளர்க்க அவர் அதிகம் முயன்றார்.

பண்டாரநாயக்கா வெளியுறவுக் கொள்கையில் பிரதான இடம் பிடித்த அம்சம் இந்தியா பற்றியதாகும். பண்டாரநாயக்காவைப் பொறுத்தவரையில் புவிசார் அரசியலை நன்கு விளங்கியிருந்ததுடன் அயல் நாட்டுடனான உறவைத் தயார் செய்யும் தந்திரத்தைக் கையாண்டார்.

பிரிட்டனின் இராணுவ மற்றும் கடற்படைத் தளங்களை அகற்றியமை, இந்தியாவுடனான நெருக்கத்தைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. அதனால் இந்திய இலங்கை உறவு மிக நெருக்கமானதுடன் நேருவின் போக்கில் இலங்கையை இந்தியாவின் செல்வாக்கு மண்டலமாக மாற்றுவது பற்றியதாக அமைந்திருந்தது. பாண்டூங் மாநாட்டில் நேருவுடன் பண்டாரநாயக்கா கைகோர்துக் கொண்டமை மற்றும் அணிசேராமை சார்ந்து அமைக்கப்பட்ட இந்திய வெளியுறவுக் கொள்கையை ஆதரிப்பவராகக் காணப்பட்டார். இலங்கையை இந்தியா ஆக்கிரமித்துவிடும் என்ற ஐ.தே கட்சியின் கருத்தை நிராகரிக்கும் விதத்தில் பண்டாரநாயக்கா, 'இந்தியா போன்ற ஒருநாடு இலங்கையைத் தன்னுடன் இணைக்குமென்று சரியான அறிவுள்ள எந்தவொரு மனிதனும் கற்பனை செய்ய மாட்டான்' எனக் கூறுவதன் மூலம் இந்தியாவுடனான நட்பினை வெளிப்படுத்தினார்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவும் தகநாயக்கா போன்று பண்டாரநாயக்கா வகுத்திருந்த வெளியுறவுக் கொள்கைக்கான தளத்திலேயே பயணம் செய்தனர். இவரது காலத்தில் நிகழ்ந்த சிறிமா – சாஷ்திரி ஒப்பந்தம் இலங்கை இந்திய உறவை பலப்படுத்தியது எனக் கூறலாம். குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக இலங்கையில் வாழ்ந்த 9,75,000 இந்திய வம்சாவழியினரில் 3,00,000 பேருக்கு இலங்கைப் பிரஜா உரிமை அந்தஸ்து கொடுப்பதாகவும் 5,25,000 பேரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதாகவும் 150,000 பேர் சம்பந்தமாக பின்பு முடிவு எடுப்பதாகவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 1962 இல் நிகழ்ந்த சீன இந்திய யுத்தத்தில் சிறிமாவோ அரசாங்கம் நடுநிலைமைப் போக்கை கடைப்பிடித்திருந்தமை இந்தியாவுக்கு அதிருப்தியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இக்காலப்பகுதி டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐ.தே.க.வும், தமிழரசுக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து அமைத்த அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கைகுரிய காலப்பகுதியாகவுள்ளது. இக் கூட்டு முன்னணி அரசாங்கமானது ஆரம்பகால ஐ.தே.க இன் வெளியுறவுக் கொள்கையின் பின்பற்றலாக அதிகம் காணப்பட்டது. மேலும் இக்காலப்பகுதியில் தீவிர மாற்றங்களோ, முரண்பாடுகளோ, அயல் நாட்டுடனான பகை அல்லது நட்பு தொடர்பான சர்ச்சைகளோ காணப்படாததனால் முக்கியத்துவம் குறைந்த காலப்பகுதியாக ஆய்வாளர்களால் அடையாளப்படுத்தப்படுகிறது.

குறிப்பாக சீனத் தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்தது. அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த விசா மறுக்கப்பட்டது. முன்னைய ஆட்சியாளர்கள் திருகோணமலைத் துறைமுகத்தை சீனாவிற்கு அடகு வைத்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அதற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டது. அத்துடன் இந்தோனேசியா கம்யூனிசக் கட்சியினரின் இலங்கை வருகையை அரசாங்கம் தடுத்து நிறுத்தியது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி (ஸ்ரீ.ல.சு கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிசக் கட்சி, மாஸ்கோ சார்புக் கம்யூனிசக் கட்சி) அரசாங்கம் பதவியிலிருந்த காலப்பகுதி 29.05.1970 முதல் 22.07.1977 வரையான ஆட்சிக் காலம் இடதுசாரிகளின் ஆதிக்கம் காணப்பட்டதனால் மூடிய பொருளாதாரக் கொள்கையை சிறிமா அரசாங்கம் பிரகடனப்படுதியிருந்தது. 1970ல் லுசாக்காவில் நிகழ்ந்த அணிசேரா மாநாட்டில் சிறிமாவோ ஆற்றிய உரை அவரது வெளியுறவுக் கொள்கையை கோடிட்டுக் காட்டியது.

1971 இல் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) மேற்கொண்ட ஆயுதக் கிளர்ச்சிக்கும் சீனாவிற்கும் தொடர்பு இருப்பதாக இலங்கை அரசாங்கம் கருதியது. இதனால் சீனாவிற்கு எதிரான உணர்வு ஆரம்பத்தில் வெளிப்படுத்தியதுடன் திருகோணமலைத் துறைமுகத்தில் சீனக் கடற்படைக் கப்பல் தரித்திருந்தபோதிலும் அதனிடம் கிளர்ச்சியை அடக்க உதவி கோராமல் இந்தியா நாடிச் சென்றது. இது அரசின் சீன எதிர்ப்பினைக் காட்டுகின்றது.

இக்காலப்பகுதியில் இலங்கை இந்தியாவுடன் கொண்டிருந்த வெளியுறவுக் கொள்கையினை தனித்துவமாக அவதானித்தல் அவசியமாகும். 1971 ஏப்ரல் மாதம் ஜே.வி.பி யின் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி சிறிமாவோ அரசாங்கத்தின் இந்தியாவுடனான வெளியுறவுக் கொள்கையினை வெளிப்படுத்தக் காரணமாகியது. வேறுபல நாடுகளிடம் உதவி கோர வாய்ப்பிருந்தும் கிளர்ச்சியை அடக்க இந்திய இராணுவ – கடற்படையை



கோரியிருந்தது. இது இலங்கையின் இந்தியாவுடனான நட்புறவை காட்டியதுடன் பூகோள முக்கியத்துவத்தினையும் புலப்படுத்தியிருந்தது.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையில் 1977 ஏப்ரலில் பதவிக்கு வந்த ஐ.தே. கட்சி அரசாங்கம் பாரிய மாறுதல் ஒன்றை ஏற்படுத்த ஆரம்பித்தது. ஜே.ஆர். ஜயவர்தனவின் தலைமையில் புதிய மரபொன்றை இலங்கையின் வெளிவிவகாரத்தில் வகுத்தமை இலங்கை முழுவதற்குமான அரசியல், சமூக, பொருளாதார, இராணுவக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. முதலாளித்துவ சார்புடைய ஐ.தே.க. ஆட்சி டி.எஸ் சேனநாயக்கா மரபிலிருந்து இன்னும் அதிகமானது உலக முதலாளித்துவ சார்புடமைக்குள் ஜே.ஆர். ஜயவர்தனவின் வெளிவிவகாரம் அமைந்திருந்தது.

ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐ.தே. கட்சியின் 1977 பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில், இலங்கை வெளிவிவகாரக் கொள்கை ஏகாதிபத்தியத்திற்கும், குடியேற்ற ஆதிக்க முறைமைக்கும் எதிரானது. இலங்கை இறையாண்மையும், சுதந்திரத்தினையும், ஒருமைப்பாட்டினையும் முதன்மைப்படுத்துவதும், பாதுகாப்பதும் நோக்கமாகும். எந்த நாடும் இலங்கையின் உள்விவகாரத்திலேயோ, வெளிவிவகாரத்திலேயோ தலையிடும் நெருக்கடியையோ அனுமதிக்காத வெளியுறவுக் கொள்கையே எமது அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை ஆகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1994 – 2005 வரை நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம் இலங்கைக்கான வெளியுறவுக் கொள்கையை வகுத்துக் கொண்டது. பாரம்பரியமாக ஸ்ரீ.ல.சு. கட்சி வகுத்த வெளியுறவுக் கொள்கையிலிருந்து சற்றுவிலகி சில தனித்துவங்களுடன் அக்கொள்கை அமைந்திருந்தது. காரணம் புதிய உலக ஒழுங்கில் இடதுசாரி ஆட்சி முறை சோவியத் யூனியன் வீழ்ச்சியுடன் முடிவுக்கு வந்ததென்றே கூறக்கூடிய நிலை ஏற்பட்டிருந்தது. முற்றாக முதலாளித்துவச் சக்திகளின் எழுச்சிகரமான மாறுதல்கள், ஒற்றை மைய அரசியல் உலகத்தினை தோற்றுவித்தது. அமெரிக்கா தலைமையில் 1989 முதல் 1999 வரை மிக நேர்த்தியான தனியுலக ஒழுங்கு அமைந்திருந்தது.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் புலிகள் இயக்கத்தினர் முக்கிய பங்கினை 1987 களுக்குப் பின்பு எடுத்திருந்தனர். அதன் உச்சமான வளர்ச்சிக் கட்டம் நோர்வே மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக் காலத்திலேயே ஏற்பட்டது. இலங்கையின் போக்கை மாற்றவும் குழப்பத்திற்குள்ளாக்கவும் புலிகள் இயக்கத்தினருக்கு இக்காலப்பகுதியில் பலமிருந்தது. ஆனால் இலங்கையிலும் ஏற்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வகுத்திருந்த வெளிநாட்டுக் கொள்கையும் அதன் உத்திகளும் புலிகள் இயக்கத்தினரை தோற்கடிப்பதற்கான நடவடிக்கையாக அமைந்திருந்தது. சமாதான உரையாடல் மூலம் விடுதலைப் புலிகளின் அரசியல் தலையீட்டையும் ஆதிக்கத்தையும் பிராந்திய, சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கொள்கை வகுத்தது. ஒருவகையில் இரண்டு பிரதான பலம்வாய்ந்த சக்திகளுக்கு இடையிலேயே நிகழ்ந்த போட்டியாக இக்காலப்பகுதி அமைந்திருந்தது. இதன் உள்ளடக்கங்கள் பொது வெளிப்பாட்டைக் கொண்டிருக்காவிட்டாலும் உள்நோக்கம் அதுவாகவே அமைந்தது.



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 4ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# முருகப்பெருமானுக்குரிய புனிதவிரத தினம் தைப்பூசம் நாளை இந்துக்களால் அனுஷ்டிப்பு

தமிழ்க் கடவுளான முருகப் பெருமானின் சிறப்பு வழி பாட்டுக்குரிய புனித விரதம் தைப்பூசம் ஆகும். இது தமிழர்கள் வாழும் நாடுகளில் முருகப்பெருமானுக்காக கொண்டாடப்படும் ஒரு பெரும் புனித விழாவாகும். தை மாதம் தமிழர்களுக்கு புனிதமான மாதமாகும்.குறிப்பாக ஏர் பிடித்து கமத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மங்களகரமான மாதம் தைமாதம்.

அகிலத்திற்கே தன் சுடரால் படியளக்கும் சூரியபகவானுக்கு நன்றி வழிபாடுகள் அனுஷ்டிக்கும் புனித மாதமாகும். முருகனுக்கு உகந்த நாள் தைப்பூச தினம் என்பர். தைப் பூசம் ஆண்டுதோறும் தை மாதம் தமிழ் பஞ்சாங்கப்படி வரும் பத்தாவது மாதமாகும்.

இது பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய நந்நாளில் முருகனுக்கு எடுக்கப்படும் விழாவாகும்.சில வருடங்களில் பௌர்ணமியானது பூச நட்சத்திரத் திற்கு முன்னும் பின்னும் வரும் தினங்களும் உண்டு. நட்சத்திர வரிசையில் பூசம் எட்டாவது நட்சத்திர மாகும். இவ்விழா முழு நிலவு பூச நட்சத்திரத்திற்கு வரும்நேரம் நடத்தப்படுகிறது.

தைப்பூச திருவிழாவானது தமிழ் நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, மொரீசியஸ் போன்ற நாடுகளில் வசிக்கும் தமிழர்களால் வெகு விமரிசையாக அனுஷ்டிக்கப்படும் விழாவாகும். இவ் வருடம் தைப்பூசத் திருநாள் நாளை ஞாயிற்றுக்கிழமை 05.02.2023 அன்று பௌர்ணமி தினத்தில் தோன்றுகின்றது.



தைப்பூச விழாவானது பழங்காலந் தொட்டே தமிழகத்தின் முருகன், சிவன் கோயில்களில் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு தைப்பூசம் கொண்டாடப்பட்டது குறித்து தேவாரப் பதிகங்களில் குறிப்புகள் உள்ளன. "தைப் பூசமாடி உலகம் பொலிவெய்த"என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். பிற்கால சோழர் ஆட்சியில் தைப்பூசத்தன்று கோயில்களில் கூத்துகள் நடத்தப்பட்டன. குறிப்பாக திருவிடைமருதூர் மகாலிங்கேஷ்வரர் கோயிலில் தைப் பூசத்தை ஒட்டி நான்கு நாட்கள் கூத்துகள் நடத்ததாக சோழர் கால கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

தைப்பூசத்தன்று தான் உலகம் தோன்றியதாக ஓர் வரலாற்று ஐதீகமும் உண்டு.முருகன் தமிழ்க்கடவுள் ஆவார்.முருகன் என்றால் அழகு என்று பொருள். முருகன் தேவசேனாதிபதி (தேவர்களின் சேனாதிபதி) ஆகையால் இவர் ஒரு போர்க்கடவுள் ஆவார். தைப்பூசத் தன்று முருகன் தரரகாசுரனை வதம் செய்த நிகழ்வு ஒரு விழாவாக பழனியில் அனுஷ்டிக்கப்படுகிறது.சிவ பெருமான்

உமாதேவியுடனிருந்து சிதம்பரத்தில் ஆனந்தத் திருநடனம் ஆடி, தரிசனம் அளித்த நாள் தைப்பூசம் என தில்லைவாழ் அந்தணர் புராணம் கூறுகின்றது.

சிதம்பரத்திற்கு வந்து அரும்பெரும் திருப்பணிகள் செய்து, தில்லை நடராஜரை இரண்யவர்மன் எனும் மன்னன் நேருக்கு நேராகத் தரிசித்ததும் ஓர் தைப்பூச நந்நாளிலே ஆகும். இக்காரணங்களுக்காகவே சிவன் கோயில்களில் தைப்பூசத் தன்று சிறப்பு அபிஷேகங்களுடன் பூஜைகள் நடத்தப்படுகின்றன. தேவர்களில் குருவாகிய பிரகஸ்பதியின் நட்சத்திரம் பூசம் என்பதால் தைப்பூசத்தன்று குருவழிபாடு செய்வது மிகுந்த பலனைத் தரும் என்பர்.

வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் ஒரு தை மாத வெள்ளிக்கிழமை பூச நட்சத்திரத்தன்று தான் ஒளியானார். இதனைக் குறிக்கும் விதமாக அவர் ஒளியான வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பத்தில், தைப் பூசத்தன்று இலட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண் டாடுகிறார்கள்.

தைப்பூசம் முருகனுக்குரிய சிறப்பு மிக்க தினமாக அறியப்படுவதால் முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். மேலும் காவடி எடுத்தல், மற்றும் பால் குட பவனி வருதல், தீச்சட்டி ஏந்தி வழிபாடு செய்தல், தலைமுடியிறக்குதல், சிறார்களுக்கு காது குத்துதல்,அங்கப் பிரதட்சணங்கள்,

தீமிதிப்பு, அலகு குத்துதல் போன்ற சிறப்பு நிகழ்வுகள் நடைபெறுவதும் வழக்கம்.

தமிழ் நாட்டில் இருக்கும் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளிலும் தைப்பூசம் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

இலங்கையில் தைப்பூசத்த்தன்று தான் யாழ் மக்கள் புதிர் எடுப்பர். அன்று அதிகாலையில் எழுந்து வீடு வாசலைச் சுத்தம் செய்து ஆண்கள் நெல்லறுக்கும் அரிவாள், தேங்காய், கற்பூரம், கத்தி, கடகம் என்பவற்றுடன் வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்து வருவர். அதனைக் குடும்பத்தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார்.

அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும்பாலுடன் கலந்து வாழைப்பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு சமைக்கப்படும்.

ஊரில் உள்ள முருகன் கோயில்களில் பால் குடம் எடுத்தும் காவடி எடுத்தும் தத்தம் நேர்த்திகளை நிறைவேற்றுவர்.

இலங்கையில் பல முருகன் ஆலயங்களில் தைப்பூசம் பெரும் விழாவாக சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்**
உபசெயலாளர்:
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
கம்பளை

# பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்றதன் பின்னர் இந்திய பொருளாதாரம் மிக வேகமாக வளர்ச்சி



## பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்டத்தை முன்வைத்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பெருமிதம்



இந்தியப் பொருளாதாரம் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறது. தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக அதிகரித்து ரூ.1.97 இலட்சமாக உயர்ந்துள்ளது. 9 ஆண்டுகளில், இந்தியப் பொருளாதாரம் உலகில் 10 ஆவது இடத்தில் இருந்து 5 ஆவது இடத்திற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தியாவின் சாதனைகளை உலகமே பாராட்டுவதால் தலைநிமிர்ந்து பட்ஜெட் தாக்கல் செய்கிறேன்.

இந்திய பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இவ்வாறு பெருமிதம் தெரிவித்தார்.

மீனவர்கள் நலன், மீன்பிடிப்பு துறை வளர்ச்சிக்கு ரூ.6,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் புதிதாக 50 விமான நிலையங்கள், ஹெலிகொப்டர் தளங்கள் அமைக்கப்படும். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த சுற்றுலாத் துறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். வருமான வரி உச்சவரம்பு ரூ.5 இலட்சத்தில் இருந்து ரூ.7 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகள் பாராட்டும் வகையில் இந்திய பொருளாதாரம் இருக்கிறது என்றும் இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை 2023_24 ஆம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

"சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டில் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உலக பொருளாதாரத்தில் ஒளிரும் நட்சத்திரமாக இந்தியா விளங்குகிறது. இந்தியப் பொருளாதாரம் ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கிச் செல்கிறது. விவசாயிகள், இளைஞர்கள், இதர பிற்படுத்தப்பட்டோர், பழங்குடிகள், பெண்கள் என அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற பட்ஜெட் இதுவாகும். அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற இந்தபட்ஜெட்டில் 7 முக்கிய அம்சங்கள் அடங்கியயுள்ளன. ஒருங்கிணைந்த வளர்ச்சி, கடைசி நிலை வரை வளர்ச்சி, கட்டமைப்பு மேம்பாடு, தேசத்தின் வளங்களை பயன்படுத்துதலுக்கு முக்கியத்துவம், பசுமை வளர்ச்சி, இளைஞர்களின் ஆற்றல், நிதித்துறை வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா பொருளாதாரம் சிறப்பாக இருப்பதை உலக நாடுகளே ஒப்புக்கொண்டுள்ளன. நடப்பாண்டில் இந்தியா 7 சதவீத பொருளாதார வளர்ச்சியை காணும். மற்ற நாடுகளை விட இது அதிகம். கடந்த பட்ஜெட்டுகள் அமைத்த அடித்தளத்தின் மீது கட்டப்படும் பட்ஜெட் ஆக இது அமையும். உலக நாடுகள் பாராட்டும் வகையில் இந்திய பொருளாதாரம் உள்ளது. உலகளாவிய சவால்கள் இருக்கும் இந்நேரத்தில், ஜி20 தலைமையை இந்தியா ஏற்றது, உலக பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்கை வலுப்படுத்த ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

கொரோனா காலத்தில் யாரும் பட்டினியில் இருக்க கூடாது என்பதற்காக திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 2023 ஜனவரி 1 முதல் மேலும் ஓராண்டுக்கு அந்தியோதயா திட்டத்தின் கீழ் உணவு தானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2014 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அரசு பதவியேற்ற பின் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரமும் உயர்ந்துள்ளது. நரேந்திர மோடி பதவியேற்ற பின் உலகின் 5வது பெரிய பொருளாதாரா நாடாக இந்தியா மாறியுள்ளது.

9 ஆண்டு கால பாஜக ஆட்சியில் இந்திய பொருளாதாரம் 10 ஆவது இடத்தில் இருந்து 5வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்த பின் 9 கோடி புதிய சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

102 கோடி மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 11.75 கோடி கழிவறைகள் கட்டப்பட்டுள்ளது. 11.4 கோடி விவசாயிகளுக்கு 2.2 இலட்சம் கோடிக்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சுற்றுலாவை மேம்படுத்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மீனவர்கள் நலன், மீன்பிடிப்பு துறை வளர்ச்சிக்கு ரூ.6,000 கோடி நிதி ஒதுக்கீடு. புதிதாக 157 நேர்சிங் கல்லூரிகள் அமைக்கப்படும். மருத்துவ கல்லூரிகளுக்கு அருகில் இந்த நர்சிங் கல்லூரிகள் அமைக்கப்படும்.

விவசாயத்தில் டிஜிட்டல் கட்டமைப்புகள் வகுக்கப்பட்டு வருகின்றன. குழந்தைகள், வளர் இளம் பருவத்தினருக்கு டிஜிட்டல் நூலகம் அமைக்கப்படும். குழந்தைகளுக்காக தேசிய டிஜிட்டல் நூலகம் ஏற்படுத்தப்படும். பழங்குடியினருக்கான ஏகலைவா பள்ளிகளில் 38,800 ஆசிரியர்கள் அடுத்த 3 ஆண்டுகளில் நியமிக்கப் படுவார்கள். கிராமப்புறங்களில் ஒரு லட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மனித கழிவுகளை மனிதனே அகற்றுவதை ஒழிக்க புதிய இயந்திரங்கள் வாங்கப்படும்.

சேமிப்பு கிடங்குகள் பரவலாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும். 2047 ஆம் ஆண்டிற்குள் இரத்த சோகை நோயை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கர்நாடகாவில் வரட்சி நிலவும் பகுதியில் மேற்கு பத்ரா திட்டத்தை செயல்படுத்த ரூ.5,300 கோடி நிதி ஒதுக்கீடு. பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்காக ரூ.79,000 கோடி நிதி ஒதுக்கீடு பழங்குடியினர் மேம்பாட்டிற்கு ரூ.15 ஆயிரம் கோடியில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

பெண்களுக்கு புதிய சேமிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.5 சதவீத வட்டியில் பெண்களுக்கு புதிய சிறு சேமிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. 2 ஆண்டுகள் அதிகபட்சமாக ரூ.2 லட்சம் வரை சேமிக்கலாம். அஞ்சலகத்தில் முதியோருக்கான வைப்பு நிதி வரம்பு ரூ.15 லட்சத்தில் இருந்து ரூ.30 லட்சமாக அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா மேம்பாட்டிற்காக 50 முக்கிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட உள்ளன

பல்வேறு மாநிலங்களில் 30 சர்வதேச திறன் இந்தியா மையங்கள் அமைக்கப்படும். 5ஜி சேவைகளுக்கான செயலிகளை உருவாக்க 100 ஆய்வகங்கள், பொறியியல் கல்வி நிறுவனங்களில் உருவாக்கப்படும். சுற்றுலாவை மேம்படுத்த யூனிட்டி மால்ஸ் என்ற பெயரில் வணிக வளாகங்கள் உருவாக்கப்படும். மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டத்திற்கான உச்சபட்ச வரம்பு ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

சிகரெட்டுகளுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும். புகையிலை பொருட்கள் மீதான வரி 16% வரை உயர்த்தப்படும். மின்சார வாகன பட்டரிகளில் பயன்படுத்தப்படும் லித்தியத்திற்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. ஆய்வகங்களில் உருவாக்கப்பட்ட வைரம் மீதான சுங்க வரி குறைக்கப்படுகிறது. தங்கம், வெள்ளி, வைரம், பித்தளை, சிகரெட் உள்ளிட்டவற்றின் இறக்கு மதி வரி அதிகரிக்கப்படுகிறது.

புதிய வரி நடைமுறையில் வருடத்திற்கு ரூ.7 இலட்சம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரி கிடையாது. வருமான வரி விலக்கிற்கான உச்ச வரம்பு ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்திய நிதியமைச்சர் தெரிவித்தார்.

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



# அயோத்தி இராமர் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்!

இந்தியாவின் உத்தர பிரதேஷில் உள்ள அயோத்தி இராமர் கோயிலுக்கு தொலைபேசியில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததை அடுத்து போலிசார் நகர் முழுவதும் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் இராமர் பிறந்த அயோத்தியில் பிரமாண்டமான கோயில் கட்டும் பணி தொடங்கி நடைபெற்று வருகின்றது.

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் இராமர் கோவிலின் கட்டுமானப் பணிகளில், 50 சதவீதம் நிறைவடைந்துள்ளன. அடுத்தாண்டு மகர சங்கராந்தியின் போது, கோயில் திறக்கப்பட்டு, வழிபாட்டுக்கு தயாராகி விடுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அயோத்தி இராமர் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது குறித்து ராமஜென்மபூமி பகுதி பொலிஸ் நிலைய அதிகாரி சஞ்சீவ்குமார்சிங் கூறுகையில்,

அயோத்தியில் வசிக்கும் ஒருவரது வீட்டிற்கு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. இராமர் கோயிலை வெடிகுண்டு வைத்துத் தகர்ப்போம் என ஒருவர் கூறியுள்ளார்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்து தீவிரமாக விசாரித்து வருகிறோம். மேலும் இந்த தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து அயோத்தி மற்றும் அதனைச் சுற்றியுள்ள முக்கிய பகுதிகளில் கூடுதல் பொலிசார் ரோந்துக்கு உத்தரவிட்டுள்ளோம் என்றார்.

அயோத்தியில் இராமர், சீதை சிலை வடிவமைக்க நேபாளத்தில் இருந்து பல ஆயிரம் கிலோ எடை கொண்ட 2 புனித கற்கள் நேற்று முன்தினம் வந்து சேர்ந்துள்ளன.

இதனை பக்தர்கள் பலரும் வணங்கிச் சென்றனர். இந்நிலையில் வந்துள்ள மிரட்டல் அயோத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.பொலிசார் கடுமையான கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



சென் மருத்துவமனையின் உரிமையாளரான பிரகாஷ் சதானந்தா இலங்கைக்கு 66,000 ரூபாய் பெறுமதியான மருந்துகளை நன்கொடையாக வழங்கினார். அவர், இந்தியாவிலுள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகர் Dr. D. வெங்கடேஷ்வரனைச் சந்தித்து, மருந்துகளை நன்கொடையாக வழங்கினார்.

# கிழக்கு லடாக் எல்லை ஓரமாக 135 கி.மீ. நீள பாதை

## இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது

இராணுவ ரீதியாகவும் எல்லைப் பாதுகாப்புக்கு மிக அவசியமானது மான 135 கி.மீ. நீள பாதை அமைப்பு பணிகளை இந்திய எல்லை பாதையமைப்பு நிறுவனம் முடுக்கி விட்டுள்ளது.

கடந்த மாதம் 26ம் திகதி ஆரம்பமான இப்பாதை அமைப்பு பணிகள் இரண்டு வருட காலத்தில், ஒரு கோடைக் காலப் பருவங்களில் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கிழக்கு லடாக் எல்லையோரமாக இராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பெங்கொங் டிசோவின் தெற்கு சூசுலுக்கும் கிழக்கு லடாக்கின் டெம்சொக்குக்கும் இடையில் இப்பாதை அமையவுள்ளது. இப்பாதை அமைப்பு முடிவடைந்ததும் இத்தார்சாலையில் கனரக ஆயுத வாகனங்களையும் ஆயுதங்களையும் விரைவாக நகர்த்த முடியம் என்பதோடு சுற்றுலா பயணிகளுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று லடாக் மலைப்பகுதி அபிவிருத்தி சபைத் தலைவர் டாஷி கயல்ட்சன் தகவல் தெரிவித்துள்ளார்.

இங்கே ஏற்கனவே கரடு முரடான பாதையும் சிந்து நதிக்கு குறுக்கே இரும்புப் பாலமும் உள்ளது. இப்பலத்துக்கு மாற்றாக கொங்கிறீட் பாலம் அமைக்கப்பட்டதும் பிரச்சினைக்குரிய கிழக்கு லடாக் எல்லையோரத்துக்கு விரைவாக படை வாகனங்களை நகர்த்தக் கூடியதாக இருக்கும் எனவும் இவர் கூறியுள்ளார்.



இலங்கையின் 75ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக இலங்கை வந்துள்ள வங்காளதேசத்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஏ.கே. அப்துல் மோமன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து உரையாடினார். இரு நாடுகளினதும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த வங்காளதேசத்தின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

# உலக பொருளாதார சக்தியாக மாறிவரும் நவீன இந்தியா

## எதிர்காலம் இந்தியாவுக்கும் வியட்நாமுக்கும் வாய்ப்பானது என ஆரூடம்

இப்பத்தாண்டு காலப்பகுதியில் உலக வர்த்தக விரிவாக்கத்தின் ஐந்தில் ஒரு பகுதியாக இந்தியாவின் பங்களிப்பு இருக்கும் என்றும் வருடாந்தம் 400 பில்லியன் டொலருக்கும் அதிகமான பொருளாதார அதிகரிப்பை வெளிப்படுத்தக் கூடிய முதல் மூன்று நாடுகளில் ஒன்றாக இந்திய விளங்கும் என்றும் பொருளாதார ஆருடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இருந்து ஜெர்மனிவரை பல நாடுகள் பொருளாதார அபிவிருத்தியில் மந்த நிலையை பேணி வருவதால் உலகளாவிய பொருளாதார உந்து சக்தியாக இருக்கக்கூடிய நாடுகளை வர்த்தகர்கள் தேடும் நிலையில் இந்தியாவும் வியட்நாமும் பயன்பெறவுள்ள நாடுகளாக விளங்கும் என இந்தியாவின் இன்போசைத் நிறுவனத்தின் ஸ்தாபகர் நந்தன் நிலக்கானி தெரிவித்துள்ளார். சீனாவில் மட்டும் முதலீடுகளை செய்து வந்த நிறுவனங்கள் மற்றுமொரு நாட்டையும் தேடத் தொடங்கியிருப்பது இந்தியாவுக்கு வாய்ப்பானது என இவர் மேலும் கூறியுள்ளார்.

இந்திய பொருளாதாரச் சூழல் ஆயிரக்கணக்கான புதிய தொழில்களை ஆரம்பிக்கவும் பல பில்லியன் ஸ்மார்ட் போன்களை குறைந்த செலவில் தயாரிப்பதற்கான இடமாகவும் விளங்குவதாகவும் குறிப்பிட்டுள்ள இவர், எப்பள் நிறுவனத்தின் மூன்று முக்கியமான பொருள் விநியோகத்தர்கள் இந்திய அரசின் சலுகைகளைப் பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எப்பள் நிறுவனத்தின் 12க்கும் மேற்பட்ட சீன பொருள் விநியோகத்தர்களும் புதுடில்லியின் வர்த்தக அனுமதியை பெற்றிருப்பதாகவும் இத் தகவல்கள் மேலும் குறிப்பிடுகின்றன.

இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளையும் சலுகைகளையும் மோடி அரசு மேற்கொண்டு வருவதோடு உலகின் அதிக சனத்தொகை கொண்ட நாடு என்ற வகையில் மனித சக்தியையும் முதலீடாக பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறது.

# 'சுத்தமானதும் பசுமையானதும் கிரான் நகரம்'

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பசுமையான இலங்கை எனும் தொனிப்பொருளின் கீழ் 'சுத்தமானதும் பசுமையானதும் கிரான் நகரம்' எனும் வேலைத்திட்டமானது முதல் நிகழ்வாக 03.02.2023 நேற்று வெள்ளிக்கிழமை கிரான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வலாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வு கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி தங்கராசா வித்தியனின் ஆலோசனையின் கீழ் பிரதேச சம்மேளன பொருளாளர் இ.கிசோக் பிரசன்னா தலைமையில் இடம் பெற்றது.

முதல் நாள் நிகழ்விற்காக கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் நவநீதன், கோறளைப்பற்று தெற்கு உதவி பிரதேச செயலாளர் ஞ.யோகராஜா மற்றும்

தேசிய இளைஞர் அதிகார சபை மட்டக்களப்பு மாவட்ட தகவல் நிலைய பொறுப்பதிகாரி யு.ஆ ஹனீபா, டில்மா நிறுவனத்தின் இணைப்பாளர் ஐ.னு நிதர்சன் சந்



திவெலி காவல் நிலைய அதிகாரி மற்றும் அரச ஊழியர்கள்

கிரான் வர்த்தக நிர்வாகர்கள், பொது மக்கள், இளஞர்கள் என பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் ஆலய வளாகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை சிரமதானம் செய்தனர். அத்துடன் ஆலய வீதி ஓரங்களில் மரங்களும் நடப்பட்டன.

இந்த வேலைத்திட்டமானது 03.02.2023 தொடக்கம் 09.02.2023 அன்று வரை நடைபெற உள்ளது. இத் திட்டத்தின் கீழ் மரநடுகை, பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றல்

சிரமதானம், நகரினை அலங்கரித்தல், வீதிகளுக்கு பெயர் பலகை இடல், வரவேற்பு பதாதைகள் இடல், போதை ஒழிப்பு வேலைத் திட்டங்கள் என பல இடம்பெற்றன.

நியோக்ராஜ் (நிசோன்)

# முதன் முதலாக இத்தாலி இலங்கை தூதரகத்தில் பொங்கல் விழா





இத்தாலியில உள்ள இலங்கைத் தூதரகம் முதன் முதலாக தைப்பொங்கல் விழா கொண்டாடியது. இத்தாலியில் உள்ள இலங்கை தூதரகத்தின் துணைத்தூதுவர் இ. கோகுலரங்கன் தலைமையில் இப்பொங்கல் விழா நடைபெற்றது.

# இந்திய – ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

## மார்ச்சில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பம்

இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் விரிவான ஒரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கான நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் மார்ச் மாதம் ஐரோப்பிய நகரமொன்றில் ஆரம்பமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு தரப்பினருக்கும் நன்மைகள் ஏற்படும் என்பதால் இந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காட்டப்படுவதாகவும் எனவே விரிவான, பல விஷயங்களை உள்ளடக்கியதாகவும் பல இலக்குகளை உடையதாகவும் இந்த உடன்படிக்கை அமையும் என இந்தியாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி எஸ்டூடோ ஏ.என்.ஐ. செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் பத்தாண்டு கால தாமதத்தின் பின்னர் கடந்த ஜூன் மாதம் புது டில்லியில் மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை ஆரம்பமானது. ஏற்கனவே 2021 இல் போர்த்துக்கல் போர்டோ உச்சி மாநாட்டில் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்வது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பேச்சுவார்த்கைகளின் போது முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வது பற்றிய பேச்சுகளும் உள்ளடக்கப்படும் என எஸ்டூடோ தகவல் தெரிவித்துள்ளார்.

ருஷ்ய – உக்ரைன் போர் உலகளாவிய ரீதியாக பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ள தருணத்தில் ஜி20 தலைமைத்துவத்தை இந்தியா ஏற்றிருப்பதாகவும் நல்ல பலன்களைத் தரக் கூடிய பல யோசனைகளை இந்திய தலைமைத்துவம் முன்வைத்திருப்பாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கவிக்கமல், பாசில், ரஜனி இணைந்து வழங்கும் "வீனஸ்", "அசஷரா" இசைக்குழுவினரின் இசை நிகழ்வு

IDM NATIONS CAMPUS INTERNATIONAL பிரதான அனுசரணையில் கவிக்கமல், பாசில், ரஜனி இணைந்து வழங்கும் "வீனஸ்" "அக்ஷரா" இசைக்குழுவினர்களின் இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும்" கலந்த "வசந்த கானங்கள்" 60வது இசைநிகழ்ச்சி எதிர்வரும் 12. 02. 2023 ஞாயிறன்று கொழும்பு 07 PUBLIC LIBRARY AUDITORIUM பி.ப. 5.00 மணிக்கு மிகக் கோலாகலமாக இடம் பெற உள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, தமிழ் எப் எம், மொஹபத் tv மற்றும் அக்ஷரா தமிழ் மீடியா ஊடக அனுசரணையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு கலாநிதி விநாயகமூரத்தி ஜனகன் (தலைவர் IDM Nations Campus international) தலைமைதாங்குவார்.

இதில் முன்னிலை அதிதியாக டாக்டர் எம்.ஏ.சி. மௌசூமும் பிரதம அதிதியாக கலாபூஷணம், கவியமுதன் இலங்கை பொன்மனச் செம்மல் எம்.எஸ் தாஜ்மஹானும், விஷேட அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவரும் கௌரவ விருந்தினராக கலாநிதி அதிவணபிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்ணான்டோவும் (சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவர்) கலந்து கொள்வார்கள்.

முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், (சிரேஷ்ட உப தலைவர், மலையக மக்கள் முன்னணி), சிரேஷ்ட ஊடகவியலாளர் கவிஞர்ஈஸ்வரலிங்கம், தமிழ் எப் எம் நிர்வாகி ஹோசியா அனோஜன், சமூக சேவையாளர் ஆனந்தகுமார், கந்தசாமி கருணாகரன் (தேசிய ஒற்றுமை ஒருமைப்பாட்டுக்கான செயலகம்), தொழிலதிபர் டாக்டர் பஹார்தீன், தொழிலதிபர் டாக்டர் ரமிஸ் மொஹம்மட், தேசமான்ய இஸ்மாயில், தேசமான்ய மௌசும் ஜிப்ரி, தொழிலதிபர் மொஹம்மட் சிராஜ், டாக்டர் கௌசலா தேவி கோவிந்தப் பிள்ளை, நகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ, சமூக சேவையாளர் உசைன் போல்ட், Touch Touch உரிமையாளர் நவராஜா, தொழிலதிபர் ரபீக், சமூக செயற்பாட்டாளர் ஏ.டீ முரளீஸ்வரன், சமூகசேவையாளர் சாஜஹான் color house மனித நேயன் இர்சாத் ஏ காதர், சமூக சேவையாளர் அஸீஸ் லக்கானா, கலைஞர் ஏ.ரவீந்திரன், கலைஞர் சண்மு, தொழிலதிபர் கலைஞர் ஓவியநாதன், குருசாமி புவனேஸ்வரன், குருசாமி தேசமான்ய பிச்சைக்கிருஷ்ணா, சமூக சேவையாளர் சிராஸ் யூனூஸ், சமூக சேவையாளர் இம்தியாஸ் காரியப்பர், கிரிக்கட் பயிற்றுவிப்பாளர் ஜே.எம். எம்.ரிஸ்வான், குருசாமி ஜே.வீரமூர்த்தி, தெகிவளை நகர சபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா, அஸீஸ் பவுண்டேசன் அதிபர் அஷ்ரப் அஸீஸ், தொழிலதிபர் மொஹம்மட் நிதார், கலைஞர் பொன் பத்மநாதன், கலைஞர் ராதா மேத்தா, கவிஞர் தனபாலன், சமூக சேவையாளர் அஹம்மட் ரியாஸ், இசையமைப்பாளர் பஸால் ஜின்னா, கலாபூஷணம் மொஹம்மட் அலி ஜே.பி, சமூகசேவையாளர் மொஹமட் ஹமீத் ஆகியோர் இதில் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்வார்கள். கவிஞர்கள், கலைஞர்கள், வர்த்தக பிரமுகர்கள் என ஏராளமானோர் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். தமிழ் எப் எம் நிகழ்ச்சி தொகுப்பு ஆர் அஜித்குமார்.

கட்டணமின்றி இலவசமாக நடைபெறும் இம்மாபெரும் இசை நிகழ்வில் ரசிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைக்கின்றனர்.




## கலைஞர் கலைக்கமலின் 57 ஆவது கீத்ராத் "FIVE IN ONE" மாபெரும் இசை நிகழ்ச்சி

நாடறிந்த ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக்கமலின் 57 ஆவது கீத்ராத் " FIVE IN ONE " மாபெரும் இசை நிகழ்ச்சி இம் மாதம் 26 ஆம் திகதி கொழும்பு 7 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் ஞாயிறு மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக "இலக்கியபுரவலர்" ஹாஸிம் உமர் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வில் முன்னிலை கலைப்புரவலர்" ஸைட் சிவாஜி மௌலானா, தேசமான்ய அக்கரைப்பற்று ஏ. பி. அப்துல் கையூம் தலைமை வகிக்கவுள்ளனர்.

